# புதிய ஜனநாயகம்

அக்டோபர் 2015
ரூ.10.00



## நீதிபதிகள் மன்னர்களும் அல்ல!

## வழக்கறிஞர்கள் அடிமைகளும் அல்ல!!

# நீதித்துறை ஊழலை வீதிக்கு இழுத்த மதுரை வழக்கறிஞர் போராட்டம்!





கடந்த ஒரு மாத காலமாக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் பேயறைந்தாற்போலக் காணப்படுகிறார்கள். ஊழல் நீதிபதிகளை அம்பலப்படுத்தி மதுரை வழக்கறிஞர்கள் நடத்திய பேரணிதான் . அவர்களை அறைந்திருக்கும் பேய்.

உயர் நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகளின் மீது ஊழல் புகார் இருந்தாலும், அல்லது கையும் களவுமாக சூட்கேசோடு ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி பிடிபட்டாலும் அவர் மீது வழக்குப் பதிவு செய்ய முடியாதபடி சட்டரீதியான ஒரு பாதுகாப்பு அரணை நீதிபதிகள் உருவாக்கி வைத்துக் கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாக நீதிபதிகளின் மீது ஆதாரங்களுடன் புகார் அளிக்கப்பட்டால்கூட, அவை விசாரணையே இல்லாமல் நீதிமன்றத்தில் உறங்குகின்றன. உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தத்துவுக்கு எதிராக முன்னாள் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு ஆதாரங்களுடன் கூறியிருக்கும் ஊழல் குற்றச்சாட்டும், நீதிபதி குமாரசாமி

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

ஈழப் போர்க்குற்ற விசாரணை:

# தோல்வியில் முடிந்த தமிழினவாதிகளின் உத்திகள்

தமிழீழ விடுதலைக்கான புலிகளின் ஆயுதப் போரைப் போலவே, ஈழ இறுதிப் போரில் நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்களுக்குக் காரணமான போர்க் குற்றவாளிகளைத் தண்டிப்பது, ஈழத்தின் திறந்தவெளியில் சிறைப்பட்டுக் கிடக்கும் அகதிகளை விடுவிப்பது, ஒரு பொதுவாக்கெடுப்பு மூலம் தமிழீழத்தைப் பெறுவது முதலானவற்றை அமெரிக்க வல்லரசின் தலைமையில் சர்வதேச சமூகத்தைக் கொண்டு சாதிப்பது என்ற இனவாதிகளின் உத்திகளும் சோகமான முடிவுகளை எட்டியிருக்கின்றன.

ஈழச் சிக்கலுக்குச் சர்வதேச சமூகம் மூலமான தீர்வுகளுக்குச் சாதகமாக அமெரிக்க வல்லரசின் நிலைப்பாடுகள் இருக்கும் என்று இனவாதிகள் கற்பிதம் கொண்டிருந்ததும் பொய்த்துப் போனது. சீனா - ராஜபக்சே கூட்டுக்கு எதிராக அரசியல் காய்களை நகர்த்தினால், சீன எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தால், அமெரிக்க வல்லரசு மட்டுமல்ல, இந்திய வட்டார வல்லரசுகூட ஈழச் சிக்கலில் தமக்குத் துணை நிற்கும் என்று உலகின் மாபெரும் அரசியல் சிந்தனையாளர் என்று தாம் போற்றிய பிரபாகரனைப் போலவே இனவாதிகள் நம்பினர். அவர்கள் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்குப் பாராட்டும் அவரது தூதருக்கு நன்றியும் செலுத்தினார்கள். ஆனால், இனவாதிகளின் உத்திகள் எல்லாம் வெறுங்கனவாய்ப் போயின.

இனப் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றவாளிகளைத் தண்டிப்பது போன்ற அமெரிக்க நாடகங்கள் எல்லாம் தனது விசுவாசிகளான சிறீ சேனா - ரணில் கும்பல் ஆட்சியைப் பிடிப்பது வரைதான் நீடித்திருந்தன. இப் போது ஈழத் தமிழினத்துக்கு எதிராக இலங்கையின் சிங்கள இனவெறி அரசே முன் மொழிந்தவாறு அமெரிக்க வல்லரசு கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா, சீனா உட்பட சர்வதேச சமூகம் முழுவதும் கைகோர்த்துக் கொண்டு, அக்டோபர் முதலன்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையத்தில் ஒருமனதாக நிறைவேற்றியுள்ளன.

முந்தைய தீர்மானங்களில் இடம் பெற்றிருந்த சர்வதேச நீதி விசாரணை கிடையாது; இனப் படுகொலைகள்,போர்க் குற்றங்கள் போன்ற சொற்களும் நீக்கப் பட்டு, விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசு இரண்டினதும் மனித உரிமை மீறல்களை இலங்கையின் சட்ட முறைமைகளுக்குட்பட்டு, அந்நாட்டு நீதி அதி காரிகளின் விசாரணையின் கீழ் நடத்தப்படும். அச்சமயம் இலங்கை அரசின், காமென்வெல்த் நாடுகள் போன்றவற்றின் நீதிபதிகள், சட்ட வழக்குரைஞர்கள் உடனிருப்பார்கள். ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தீர்மானத்தின் அமலாக்கம் பரிசீலிக்கப்படும். இவை தவிர, ஈழத்தின் திறந்தவெளிச் சிறைகளில்/ முகாம்களில் வதியும் அகதிகள் விடுதலை, இராணுவ வெளியேற்றம், பறிக் கப்பட்ட நிலங்கள் ஒப்படைப்பு மற்றும் அரசியல் உரிமைகள் ஆகியவை குறித்த பேச்சுக்கள் எதுவும் கிடையாது.

என்றாலும் அந்தத் தீர்மானத்தின் மீது நம்பிக்கை வைக்குமாறு ஆளும் தமிழ் தேசக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் தனித்தனியான முறையில் கூறிவருகிறார்கள். ஆனால்,அந்தத் தீர்மானத்தின் மீது வடக்கின் அதிகாரபூர்வ ஆட்சியாளர்களோ ஒப்புக்கு அதிருப்தியும் அவநம்பிக்கையும் தெரிவித்தாலும், மாற்றுத் தீர்வு எதையும் முன்வைக்கவில்லை.

அந்தத் தீர்மானத்தைத் தமிழகக் கட்சிகள் அனைத்தும் நிராகரித்து, அதற்கு எதிராக ஒட்டளிக்குமாறு இந்திய அரசைக் கோரி ஒருமனதாகச் சட்டப் பேரவை யில் தீர்மானம் நிறைவேற்றின. அதைக் கழிப்பறைக் காகித அளவுக்குக்கூட இந்திய அரசு மதிக்கவில்லை. கடனுக்குத் தீர்மானம் நிறைவேற்றியதோடு கண்டன அறிக்கை தவிர, வேறு எதையும் அக்கட்சிகள் செய்யவில்லை. தமிழக இனவாதக் குழுக்கள் சடங்குத்தனமான அடையாளப் போராட்டங்களுக்கு மேல் எதுவும் செய்ய தறியாது திகைத்து நிற்கின்றன. ஈழத் தமிழினம் ஆளும் சிங்கள இனவெறிக்கு எதிராகத் தமது இனவுரிமைக் கோரிக்கைகளோடு, இலங்கையின் உழைக்கும் மக்களோடு வர்க்கரீதியில் இணைந்து நீண்டகால நோக்கில் ஜனநாயகத்துக்காகப் புரட்சி வழியில் போராடுவதுதான் ஈழச் சிக்கலுக்குத் தீர்வாகும். ●


புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 30 இதழ்: 12

அக்டோபர் 2015

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

## டி.எஸ்.பி. விஷ்ணுப்பிரியா ‘தற்கொலை’:

# குற்றக் கும்பல்களின் காவலர்களாக போலீசு!

**குற்றவாளிகளைத் தண்டிக்கும் பொறுப்பில் உள்ள போலீசு, நீதிமன்றம் உள்ளிட்ட அனைத்து அரசுத்துறைகளும் ஆட்சியாளர்களும் குற்றவாளிகளின் காவலர்களாகச் செயல்படுகிறார்கள்.**

மனிதர்களின் கழுத்தைக் கடித்து இரத்தம் குடிக்கும் வக்கிர டிராகுலாவாகிய கிரிமினல் குற்றக் கும்பலின் நெருங்கிய கூட்டாளிதாம் போலீசார் என்பதற்கு கண் முன்பாக வெளிவந்திருக்கும் சான்றுகள்: கோகுல்ராஜ் மற்றும் விஷ்ணுப்பிரியா சாவுகள் குறித்த திருச்செங்கோடு வழக்குகள்; மேலூர், கீழவளவு - சின்னமலம்பட்டி கிராமத்தில் சட்ட ஆணையர் சகாயம் குழுவினர் தோண்டத் தோண்ட வரும் நரபலி செய்யப்பட்டவர்களின் பிணங்கள்-எலும்புக் கூடுகள். கோகுல்ராஜ்-அவருக்கு முன்பு இளவரசன், விஷ்ணுப்பிரியா-அவருக்கு முன்பு முத்துக்குமாரசாமி, கீழவளவு கிரானைட் கொள்ளைகளுக்கு நடுவில் நடந்த நரபலிக் கொலைகள் மட்டுமல்ல, மணற்கொள்ளைகளுக்கு இடையே நடக்கும் கொலைகள் - இவற்றுக்குக் காரணமான குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டிக்க வேண்டிய போலீசார் மட்டுமல்ல, நீதிமன்றங்களும் அநேகமாக அனைத்து அரசுத் துறைகளும் ஆட்சியாளர்களும் குற்றவாளிகளின் காவலர்களாகவும் கூட்டாளிகளாகவும் செயல்படுகிறார்கள்.

இத்தகைய போக்குகள் ஒட்டுமொத்த அரசுக் கட்டமைப்பும் நெருக்கடிகளில் சிக்கி, நிலைகுலைந்து, நாட்டுக்கும் மக்களுக்கும் எதிர்மறைச் சக்திகளாக மாறிப்போயுள்ளதையும் அது சமூகத்துக்கே மாபெரும் அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் விளங்குவதையும் காட்டுகின்றன. இந்த உண்மையை கோகுல்ராஜ், விஷ்ணுப்பிரியா சாவுகள் குறித்த திருச்செங்கோடு வழக்குகள் மற்றும் கிரானைட் கொள்ளை -நரபலிக் கொலைகள் துலக்கமாக வெளிப்படுத்தியிருக்கின்றன. இந்த விவகாரங்கள் தொடர்பான அன்றாட நிகழ்வுகளைப் பரபரப்பூட்டும் தகவல்களாகவும் கிசுகிசுக்களாகவும் வெளியிட்டு வியாபாரம் பார்ப்பதோடு ஊடகங்கள் பெரும்பாலும் நின்றுவிடுகின்றன. இந்த விவகாரங்கள் எல்லாம் நிலவும் அரசியல், சமூக சீரழிவின் வெளிப்பாடுகள்தாம். இவற்றுக்கான அடிப்படைகளை ஆழமாக ஆய்வு செய்து, தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் அரசியல், சமூக சிந்தனையாளர்கள்கூட ஈடுபடுவதில்லை.

‘‘பணி நெருக்கடி, குறிப்பாகப் பெண்களுக்கு எதிராக மேலதிகாரிகளின் நிர்ப்பந்தம், மன அழுத்தம் போன்றவை காரணமாக விஷ்ணுப்பிரியா தற்கொலை’’ நேர்ந்துவிட்டது என்ற மேலெழுந்தவாரியான ஆராய்ச்சிகளில் மக்கள் மூழ்கடிக்கப்படுகிறார்கள். இலஞ்ச-ஊழல், வசூல்வேட்டை, அதிகார முறைகேடுகள், சாதி ஆதிக்கம், இயற்கை வளக் கொள்ளை, இலாபவெறி முதலானவற்றை நோக்கமாகக் கொண்ட இறுக்கமான வலைப் பின்னலாக அரசுக் கட்டுமான அமைப்பு செயல்படுகிறது. அதனுடன் ஒத்துப்போக முடியாதவர்கள், குறிப்பாக அரசுப் பணிகள் மக்கள் சேவைக்கான உன்னதமானவை என்று உருவாக்கப்பட்டிருக்கும் பொய்த் தோற்றத்தை நம்பும் புதிய அலுவலர்கள் பலியாக்கப்படுகிறார்கள்.

‘விஷ்ணுப்பிரியா தற்கொலை’க்குக் காரணமானவர் என்று கை காட்டப்படுபவர் அவரது மேலதிகாரி நாமக்கல் எஸ்.பி.செந்தில் குமார். விஷ்ணுப்பிரியா மரணச்செய்தி எட்டிய உடனே இரவு ஏழு மணிக்குள் அவர் தூக்கில் தொங்கிய அறைக்குள் புகுந்த செந்தில் குமார் உள்ளேயிருந்தவர்கள் அனைவரையும் வெளியே விரட்டிவிட்டார். தற்கொலை செய்து கொண்டவரின், அதுவும் ஒரு உயர் போலீசு அதிகாரியின் உடலை மீட்கும் போது போலீசார் கட்டாயம் செய்திருக்க வேண்டிய கடமை - அதை வீடியோவாகப் பதிவு செய்திருக்க வேண்டும். அப்படிப் பதிவு செய்ய வந்த போலீசு வீடியோ பதிவாளரை அதெல்லாம் வேண்டாமென்று வெளியேற்றிவிட்டு, செய்தி ஊடகத்தாரையும் உள்ளே விடாமல் தடுத்துவிட்டார். தற்கொலை செய்து கொண்டவர் ஒரு உயர் அரசு அதிகாரி ஆதலால், முதலில் ஒரு ஆர்.டி.ஓ. அல்லது வட்டாட்சியர்

‘தற்கொலை’ செய்து கொண்ட போலீசு துணைக் கண்காணிப்பாளர் விஷ்ணுப் பிரியா.



வரவழைக்கப்பட்டிருக்க வேண்டும். இவை எதையும் செய்யாமல் அந்த அறைக்குள் தனக்கு விசுவாசமான ஒரு போலீசுக்காரரை மட்டும் வைத்துக்கொண்டு வேறு சில வேலைகளைச் செய்திருக்கிறார். தூக்கை அறுத்து சடலத்தைக் கீழேபோட்டு புகைப்படங்கள் எடுத்திருக்கிறார். விஷ்ணுப்பிரியா எழுதிய கடிதம், என அவரது செல்போன்கள், மடிக்கணினி, கேமரா முதலான வற்றைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார். கடிதத்தி லிருந்த தான் சம்பந்தப்பட்ட பக்கங்களை மறைத்திருக்கிறார். அதன் பிறகுதான், போலீசு டி.ஐ.ஜி., ஐ.ஜி. முதலானோர் வந்திருக்கிறார்கள். குற்றவாளிகளைத் தப்புவிக்கும் நோக்கில், அரசே, யாரும் கோராமலேயே தனக்கும் மிகவும் விசுவாசமானதும் செந்தில்குமாரின் நெருங்கிய சகாக்களைக் கொண்டதுமான சி.பி.சி.ஐ.டி விசார ணைக்கு உத்திரவிட்டது. சி.பி.சி.ஐ.டியோ, வழக்குக்கு அவசியமான ஆதாரங்களை எல்லாம் நீக்கிவிட்டு, சில நாட்களுக்குப் பிறகு நீதிமன்றத்தில் மேற்படிப் பொருட் களைத் தாக்கல் செய்துள்ளது.



சட்ட ஆணையர் சகாயத்திற்கு வந்த ''சோதனை''!: சின்ன மலம்பட்டி கிராமத்தில் நரபலியிடப்பட்டவர்கள் புதைக்கப்பட்ட இடத்தில் படுத்துறங்கும் சகாயம்.

சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு உத்திரவிட்ட கையோடு, அந்த மாவட்டத்தில் விஷ்ணுப் பிரியாவுக்கு உதவியாகப் பணியாற்றி வந்த ஏ.டி.எஸ்.பி. சேவியர் பிரான்சிஸ் பெஸ்கி உட்பட சில போலீசார் வேறு இடத்துக்குத் தூக் கியடிக்கப்பட்டிருக்கிறார்கள். போலீசுக்கேயுரிய கிரிமி னல் புத்தியோடு, குற்றவாளிகளைத் தப்புவிக்கும் நோக் கில் முக்கிய ஆதாரங்களை அழித்ததோடு, கைக்கூலி ஊடகங்களைக் கொண்டு பொய்யான வதந்திகள் பரப் பப்படுகின்றன. எல்லாக் கோணங்களிலும் புலனாய்வு செய்வதாகக் கூறிக்கொண்டு திசைதிருப்பும் வகையில் வழக்கு முடுக்கி விடப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் மீதே, குறிப்பாக, பெண்களானால் அவர்கள் மீதே பழி போட்டு, அவதூறுகளும் வதந்திகளும் பரப்பி, குணக் கேடு விளைவிக்கும் போலியான, கோமாளித்தனமான சாட்சியங்களை சோடிக்கும் வழக்கமான, போலீசு உத்தி களில் சி.பி.சி.ஐ.டி. போலீசு ஈடுபடுகிறது.

விஷ்ணுப்பிரியா விசாரித்து வந்த வழக்குகளில் முக்கி யமானது கோகுல்ராஜ் கொலை வழக்கு மட்டுமல்ல, குமாரபாளையம் தொழிலதிபர் ஜெகந்நாதன் கொலை வழக்கும் அடங்கும். அதில் இரண்டு ஆளும் கட்சி அமைச்சர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இந்த இரு கொலைகளையும் செய்தது தூத்துக்குடியைச் சேர்ந்த பாயாசம் எனப்படும் பேச்சிமுத்து தலைமையிலான கூலிக்கொலை கும்பல்தான். அக்கும்பல் விஷ்ணுப்பிரி யாவைக் கொல்லவும் முயன்றிருக்கிறது. ஜெகந்நாதன், கோகுல்ராஜ் கொலை வழக்குகளையும் விசாரிக்கும் பொறுப்பில் இருந்த விஷ்ணுப்பிரியாவை அவற்றுக்குக் காரணமான குற்றவாளிகளோடு, வேறுபிற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுவரும் குற்றவாளி களையும் நெருங்கவிடாமல் மேலதிகாரியான செந்தில் குமார் தடுத்து, நெருக்கடிகள் கொடுத்து வந்தார். இத்தகைய புகார்கள் நம்பத்தகுந்தனவாக இருந்தும் இவை மீது, இந்தக்கோணங்களில் இந்தக் கூலிக் கொலைக் கும்பலையும் சாதிவெறிக் கொலைக் கும் பலையும் பிடிப்பதிலோ, இவற்றின் கூட்டாளியான செந்தில்குமாரைத் தீர்க்கமாக விசாரிப்பதிலோ சி.பி.சிஐ.டி. போலீசு பாரிய அக்கறை காட்டவோ இல்லை.

செந்தில்குமாருக்கு மாமியார் வீட்டு மரியாதை களுடன் உபசரிப்புகள் காட்டிய அதே சமயம், 'விஷ்ணுப் பிரியா தற்கொலை'க்கு காரணம் காதல் விவகாரங்கள் தாம் என்பதற்கான ஆதாரங்களை சோடிப்பதிலே சி.பி.சிஐ.டி. போலீசு முனைப்புக் காட்டுவது அனை வரும் அறிந்த பகிரங்கமான உண்மை. 'விஷ்ணுப்பிரியா வின் காதலர்கள்' என்று சித்தரிக்கப்படுபவர்கள், போலீசு மிரட்டலுக்குப் பயந்து தலைமறைவாக இருக்கும் சிவ கங்கை கோயில் குருக்கள் விஜயராகவன், மதுரை வழக் கறிஞர் மாளவியா. விஷ்ணுப்பிரியா இவ்விருவரிடம் தொலைபேசியில் அடிக்கடி பேசினார் என்பது போலீசு கூறும் ஆதாரம். (இப்படித்தான் கர்நாடகாவில் அதிகாரி ரவி மரண வழக்கில் போலீசு இட்டுக்கட்டிய புளுகு மூட்டை அம்பலப்பட்டுப் போனது.) செந்தில்குமார் மீது புகார்கூறிய மாளவியா, கீழக்கரை டி.எஸ்.பி. மகேஸ்வரி ஆகியோரிடமிருந்து விசாரணை என்ற பெயரில் பொய் யான வாக்கு மூலங்களைப் பெறவும் ஆதாரங்களைப் பறித்துக் கொள்ளவும்தான் போலீசு எத்தணித்தது. ஜெயா -சசி சொத்துக் குவிப்பு வழக்கில் பிறழ் சாட்சியம் முதல் பவானி சிங் நியமனம் ஈறாக ஜெயாவின் பொறுப் பிலுள்ள சி.பி.சி.ஐ.டி. போலீசு செய்த தில்லுமுல்லுகள் எல்லோரும் அறிந்ததே. அதனால்தான் தனக்கு முக்கிய மான வழக்குகளை, தமக்கு விசுவாசமான சி.பி.சி.ஐ.டி. போலீசிடம் ஜெயா-சசி கும்பல் ஒப்படைக்கிறது. அதே போன்று அக்கும்பலுக்கு விசுவாசமான சாதியின் வாக்கு வங்கியையும் அதன் பிரதிநிதிகளான தனது இரு அமைச் சர்களையும், அக்ரி கிருஷ்ணமூர்த்தியைப் போலத் தனக்காக வசூல் வேட்டைகளை நடத்தும் எஸ்.பி. செந் தில்குமாரையும் காப்பதற்காகவே சி.பி.சி.ஐ.டி.யிடம் இந்த வழக்குகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இந்த விசாரணை மூலம் நீதி கிடைக்கும் என்று அரசியல் முட்டாள்கள்தாம் நம்புவார்கள்.

● ஆர்.கே.

# வழக்கறிஞர்களுக்கு எதிரான அடக்குமுறை:

# நடந்தது என்ன?

தமிழக வழக்கறிஞர்களுக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றம் ஒரு போர் தொடுத்திருக்கிறது. தங்களது ஊழல் முறைகேடுகளைக் கேள்விக்குள்ளாக்கும் வழக்கறிஞர்களைக் களையெடுப்பதன் வாயிலாக கேள்விக்கிடமற்ற சர்வாதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதே நீதிபதிகளின் நோக்கம்.

நீதித்துறைக்கு எதிராகப் பேசுவதற்கு ஓட்டுக்கட்சிகள் தயங்குகின்றன. பார்ப்பன ஊடகங்களோ பக்க வாத்தியம் வாசிக்கின்றன. வழக்கறிஞர்களுக்கு எதிராக சதித்தனமாக எப்படிக் காய் நகர்த்தப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள கடந்த சில நாட்களில் என்ன நடந்திருக்கிறது என்பதைப் அறிந்து கொள்வது அவசியம். எனவே, நாள் வாரியாக அந்த விவரங்களைக் கீழே தொகுத்துத் தருகிறோம்.

•••

ஜூலை-1 ஆம் தேதி முதல் பெண்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டுமென்றும், தவறுவோரின் உரிமம் மட்டுமின்றி வாகனத்தையும் பறிமுதல் செய்ய வேண்டுமென்றும் உயர்நீதிமன்ற நீதிபதி கிருபாகரன் உத்தரவிட்டார். இது சட்ட விரோதமான தீர்ப்பு என்று விமரிசித்து போராடிய மதுரை மாவட்ட வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர், செயலர் மீது நீதிமன்றத்தை அவமதித்ததாக உயர்நீதிமன்றம் நோட்டீசு அனுப்பியது. இதற்கெதிராக மதுரை வழக்கறிஞர்கள் நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தினர்

**24.8.2015** - சுமுகமாக பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று தலைமை நீதிபதி கூறியதை நம்பி சென்னை வந்த இருவரையும் நீதிபதிகள் அவமானப்படுத்தினர். வழக்கை விசாரிக்கப்போவதாகவும் சமரச தீர்வு கிடையாது என்றும் கூறினர்.

**10.09.2015** - அன்று சுமார் 1500 க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் மதுரையில் நீதித்துறை ஊழலுக்கு எதிராகப் பேரணி நடத்தி, ஊழல் நீதிபதிகளின் பட்டியலை வெளியிட்டனர்.

**14.09.2015** - தமிழை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக்கக் கோரி தலைமை நீதிபதியின் கோர்ட்டில் வழக்கறிஞர்களும் சட்டக் கல்லூரி மாணவர்களுமாக 12 பேர், வாயில் கருப்புத் துணி கட்டிக் கொண்டு போராட்டம் நடத்தினர். அன்று மாலை கைது செய்து சிறை வைக்கப்பட்டனர்.

**14.09.2015** - இந்தப் போராட்டத்தைக் காரணம் காட்டி தலைமை நீதிபதி கவுல் தானே முன்வந்து ஒரு ரிட் மனுவை எடுத்துக் கொண்டார். ஒரு போலீசு உதவி ஆணையர் வழக்கறிஞர்களுக்கு எதிராகத் தெரிவித்த, சில புகார்களை அதில் தொகுத்திருந்தார்.

நீதிபதிகள் தைரியமாக நீதி வழங்க முடியாத சூழல் நீதிமன்றத்தில் நிலவுவதாகவும், எனவே நீதிபதிகளைப் பாதுகாப்பதற்கு, மத்திய தொழில்படை வர வேண்டும்'' என்றும் கூறி மத்திய, மாநில அரசுகளுக்கு நோட்டீசு அனுப்பினார்.

**15.09.2015** - ''16-ஆம் தேதியன்று நடைபெறவுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணை திரைமறைவில்தான் நடத்தப்படும் என்றுநீதிபதிகள் அறிவிக்கவே, இதற்கு வழக்கறிஞர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்தது.

**15.09.2015** - திரை மறைவு விசாரணை ரத்து என்ற முடிவு இரவு 11 மணிக்கு வெளியிடப்படுகிறது. இருப்பினும் பாதுகாப்புக்கு போலீசு குவிக்கப்பட வேண்டும் என்றும் அறிவிப்பு வெளியாகிறது.

**16.09.2015** - காலை 10.00 மணிக்கு மதுரை வழக்கறிஞர்கள் சென்னை உயர்நீதிமன்ற வாயிலில் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். ஊழல் நீதிபதிகள் மீது நடவடிக்கை கோரி கவர்னரிடம் மனு கொடுக்கின்றனர்.

**16.09.2015** - அன்று மதியம் போலீசு படை வழக்கறிஞர்களைத் தடுக்கிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மூத்த வழக்கறிஞர் என்.ஜி.ஆர் பிரசாத், சங்கரசுப்பு ஆகியோர் விசாரணையைப் புறக்கணிக்கின்றனர். போலீசுதடையை எதிர்த்து சென்னை வழக்கறிஞர்களின் போராட்டம்.

ஹெல்மெட் அணிவதைக் கட்டாயமாக்கி அளித்த தீர்ப்பில் போலீசின் வசூல் வேட்டைக்குச் சாதகமாக உத்தரவுகளை அளித்த நீதிபதி கிருபாகரன்.



**16.09.2015** - திரு ஏ.கே.ராமசாமியிடம் விசாரணை துவங்கியவுடன், ஏற்கெனவே நீதிபதிகளால் உள்ளே அழைத்து வரப்பட்டிருந்த வழக்கறிஞர்களான அணுகுண்டு ஆறுமுகம், பொன்னுச்சாமி ஆகியோர் மதுரை ஊழல் எதிர்ப்புப் பேரணி நீதிபதிகளை அவமதித்ததாக புகைப்படங்களைக் காட்டினர். உடனே நீதிபதிகள் ஹெல்மெட் வழக்கை விட்டு விட்டு, இதனை விசாரிக்கத் தொடங்குகின்றனர். இதனை ஏ.கே.ராமசாமி ஆட்சேபிக்

கிறார். சிறைக்கு அனுப்ப வேண்டி வரும் என்று நீதிபதிகள் அவரை மிரட்டு கின்றனர்.



நீதிபதி கிருபாகரனின் தீர்ப்பு சட்டவிரோதமானது என்ற உண்மையை எடுத்துக்கூறியதால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கைச் சந்தித்து வரும் மதுரை மாவட்ட வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் பி.தர்மராஜ் (இடது) மற்றும் செயலர் ஏ.கே.ராமசாமி.

**17.09.2015** - ஊட கங்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞர்கள் கலகம் செய்ததாகச் சித்தரிக் கின்றன. ஊழல் நீதிபதிகள் மீது விசாரணை கோரி ஆளு நரிடம் தரப்பட்ட மனு தொடர்பான செய்தியை இருட்டடிப்பு செய்கின்றன.

**18.09.2015** - எந்தெந்த மதுரை வழக்கறிஞர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பட்டியலுடன் இரு நீதிபதிகள் மதுரையிலிருந்து சென்னை சென்று தலைமை நீதிபதியைச் சந்திக்கின்றனர்.

**18.09.2015** - ‘‘போராடிய வழக்கறிஞர்களை உடனே நீக்கு, மத்திய போலீசு படையை உடனே அனுப்பு’’ என்று ‘‘தமிழ்நாடு வழக்கறிஞர் சங்கம்’’ என்ற புரோக்கர் சங்கத் தலைவர் பிரபாகரன் கடிதம் அனுப்பு கிறார்.

**21.09.2015** - சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு இடையிலான மோதல் தொடர்பான வழக்கை விசாரிக்க எடுத்துக் கொண்ட தலைமை நீதிபதி தத்து, போராடும் வழக்கறிஞர்களை அவதூறு செய்தது மட்டுமின்றி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பார் கவுன் சிலைத் தூண்டுகிறார்.

**21.09.2015** - வழக்கறிஞர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அகில இந்திய பார் கவுன்சில் தமிழக பார் கவுன்சிலுக்குக் கடிதம் எழுதுகிறது.

**21.09.2015** - அடுத்த சில மணி நேரத்தில் நட வடிக்கை எடுக்க வேண்டிய வழக்கறிஞர்கள் பட்டி யலைத் தமிழக பார் கவுன்சிலும் உயர்நீதிமன்றமும் அனைத்திந்திய பார் கவுன் சிலுக்கு அனுப்புகின்றன.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கை உள்நோக்கத்தோடும் வன்மத்தோடும் நடத்திவரும் நீதிபதிகள் சி.டி.செல்வம் மற்றும் தமிழ்வாணன்.



**22.09.2015** - தமிழக பார் கவுன்சிலின் அதிகாரத்தை நிரா கரிக்கும் வகையில் 14 மதுரை வழக்கறிஞர்களை விசாரணை இல்லாமல் நேரடியாகவே இடைநீக்கம் செய்துவிட்டு, விசாரணை கர்நாடகத்தில் நடைபெறும் என்று அறிவிக் கிறது அனைத்திந்திய பார் கவுன்சில்.

**23.09.2015** - மதுரை வழக் கறிஞர் சங்கத்தைக் காலி செய்யுமாறு சென்னை உயர்நீதி மன்றப் பதிவாளர் உத்தரவிடு கிறார்.

**24.09.2015** - தமிழ்நாடு பார் கவுன்சில் அவசரக் கூட்டம் நடைபெறுகிறது. ‘‘நீதித் துறையையோ, போலீசையோ எந்த ஒரு வழக் கறிஞரும் விமரிசித்துக் கூட்டம் நடத்தக்கூடாது, துண்டறிக்கை வெளியிடக் கூடாது. மீறினால் கடும் நட வடிக்கை எடுக்கப்படும்’’ என்று பார் கவுன்சில் தலைவர் செல்வம் அறிவிக் கிறார்.

**25.09.2015** - வழக்கு விசாரணையின் போது வழக் கறிஞர் ஆஜராகத் தவறினால், விசாரணை நீதிமன்ற மானது வக்கீல் குறித்த புகாரை நேரடியாக அனைத் திந்திய பார் கவுன்சிலுக்கு அனுப்ப வேண்டும் என்று நீதிபதி வைத்தியநாதன் உத்தரவிடுகிறார்.

**25.09.2015** - ‘‘தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நீதி மன்றங்களிலும் வளாகத்திற்கு உள்ளேயோ வெளியேயோ கூட்டங்கள், ஆர்ப்பாட்டம் நடத்தக் கூடாது. சுவரொட்டி, துண்டறிக்கை, பானர் உள்ளிட்ட எல்லா விதமான நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்கப் படுகிறது’’ என்ற சட்ட விரோதமான பாசிச அறிவிப்பை உயர்நீதிமன்றம் வெளியிடுகிறது.

**28.09.2015** - திருச்சி வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட, 1000 வழக்கறிஞர்கள் கலந்து கொண்ட அவசரக் கூட்டம் நடந்தது. சில வழக் கறிஞர்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்காக வழக்கறிஞர் சங்கத்தை இழுத்து மூட உத்தரவிடலாமெனில், நீதிபதிகள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் பல நிலுவையில் உள்ளதால் நீதிமன்றங்களையும் இழுத்து மூட வேண்டியிருக்கும் என்றும் நீதிபதிகளுக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்கும் சட்டங் கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியது.

**30.09.2015** - இந்தியாவிலேயே முதன் முறையாக நீதிமன்றத்திற்கு வெளியே அகலத்திரையை வைத்து நீதிமன்ற அவ மதிப்பு விசாரணை ஒளிபரப் பானது. அவமதிப்பு வழக்கை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்ற தலைமை நீதிபதிக்கு அனுப் பப்பட்டது. •

# நீதிபதிகள் மன்னர்களும் அல்ல! வழக்கறிஞர்கள் அடிமைகளும் அல்ல!!

**ஊழலும், பார்ப்பன பாசிசமும் கைகோர்த்து நிற்கும் இந்திய நீதித்துறை, வழக்கறிஞர்களுக்கு மட்டுமல்ல, சமூகத்திற்கே எதிரியாகப் பரிணமித்து நிற்கிறது.**

மதுரை வழக்கறிஞர்கள் 14 பேர் தற்காலிக நீக்கம், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் வழக்கறிஞர்களை இழிவுபடுத்தும் நோக்கத்துடன் விசாரணையின் நேரடி ஒளிபரப்பு, மதுரை மாவட்ட வழக்கறிஞர்களைச் சங்க கட்டிடத்திலிருந்து வெளியேற்றும் உத்தரவு, 2000 தமிழக வழக்கறிஞர்களை வெளியேற்றுவேன் என்று அனைத்திந்திய பார் கவுன்சில் தலைவர் மனன் குமார் மிஸ்ராவின் மிரட்டல் - நீதித்துறை அபாயகரமான வேகத்தில் பாசிசமயமாகி வருவதையே இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன.

அடக்குமுறைகளுக்கு எதிராகக் கருத்து தெரிவிக்கும் உரிமையும் வழக்கறிஞர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் நீதிமன்ற வளாகத்திற்கு உள்ளேயோ வெளியேயோ, துண்டறிக்கை, சுவரொட்டி, பேனர், ஆர்ப்பாட்டம் - ஊர்வலம், கூட்டங்கள் எதுவும் கூடாது என்று தடையாணை பிறப்பித்திருக்கிறார் சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளர்.

‘‘மதுரை உயர்நீதி மன்றக் கிளையை கொஞ்சகாலத்துக்கு மூடிவிட்டால் என்ன’’ என்ற கருத்தையும் போகிறபோக்கில் வெளியிட்டிருக்கிறார் ஒரு நீதிபதி. போராடும் தொழிலாளிகளைப் பட்டினி போட்டுக் கொல்ல, ஆலையைக் கதவடைப்பு செய்கின்ற ஒரு முதலாளியைப் போல, நீதிமன்றத்தைத் தங்கள் பூர்வீகச் சொத்தாகவும், வழக்கறிஞர்களை அங்கே கூலிக்கு அமர்த்தப் பட்டிருக்கும் அடிமைகளாகவும் கருதுகிறார்கள் நீதிபதிகள்.

ஒரு விதத்தில் முதலாளிகள், நீதிபதிகளைக் காட்டிலும் ஜனநாயகவாதிகளாகத் தெரிகிறார்கள். வேலை நிறுத்தம் செய்யும் காலங்களில் கூட தொழிற்சங்கக் கட்டிடத்தைக் காலி செய்ய வேண்டும் என்றோ, துண்டறிக்கை விநியோகிக்கக் கூடாது என்றோ தொழிலாளிகளுக்கு அவர்கள் உத்தரவு பிறப்பித்து விடுவதில்லை. இந்த நீதி ‘அரசர்’ களிடமிருந்து மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காப்பாற்றுவது எப்படி என்பதுதான் நம் முன் உள்ள கேள்வி.

•••

‘‘இது நீதிபதிகளுக்கும் வழக்கறிஞர் சமூகத்துக்கும் இடையிலான பிரச்சினை அல்ல என்றும் ஒரு சில வழக்கறிஞர்கள்தான் பிரச்சினைக்கு உரியவர்கள்’’ என்றும் ஒருபுறம் சொல்லிக் கொண்டே, இன்னொருபுறம் அனைவரையும் அச்சுறுத்துகிறார்கள் நீதிபதிகள். உயர்நீதி மன்றம் முதல் கீழமை நீதிமன்றங்கள் வரையில் தமிழகத்தின் வழக்கறிஞர்கள் அனைவரையும் தாங்கள் நீதிபதிகளின் அடிமைகள்தான் என்று ஒப்புக்கொண்டு மண்டியிடவைக்க வேண்டும் என்பதே இவர்களின் நோக்கம் என்பது தெளிவாகி விட்டது.

வயதில் மூத்த வழக்கறிஞர்களிடம் நேற்று வரை மரியாதையாகப் பேசிக்கொண்டிருந்த இளம் மாஜிஸ்டிரேட்டுகளிடம் திடீரென்று ஒரு திமிர்த்தனம் துளிர்த்திருப்பதாகக் கூறுகிறார்கள் வழக்கறிஞர்கள். இந்தத் திமிரை இப்போதே ஒடுக்காவிட்டால், சட்டம் - நெறிமுறை அனைத்தையும் மூட்டை கட்டிவிட்டு நடுவர்களெல்லாம் நாட்டாமைகளாகி விடுவார்கள். வழக்கறிஞர்களைச் சொம்பு தூக்க வைத்துவிடுவார்கள்.

வழக்கறிஞர்கள் பி.தர்மராஜ், ஏ.கே.ராமசாமிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் நடந்துவரும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்த்து வழக்கறிஞர்கள் சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.



நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணையே அப்படித்தான் நடந்திருக்கிறது. கட்டாய ஹெல்மெட் தீர்ப்புக்கு எதிரான தீர்மானத்துக்கு எதிராகத்தான் அவ மதிப்பு வழக்கு. ஆனால், ஏ.கே.ராமசாமியிடம் கேட்கப் பட்ட கேள்விகளோ ஊழல் எதிர்ப்புப் பேரணி பற்றியவை. பண்ணையார்கள் விவசாயிகளை நடத்து வதைப் போல அந்த முதியவரை ஒன்றரை மணி நேரம் நிற்க வைத்தே கேள்வி கேட்டிருக்கிறார்கள். திரை மறைவு விசாரணை என்று ஒருநாள் உத்தரவு போடு கிறார்கள். அடுத்த வாய்தாவில் விசாரணையைத் திரையில் ஒளிபரப்புகிறார்கள். நீதிபதி வைத்ததுதான் சட்டம். நெறிகளுக்கும் மரபுகளுக்கும் மரத்தடி பஞ்சா யத்தில் இருக்கும் மதிப்பு கூட உயர்நீதி மன்றத்தில் இல்லை என்பது கடந்த சில நாட்களில் தெளிவாகிவிட்டது.

‘சட்டத்தின் ஆட்சி’யைச் சமாதிக்கு அனுப்புவதில் நீதியரசர்கள் காட்டி வரும் இந்த அசாதாரணமான வேகத்துக்கு முக்கியக் காரணம் மதுரை வழக்கறிஞர்களின் ஊழல் எதிர்ப்புப் பேரணி. எத்தனை பெரிய ஊழல் செய்தாலும் தங்களைப் பதவியிலிருந்து இறக்க இம்பீச்மென்ட் தீர்மானத்தை தவிர வேறுவழி கிடையாது என்று இறுமாந்திருந்த நீதியரசர்களை இந்தப் பேரணி அச்சுறுத்தி யிருக்கிறது.

நீதித்துறையில் ஊழல் என்பது இதுவரை கேள்விப்படாத குற்றச்சாட்டு அல்ல. இதைப் பல உச்சநீதிமன்ற, உயர்நீதி மன்ற நீதிபதிகளே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஊழல் நீதிபதி களின் சதவீதம் ஐம்பதா, அறுபதா என்று தீர்மானிப்பதில் தான் இவர்களிடையே வேறுபாடு. ‘‘கூடியிருக்கும் பெண்களில் பாதிப்பேர் நடத்தை கெட்டவர்கள்’’ என்று யாரேனும் பேசினால், ‘‘பொதுவாகச் சேறடிக்காதே, குறிப்பாகச் சொல்’’ என்று கூறி, சொன்னவனை அந்த இடத்திலேயே செருப்பால் அடிப்பார்கள் பெண்கள். உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதியரசர்கள் மிகவும் நல்ல வர்கள். அவர்கள் இதுநாள்வரை அப்படியெல்லாம் கோபப்பட்டதே இல்லை. மதுரைப் பேரணி குறிப்பான உயர்நீதி மன்ற, மாவட்ட நீதிபதிகளின் பெயர்களை வெளியிட்டதாலும், அடுத்தடுத்து வெளியிடப் போவதாக அறிவித்ததாலும்தான் இது நீதிபதிகள் சமூகத்தின் மானப் பிரச்சினையாகி விட்டது.

ஊழலை மட்டுமல்ல, ஒரு நீதிபதியின் கார்ப்பரேட் சார்பு அல்லது சாதி-மதச்சார்பு தீர்ப்புகளையும் கேள்விக் குள்ளாக்க முடியும் என்ற நிலை உருவாவது நீதிக்கு நல்ல தாக இருக்கலாம். நீதிபதிகளுக்கும் ஆளும் வர்க்கத் துக்கும் நல்லதல்லவே! அதனால்தான் எல்லாத் துறை களையும் சேர்ந்த ஆளும் வர்க்கப் பூசாரிகளும் கொதிப் படைந்து விட்டனர்.

கருவறையின் புனிதம் சந்தேகத்துக்குள்ளாவது குறித்து அதிகம் கவலைப்படுபவர் தேவநாத குருக்களா கத்தானே இருக்க முடியும்! சென்னை உயர் நீதிமன்றத் தின் புனிதப் பாரம்பரியம் குறித்து பொளந்து கட்டினார் தலைமை நீதிபதி தத்து. நீதிபதி கர்ணனுக்கு எதிராகச் சென்னை உயர்நீதி மன்றம் உச்சநீதிமன்றத்தில் தொடுத் திருக்கும் வழக்கில், (அது நீதிபதிகள் சிலருக்கிடை யிலான ஊழல், உள்குத்து தொடர்பான வழக்கு) சம் பந்தமே இல்லாமல் தமிழக வழக்கறிஞர்களுக்கு எதிராகச் சாமியாடினார். சொல்லி வைத்தாற்போல தமிழக வழக்கறிஞர்கள் தரம் கெட்டுப் போனதைப் பற்றி ஊடகங்கள் விவாதிக்கத் தொடங்கிவிட்டன.

தமிழக வழக்கறிஞர்கள் மீதான இந்த ‘அனைத்திந்திய வன்மத்துக்கு’ மதுரை ஊழல் எதிர்ப்புப் பேரணி மட்டுமே காரணம் அல்ல. தமிழக வழக்கறிஞர்கள் சமூக அரசி யல் பிரச்சினைகளுக்காகப் போராடுவதில் இந்தியா



நீதித்துறை ஊழலையும், அதன் சர்வாதிகாரப் போக்கையும் கண்டித்து திருச்சி வழக்குரைஞர்கள் சங்கத்தின் சார்பில் திருச்சியில் நடத்தப்பட்ட கூட்டம்.

விலேயே முன்னணியில் இருப்பவர்கள். காவிரி, முல்லைப்பெரியாறு, ஈழம், மூவர் தூக்கு, இந்தி-சமஸ் கிருதத் திணிப்பு எதிர்ப்பு, சாதி-மதவெறி எதிர்ப்பு போராட்டங்கள் மட்டுமின்றி, நீதித்துறை சார்ந்த பிரச் சினைகளான உரிமையியல் சட்டத்திருத்தம், குற்றவியல் நடைமுறைச்சட்டத் திருத்தத்துக்கு எதிரான போராட்டங் களிலும் இந்தியாவிலேயே முன்னணிப் பாத்திரம் ஆற்றி யவர்கள். ஊழல் நீதிபதி சுபாஷண் ரெட்டியை தமது போராட்டத்தின் மூலம் விரட்டியவர்களும், ஜெ. வழக்கு தொடர்பாகத் தலைமை நீதிபதி தத்துவின் மீது குடியர சுத்தலைவரிடம் வெளிப்படையாகக் கையெழுத்திட்டு (800 பேர்) புகார் கொடுத்தவர்களும் தமிழக வழக் கறிஞர்கள்தான்.

தமிழக வழக்கறிஞர்களை எதிர்ப்பவர்கள் பல வகை யினர். வழக்கறிஞர்கள் அரசியல்-சமூக விவகாரங்களில் தலையிடுவதை இழிவானதாகக் கருதும் பிழைப்பு வாதிகள், இந்தி பேச மறுக்கின்ற தமிழ்நாட்டை இன் னொரு காஷ்மீராகக் கருதும் வட இந்தியர்கள், சுயமரி யாதை, திராவிட இயக்கம், பொதுவுடைமை போன்ற சொற்களைக் கேட்டாலே ஒவ்வாமைக்கு ஆட்படும் பார்ப்பனியர்கள், பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட சாதி யினர் கோர்ட்டுக்குள் நுழைந்ததனால் வக்கீல் தொழிலுக் குரிய மாண்பே கெட்டுவிட்டதாகப் புழுங்கும் இட ஒதுக் கீட்டு எதிர்ப்பாளர்கள், எந்த விவரமும் தெரியாமல்





காவிரி மற்றும் முல்லைப்பெரியாறு பிரச்சினைகளில் தமிழகம் வஞ்சிக்கப்படுவதைக் கண்டித்து
வழக்குரைஞர்கள் சங்கத்தின் சார்பில் தஞ்சையிலும் (இடது) சேலத்திலும் நடந்த ஆர்ப்பாட்டங்கள். (கோப்புப் படங்கள்)

போராட்டமே தப்பு என்று பேசும் கலாம் ரசிகர்கள், இத்தனை நஞ்சுகளுக்கும் தேன் சேர்த்து மக்களின் நாக்கில் தடவும் ஊடகவியலாளர்கள் - என இந்தப் பொதுக் கருத்தைப் பல கைகளும் வனைந்து உருவாக்குகின்றன.

''யாகுப் மேமன் தூக்கிலிடப்படாமல் தடுக்க நள்ளிரவில்கூட நாங்கள் உச்ச நீதிமன்றத்தில் சட்டரீதியாகப் போராடினோம். இதுவே சென்னையாக இருந்தால், மூவர் தூக்கிற்கு செய்தது போல நீங்கள் நீதிமன்றத்தில் கலகம் செய்திருப்பீர்கள்'' என்று சென்னை வழக்கறிஞரிடம் அவரது டில்லி நண்பர் ஒருவர் சமீபத்தில் கருத்து கூறினாராம். இந்தக் கருத்து நடுத்தர வர்க்க சிந்தனைக்கு ஒரு வகை மாதிரி.

உண்மையில், மதச்சார்பற்ற சக்திகள் நாடெங்கும் ஒரு போராட்டத்தை நடத்தியிருந்தால் யாகுப் மேமனின் தூக்குத்தண்டனையை ஒருவேளை நிறுத்தியிருக்கலாம். அப்படி போராடியிருந்தால் இந்து மனச்சாட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக கொலை செய்யப்பட்ட அப்சல் குருவின் தண்டனையைக் கூட நம்மால் நிறுத்த முடிந்திருக்கலாம். சட்டத்தை மட்டும் நம்பி இருந்திருந்தால் மூவர் தூக்கை நீதிமன்றம் ரத்து செய்திருக்காது என்பதே உண்மை.

சட்டம், நெறி, மரபு ஆகியவற்றை அதன் காவலர்களான நீதிபதிகளும், அரசும், போலீசும் அன்றாடம் மீறிக் கொண்டிருக்கும் போது நாம் செய்ய வேண்டியது என்ன என்பதுதான் டில்லி நண்பரைப் போன்றோரிடத்தில் நாம் எழுப்பும் கேள்வி. தலித் படுகொலைக் குற்றவாளிகள் விடுதலை முதல் குஜராத் குற்றவாளிகள் விடுதலை வரை, சல்மான் கான் ஜாமீன் முதல் ஜெயலலிதா ஜாமீன் வரை எண்ணற்ற சான்றுகள் சட்டத்தின் ஆட்சி தோற்றுவிட்டதைப் பறைசாற்றுகின்றன. இருப்பினும் தாங்களே மதிக்காத சட்டத்துக்கும் நெறிமுறைக்கும் கட்டுப்படுமாறு நம்மை மிரட்டுகிறார்களே, இதற்குப் பணிவது வீரமாகுமா என்று கூட நாம் கேட்கவில்லை, அறிவுடைமை ஆகுமா என்று யாரேனும் சொல்லட்டும்.

தத்துவுக்கு எதிராக ஆதாரபூர்வமாக முன்னாள் நீதிபதி கட்ஜு ஊழல் குற்றச்சாட்டு கூறியிருக்கிறார். ''என்னைப் பாலியல் குற்றச்சாட்டு வழக்கில் அசிங்கப்படுத்திய உச்ச நீதிமன்றம், சாந்தி பூஷண் கொடுத்த ஊழல் நீதிபதிகள் பட்டியல் அடங்கிய உறையை ஏன் பிரிக்க மறுக்கிறது?'' என்று என்.டி.டி.வி-யில் கேள்வி எழுப்புகிறார் அலைக்கற்றை தீர்ப்பு புகழ் கங்குலி. நீதிபதிகளுக்கு எதிராக வீதிக்குப் போனது தவறு என்று கூறுவோர் இதற்குப் பதில் சொல்லட்டும்.

ஊழலை ஒழிப்பதற்காகவே உருவாக்கப்பட்டதும், இந்தியாவிலேயே முன்மாதிரியானது என்று அழைக்கப்படுவதுமான கர்நாடகா லோகாயுக்தா பதவியில் நியமிக்கப்பட்டார் ஓய்வு பெற்ற கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஒய்.பாஸ்கர் ராவ். அவருடைய மகன் அஸ்வின், ''அப்பாவிடம் சொல்லி ஊழல் வழக்கு போடுவேன்'' என்று மிரட்டியே 200 கோடி வசூலித்திருக்கிறான். ஒரே ஒரு தைரியசாலி இதை அம்பலமாக்கியதன் விளைவாக இப்போது சிறையில் இருக்கிறான்.

''விசாரணை முடிந்து என் மகன் குற்றவாளி என்று தீர்ப்பு வரட்டும். ராஜினாமாவைப் பற்றி அப்புறம் யோசிப்போம்'' என்று தொலைக்காட்சிக்கு பேட்டி கொடுக்கிறார். குற்றவாளி என்று யாரேனும் ஒரு குன்ஹா தீர்ப்பளித்தாலும், இன்னொரு குமாரசாமி சிக்காமலா போய்விடுவார் என்பது நீதிபதியின் நம்பிக்கை.

**உயர்நீதி மன்றம் முதல் கீழமை நீதிமன்றங்கள் வரையில் தமிழகத்தின் வழக்கறிஞர்கள் அனைவரையும் "தாங்கள் நீதிபதிகளின் அடிமைகள்தான்" என்று ஒப்புக்கொண்டு மண்டியிடவைக்க வேண்டும் என்பதே நீதிபதிகளின் நோக்கம்.**

ஊழலுக்கு ஆதாரம் இருக்கிறதா என்று மதுரை வழக்கறிஞர்களை மடக்கும் சட்ட வல்லுநர்கள், நீதிபதி பாஸ்கர் ராவைச் சட்டத்திற்கு உட்பட்டு தண்டிக்க வழி சொல்ல வேண்டும்.

•••

சட்டம், நெறிமுறைகள் அனைத்தும் மதிப்பிழந்து போய்க் கொண்டிருக்க, நொறுங்கிச் சரிந்து கொண்டிருக்கும் இந்த அரசமைப்பின் அங்கமான நீதிபதிகள், அதாவது பாஸ்கர் ராவின் சகோதர நீதிபதிகள், தாங்கள் வழக்கறிஞர்களால் அவமதிக்கப்பட்டு விட்டதாகவும் நீதிமன்றத்தின் மாண்பு கெட்டு விட்டதாகவும் கதறுகிறார்கள். ஒரு நாலாந்தர தெலுங்குப் படத்தின் நகைச்சுவைக் காட்சியைக் காட்டிலும் இது அருவருப்பானதாகத் தெரியவில்லையா?

**தபோல்கர், பன்சாரே, கல்புர்கி போன்ற பகுத்தறிவாளர்கள், இடதுசாரிகளைக் கொன்றொழிக்கும் பணியில் சனாதன் சன்ஸ்தா என்ற பார்ப்பன பயங்கரவாதக் குழு ஈடுபட்டதைப் போல, இங்கேயும் அத்தகைய வழக்கறிஞர்களைத் தேடிக் களையெடுக்கும் நீதிபதிகளின் சனாதன் சன்ஸ்தா ஓசைப்படாமல் இயங்குகிறது.**

''தமிழை வழக்காடு மொழியாக்கு'' என்ற அட்டையைப் பிடித்துக் கொண்டு பத்து பேர் நீதிமன்ற அறையில் அமர்ந்தவுடனே, ''எங்களால் நீதி வழங்கும் போது பாதுகாப்பாக உணர முடியவில்லை'' என்கிறார் தலைமை நீதிபதி. நீதியரசர்களின் தீர்ப்புகளால் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பவர்கள் தமிழ்நாட்டின் மக்களல்லவா?

மலை தொலைந்தது, விளைநிலம் பள்ளத்தாக்கானது, கண்மாய் காணாமல் போனது, கடலின் நிறம் மாறியது, நரபலி நடந்தது, புற்றுநோய் பரவியது, பல்லாயிரம் நோக்கியா தொழிலாளிகள் வீதியில் வீசப்பட்டனர் - இந்தப் பாதகங்கள் எதிலும் தமது தசம பாகத்தை எந்த நீதியரசரும் பெற்றுக் கொள்ளவில்லையா? நீதிமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஒழுக்கம் பற்றி உரையாற்றி, அது ஊடகங்களில் வெளிவருவதையும் உத்திரவாதம் செய்து கொள்ளும் சகோதர நீதிபதிகள் பதில் சொல்லட்டும். மேற்படி தசம பாக நீதியரசர்களின் பாதுகாப்புக்கு குறைவேதும் ஏற்படவில்லையே!

தாங்கள் ஏன் பாதுகாப்பாக உணரவில்லை என்பதைத் தனது உத்தரவில் விளக்கியிருக்கிறார் தலைமை நீதிபதி கவுல். ''வழக்கறிஞர்கள் மதுபாட்டிலோடு வருகிறார்கள், பெண் போலீசை கிண்டல் செய்கிறார்கள், கட்டப் பஞ்சாயத்து செய்கிறார்கள், நீதிமன்ற வளாகத்தில் கிரிக்கெட் ஆடுகிறார்கள், போலீசு மீது பொய்க்குற்றம் சுமத்துகிறார்கள், நீதிமன்றங்களில் ஊர்வலம், போராட்டம் நடத்துகிறார்கள், யோகா வகுப்பு நடத்த விடாமல் தடுக்கிறார்கள், மாட்டுக்கறி, மட்டன், கோழிக்கறி சாப்பிடுகிறார்கள்'' - என்று ஒரு போலீசு உதவி ஆணையர் சொன்னாராம்.

''அப்படியானால் ஏன் ஒரு எப்.ஐ.ஆர். கூடப் போடவில்லை'' என்று தலைமை நீதிபதிக்கு கேட்கத் தோன்றவில்லை. ஏனென்றால், ''நான் சொல்லவில்லை அவரே சொன்னார்'' என்று கூறுவதற்கு தலைமை நீதிபதிக்கு ஒரு ஆதாரம் மட்டுமே தேவைப்பட்டது. அதை போலீசு அதிகாரி வழங்கிவிட்டார். கறி, சாராயம் மற்றும் காலித்தனங்களின் வரிசையில் தமிழும், ஹெல்மெட் எதிர்ப்பும், ஊழல் எதிர்ப்பும் கொண்டு வரப்பட்டு விட்டன.

கவுல் கோரிய மத்தியப் படை மட்டும்தான் வரவில்லை. அதற்குப் பதிலாக, மாநில பார் கவுன்சிலின் அதிகாரத்தை அனைத்திந்திய கவுன்சில் சட்டவிரோதமாகக் கைப்பற்றிக் கொண்டு விட்டது. அரசியல் சட்டத்தின் 356-ஆவது பிரிவு டில்லிக்கு வழங்கும் அதிகாரம் பார் கவுன்சிலுக்கும் நீட்டிக்கப்பட்டு விட்டது.

மதுரை வழக்கறிஞர்கள் 14 பேரை நேரடியாக டில்லியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்து விட்டு, எதிர்ப்போரையெல்லாம் வெளியேற்றுவேன் என்று கொக்கரிக்கிறது அனைத்திந்திய பார் கவுன்சில்.

இது வெறும் நீதித்துறை சர்வாதிகாரம் அல்ல. பார்ப்பன பாசிச சர்வாதிகாரம். மோடி அரசின் கீழ் அதிகார வர்க்கம், ராணுவம், கல்வி, பண்பாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்தும் இந்துத்துவ சக்திகளால் நிரப்பப் படுவதைப் போல நீதித்துறையிலும் நடக்கிறது. அதன் அறிகுறிகள் சென்னை உயர்நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் தெளிவாகத் தெரிகின்றன.

தாத்ரியில் மாட்டுக்கறி தின்றதாக குற்றம் சாட்டி ஒரு முஸ்லிமை அடித்தே கொல்லலாம் என்றால், இங்கே மத்தியப் படை கொண்டு வருவதை அவசியமாக்கும் குற்றமாக மாட்டுக்கறி காட்டப்படுகிறது.

உச்சநீதி மன்ற நீதிபதிகளின் ஊழலை ஆதாரத்தோடு அம்பலப்படுத்திய உச்சநீதி மன்ற மூத்த வழக்குரைஞர் சாந்தி பூஷண் (இடது) மற்றும் உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு.



தபோல்கர், பன்சாரே, கல்புர்கி போன்ற பகுத்தறிவாளர்கள், இடதுசாரிகளைக் கொன்றொழிக்கும் பணியில் சனாதன் சன்ஸ்தா என்ற பார்ப்பன பயங்கரவாதக் குழு ஈடுபட்டதைப் போல, இங்கேயும் அத்தகைய வழக்கறிஞர்களைத் தேடிக் களையெடுக்கும்நீதிபதிகளின் சனாதன்சன்ஸ்தா ஓசைப்படாமல் இயங்குகிறது.

சுயமரியாதைத் திருமணச் சட்டத்தை கொல்லைப்புறம் வழியே முடக்க முயலும் தீர்ப்பு, தி.க வின் தாலி அகற்றும் நிகழ்வுக்கு விதிக்கப்பட்ட தடை, ஈ.வி.கே.எஸ். இளங்கோவனைப் பழிவாங்குவதற்காக போடப்பட்ட பொய்வழக்கில் அவருக்கு முன்ஜாமீன் வழங்க மறுத்தது, ஒன்றேகால் கோடி பணத்தை ஏமாற்றி ஏப்பம் விட்ட ஆக்ஸ்போர்டு சுப்பிரமணியம் என்ற ஸ்ரீரங்கம் தொகுதி பா.ஜ.க. வேட்பாளருக்கு டெபாசிட்டே இல்லாமல் முன்ஜாமீன் வழங்குவது, மாறன் சகோதரர்களுக்கு முன்ஜாமீன் மறுப்பதை நியாயப்படுத்த சிறையில் வாடும் ஏழைக் கைதிகளின் நிலையை ஒப்பிடுவது, அதேநேரத்தில் டாஸ்மாக் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட பு.மா.இ.மு. மாணவனை ஜாமீனில் விடுவதற்கு 50,000 ரூபாய் அபராதம் கட்டச் சொல்வது, யோகா வகுப்பு என்ற பெயரில் ஜக்கி வாசுதேவை உள்ளே கொண்டு வருவது, புரோக்கர் பிரபாகரனின் வழக்கறிஞர் சங்கத்துக்கு அங்கீகாரம் வழங்குவது, சாதிரீதியான சங்கங்களை வழக்கறிஞர்கள் மத்தியில் உருவாக்கிக் கையாளாகப் பயன்படுத்திக் கொண்டே, வழக்கறிஞர்கள் சாதிரீதியாக இயங்குவதாகவும் குற்றம் சாட்டுவது, விசுவ இந்து பரிசத் - பா.ஜ.க. தலைவர்களுடன் இழைந்து கொண்டே அறத்தின் வீழ்ச்சி குறித்து கவலை தெரிவிப்பது - என இந்த நீதிபதிகளின் சனாதன் சன்ஸ்தா எல்லாக் கோணங்களிலும் வேலை செய்து வருகிறது.

> **எண்ணற்ற சான்றுகள் சட்டத்தின் ஆட்சி தோற்றுவிட்டதைப் பறைசாற்றுகின்றன. இருப்பினும் தாங்களே மதிக்காத சட்டத்துக்கும் நெறிமுறைக்கும் கட்டுப்படுமாறு நம்மை மிரட்டுகிறார்களே, இதற்குப் பணிவது அறிவுடைமை ஆகுமா?**

மிஸ்ராக்கள், கவுல்கள், பாண்டேக்கள், சாதிப் பட்டத்தை போட்டுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் மதறாஸ் மாகாணத்தின் ஐயர்கள் ஆகிய அனைவரும் இதில் கூட்டு சேர்ந்திருக்கின்றனர்.

தேசிய நீதித்துறை நியமன ஆணையம் (NJAC) அமைக்கப்பட்டவுடன்,காலியாக இருக்கும் சுமார் 300 உயர்நீதி மன்ற நீதிபதி பதவிகளில் காக்கி அரை நிஜார்களை அமர வைப்பதே இவர்களின் திட்டம். அதனை எதிர்த்து நிற்கக்கூடிய வழக்கறிஞர்களைக் களையெடுக்கும் வேலைதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தில் ஒழுங்கை நிலைநாட்டுவது என்ற பெயரில் இது நடத்தப்படுகிறது.

அரசியல், போலீசு, அதிகாரவர்க்கம், ஊடகத்துறை, மருத்துவத்துறை, நீதித்துறை போன்ற சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் கிரிமினல்கள் செல்வாக்கு செலுத்துவதை மறைத்து விட்டு, வழக்கறிஞர் சமூகத்தை மட்டும் கிரிமினல்களாகச் சித்தரிக்கும் சதியில் பார்ப்பனப் பாசிசக் கும்பல் ஈடுபட்டிருக்கிறது. தினமணி தலையங்கமே இதற்குச் சான்று.

வழக்கறிஞர் தொழிலில் கிரிமினல்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள்தான் ஊழல் நீதிபதிகளின் கூட்டாளிகள், தரகர்கள். இன்னும் ரியல் எஸ்டேட் சொத்து அபகரிப்பு, ரவுடித்தனங்களில் ஈடுபடும் வழக்கறிஞர்கள், கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இவர்களின் மீதெல்லாம் பார் கவுன்சில் எந்த நடவடிக்கையும் எடுத்ததில்லை. இத்தகையோர் பார் கவுன்சில் பதவிகளை அலங்கரிக்கிறார்கள்.

பி.ஆர்.பழனிச்சாமி, வைகுந்தராசன் முதல் அனைத்து மக்கள் விரோதிகளும் பொதுச்சொத்தைக் கொள்ளையடிப்பதைச் சட்டப்படி சாத்தியமாக்கி கொடுத்தவர்கள் சாதி, பணம் ஆகியவற்றின் அடிப்படையில் திரட்டப்பட்ட வழக்கறிஞர் கும்பலும் ஊழல் நீதிபதிகளும்தான். இவர்களை எதிர்த்து தம் உயிரைப் பணயம் வைத்துப் போராடிய நேர்மையான வழக்கறிஞர்கள்தான் இன்று பழி வாங்கப்பட்டிருக்கின்றனர்.

''நான் மட்டுமே பதிவிரதை'' என்று மார்பில் போர்டு மாட்டிக்கொண்டிருக்கும் நீதிபதிகளின் தலைமையில், கிரானைட், தாதுமணல் வழக்குகளில் ஊழல் குற்றம் சாட்டப்பட்டுள்ள நீதிபதிகள் ஓரணியாகத் திரண்டிருக்கிறார்கள். தனது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கே ஜனநாயக உரிமைகளை மறுக்க வேண்டும் என்பது பார்ப்பன பாசிசத்தின் தேவை. ஊழல் நீதிபதிகளின் தேவையும் அத்தகையதுதான்.

''ஊழல் குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்க வேண்டுமானால், குற்றம் சாட்டுபவர்களையும் சாட்சிகளையும் குற்றவாளிகளாக்கி சிறையில் வைக்க வேண்டும். பிறகு அவர்களைக் கொன்று விடவேண்டும்'' என்பதுதான் ஊழல் ஒழிப்புக்கு பார்ப்பன பாசிசம் வகுத்திருக்கும் தருமம். வியாபம் ஊழல்தான் இந்த தருமத்தை விளக்கும் இதிகாசம்.

பார்ப்பன பாசிசமும் ஊழலும் பின்னிப் பிணைந்திருக்கும் இந்த அணி நீதித்துறையின் தேசிய ஜனநாயக முன்னணி. அதாவது இவர்கள் வழக்கறிஞர்களின் எதிரிகள் மட்டுமல்லர், தமிழ்ச்சமூகத்தின் எதிரிகள் என்பதே நாம் கண்டடைந்திருக்கும் உண்மை. ஆகவே, இனி மேலும் இதனை வழக்கறிஞர் போராட்டம் என்று சுருக்கி அடையாளப்படுத்துவது பொருத்தமற்றது.

● மருதையன்

## எம்.எம். கல்புர்கி கொலை:

# இந்து மதவெறி - ஆதிக்க சாதிவெறிக் கூட்டணியின் அட்டூழியம்!

முற்போக்கு சமூக சிந்தனையாளர்களை ஒடுக்கி, ஒழித்துக் கட்டும் பயங்கரவாதச் செயல்களில் இந்து மதவெறி அமைப்புகளும், ஆதிக்க சாதிவெறி சங்கங்களும் இயற்கை கூட்டாளிகளாகச் செயல்படுகின்றன.

**சா**கித்ய அகாடமி விருது பெற்றவரும், ஹம்பி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், பழமையான கன்னட இலக்கியங்களின் ஆய்வறிஞர், கல்வெட்டு அறிஞர் என பன்முகத் தன்மை கொண்டவருமான எம்.எம்.கல்புர்கி ஆகஸ்டு 30-ஆம் தேதியன்று இந்துவெறி காட்டுமிராண்டிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்துத்துவத்தையும் லிங்காயத்து சாதிவெறியையும் மூட நம்பிக்கைகளையும் எதிர்த்து நின்ற பார்ப்பன எதிர்ப்புச் சிந்தனையாளர் கொல்லப்பட்டிருப்பது நாகரிக சமுதாயத்துக்கு பேரழிப்பாகும்.

கர்நாடகத்தில் 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பசவர் உருவாக்கிய வீரசைவம் அல்லது லிங்காயத்து மதக் கொள்கை என்பது இந்து மதத்தின் கொள்கைக்கும் வழிபாட்டு முறைக்கும் முற்றிலும் எதிரானது. பசவரின் கொள்கையால் ஈர்க்கப்பட்ட பார்ப்பன சாதியப்படியில் மேல்நிலையில் இருந்தவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் அவரது மதத்தில் இணைந்து அவர்களுக்கிடையே திருமண உறவும் நிலவியது. இருப்பினும், குமரி மாவட்டத்தில் அய்யா வைகுந்தரை தன்னுள் அடக்கிக் கொண்டதைப் போலவே, பசவரையும் லிங்காயத்துகளையும் பார்ப்பனியம் காலப்போக்கில் உட்செரித்துக் கொண்டது. இந்துத்துவ சாதிய அமைப்பை எதிர்த்து உருவாகிய லிங்காயத்துக்கள் பின்னாளில் பார்ப்பனியத்துடன் சங்கமித்து தாழ்த்தப்பட்டோரை மிருகத்தனமாக ஒடுக்கும் ஆதிக்க சாதியாக மாறிப் போயினர்.

பசவரின் வீரசைவம் என்பது பார்ப்பனியத்தின் வேதங்களையும் சாதியமைப்பு முறையையும் நிராகரித்ததையும், பசவர் ஓரிறைக் கோட்பாட்டைக் கொண்டவராகவும் உருவ வழிபாட்டை நிராகரித்தவராக இருந்ததையும், அவரது கொள்கைகளை ஏற்று அவரது புதிய மதத்தில் இணைந்தவர்களே லிங்காயத்துகள் என்பதையும் தனது ஆய்வு நூலான ‘‘மார்கா’’ வில் கல்புர்கி நிரூபித்துக் காட்டினார். பசவரின் வச்சனா எனும் இசைக்கவிதைகளை ஆய்வு செய்த கல்புர்கி, லிங்காயத்துகளின் இன்னொரு கடவுளான சென்னபசவர், தாழ்த்தப்பட்டவருக்கும் பசவரின் சகோதரிக்கும் பிறந்தவர் என்றும் கூறினார். இந்த ஆய்வு முடிவுகள் 1989 -இல் வெளியானதும் லிங்காயத்துகள் போராட்டங்களை நடத்தி அவருக்குக் கொலை மிரட்டல் விடுத்தனர். எழுத்தாளர் பெருமாள் முருகனை மிரட்டியது போலவே கல்புர்கிக்கும் நெருக்குதல் கொடுத்து அவருடைய நூலின் சில பகுதிகளை நீக்கம் செய்ய வைத்தனர். என் சாதியை கல்புர்கி இழிவுபடுத்திவிட்டார் என்று கிளம்பிய லிங்காயத்து சாதிவெறியர்களைத் திரட்டிக் கொண்டு இந்துவெறியர்கள் தமது நோக்கங்களை ஈடேற்றி வருகின்றனர்.

லிங்காயத்துகளின் பார்ப்பனமயமாதலைத் தொடர்ந்து விமர்சித்து வந்த கல்புர்கி, கர்நாடகத்தில் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வந்ததால், கல்புர்கியின் வீட்டின் மீது இந்துவெறியர்கள் கல்வீசித் தாக்கி, கொலை மிரட்டல் விடுத்தனர். கடந்த ஜூன் மாதத்தில், பிரபல கன்னட எழுத்தாளரும் ஞானபீட பரிசு பெற்ற பேராசிரியரும் பார்ப்பன எதிர்ப்பாளருமான யு.ஆர். அனந்தமூர்த்தியின் நினைவுநாள் கூட்டத்தில் பேசிய கல்புர்கி, பார்ப்பனியத்தின் உருவ வழிபாடு, சிலை வழிபாட்டுக்கு எதிராக உரையாற்றினார். இவற்றின் தொடர்ச்சியாகவே அம்முதியவரை கோழைத்தனமாக நெற்றிப் பொட்டில் சுட்டுக் கொன்றுவிட்டு இந்துவெறியர்கள் தப்பியோடியுள்ளனர்.

இந்துவெறி காட்டுமிராண்டிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எம்.எம்.கல்புர்கி.



கல்புர்கி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மங்களூரு சிறீராம் சேனா குண்டர்கள் இனிப்புகள்

வழங்கிக் கொண்டாடியுள்ளனர். ‘‘இந்து மதத்தை விமர்சித்தீர்கள் என்றால், நாயின் சாவை ருசியுங்கள்’’ என்று பஜ்ரங் தள நிர்வாகியான புவித் ஷெட்டி என்பவன் ட்விட்டரில் வெளியிட்டுள்ள கருத்தே இக்கொலைக்கு யார் காரணம் என்பதைத் தெளிவுபடுத்திவிட்டது. மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும், மக்களைச் சுரண்டிக் கொழுக்கும் மடாதிபதிகளுக்கு எதிராகவும் கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வரும் முன்னாள் பேராசிரியரும் கன்னட எழுத்தாளருமான கே.எஸ்.பகவானுக்கு , ‘‘அடுத்த இலக்கு நீங்கள்தான்’’ என்று அவன் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளான். கொலைகாரர்களான இந்து வெறி அமைப்புகள் பின்னணியில் இருப்பது அம்பலமாகியுள்ள போதிலும், கல்புர்கியைக் கொன்ற இருவரை மட்டுமே பிடிக்க சிறப்புக் குழுக்களை அமைத்து தேடுதல் நாடகமாடுகிறது கர்நாடக அரசு.



இந்துவெறி காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்து தார்வாட் நகரில் பெருந்திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்ற கல்புர்கியின் இறுதி ஊர்வலம்.

கல்புர்கி கொலைக்கு முன்னதாக, மகாராஷ்டிர மாநிலம் புனே நகரைச் சேர்ந்த பகுத்தறிவாளரும் மருத்துவருமான நரேந்திர தபோல்கர் கடந்த 2013 ஆகஸ்டு 20 அன்று மோட்டார் சைக்கிளில் வந்த இரு இந்துவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். ‘‘அந்தா ஷ்ரத்தா நிர்மூலன் சமிதி’’ என்ற மூட நம்பிக்கை எதிர்ப்பு இயக்கத்தை 1989-இல் நிறுவி தொடர்ந்து இயக்கிவந்த தபோல்கர், அந்த இயக்கத்தின் மூலமாக போலி சாமியார்கள், பாபாக்கள், மந்திரவாதிகளை மக்கள் முன் அம்பலப்படுத்தினார். பிள்ளையார் சிலை பால் குடிக்காது, பேய்-பிசாசு என்று எதுவும் கிடையாது என்று ஊர் ஊராகப் பிரச்சாரம் செய்த அவர், ‘‘சாதனா’’ என்ற மூடநம்பிக்கை எதிர்ப்பு பத்திரிகையையும் தொடர்ந்து நடத்தி வந்தார். மூட நம்பிக்கைகள் மற்றும் போலி சாமியார்களுக்கு எதிராக ஒரு சட்டத்தை நடப்பு சட்டமன்றக் கூட்டத்தில் அறிமுகம் செய்யவேண்டியதொரு கட்டாயத்தை மாநில அரசுக்கு ஏற்படுத்தும் வகையில், பல்வேறு போராட்டங்களை நடத்தியவர்தான் தபோல்கர். அதனாலேயே அம்மூத்த பகுத்தறிவாளர் இந்து வெறியர்களால் கொல்லப்பட்டு விட்டார்.

இந்துவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட மூடநம்பிக்கை எதிர்ப்புப் போராளி டாக்டர் நரேந்திர தபோல்கர்.(இடது) ; மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான கோவிந்த் பன்சாரே.



இதைத்தொடர்ந்து, கடந்த பிப்.16 அன்று மகாராஷ்டிராவின் கோலாப்பூரில் 82 வயதான இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான கோவிந்த் பன்சாரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ‘‘சிவாஜி யார்?’’ என்ற பன்சாரேவின் நூல், சிவாஜியை இந்துத்துவ பேராண்மையின் சின்னமாகக் காட்டும் சிவசேனா - ஆர்.எஸ்.எஸ். புரட்டல்களைத் தோலுரித்துக் காட்டியது. இந்து மதத்தையும் சாதியையும் இழிவுபடுத்திவிட்டதாக மூட நம்பிக்கை எதிர்ப்பாளர்கள் மீது தொடர்ந்து அவதூறு வழக்கு தொடுப்பதோடு, வெளிப்படையாக மிரட்டல்கள் - தாக்குதல்களையும் நடத்தி வரும் ‘‘சனாதன் சன்ஸ்தா’’ என்ற இந்துவெறி பயங்கரவாத அமைப்பின் நடவடிக்கைகளையும், கோட்சேவுக்கு சிலை எழுப்புவதையும் எதிர்த்து நின்றவர்தான் பன்சாரே. பன்சாரே கொலையையொட்டி சனாதன் சன்ஸ்தா என்ற இந்து வெறி அமைப்பைச் சேர்ந்த சமீர் கெய்க்வாட் என்பவனை மகாராஷ்டிர போலீசு கைது செய்துள்ள போதிலும், அந்த அமைப்பின் முக்கிய தலைவர்களைக் கைது செய்யவோ, அப்பயங்கரவாத அமைப்பைத் தடை செய்யவோ முன்வரவில்லை.

இவர்கள் மட்டுமல்ல, பிரபல மலையாள எழுத்தாளரும் இலக்கிய விமர்சகருமான எம்.எம்.பஷீர் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளார். கேரளத்தில் பின்பற்றப்படும் இராமாயண மாதத்தில், ‘‘மாத்ருபூமி’’ நாளிதழில் இராமாயணம் பற்றிய படைப்புகள் வெளியிடப்படுவது வழக்கம். இந்நாளேட்டில் இராமாயணம் குறித்து எம்.எம்.பஷீர் தொடர் கட்டுரை எழுதிவந்த நிலையில், அவர் பிறப்பால் ஒரு முஸ்லிம் என்பதற்காகவே இந்துவெறியர்கள் அவர் இராமாயணத்தைப் பற்றி எழுதக் கூடாது என்று மிரட்டினர். ‘‘அனுமன் சேனா’’ என்ற பெயரில் இந்துவெறியர்கள் இவருக்கு எதிராகச் சுவரொட்டிகளை ஒட்டி ஊர்வலம் நடத்தி, நாளிதழ் நிர்வாகத்துக்கும் மிரட்டல் விடுத்ததைத் தொடர்ந்து பஷீரின் தொடர் நிறுத்தப்பட்டுள்ளது. டெல்லியின்

இந்துவெறிக் கும்பல் விடுத்த மிரட்டலைத் தொடர்ந்து, பிரபல ஐரோப்பிய எழுத்தாளரான வென்டி டோனிகரின் ‘‘இந்துக்கள் - ஒரு மாற்று வரலாறு’’ மற்றும் ‘‘இந்துயிசம்’’ ஆகிய நூல்கள் பென்குயின் பதிப்பகத்தால் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இந்தி - சமஸ்கிருதத் திணிப்பு, குரு உத்சவ், பாடத்திட்ட மாற்றம், அதிகார வர்க்கத்தில் சங்கப் பரிவாரத்தினரைத் திணிப்பது - என இந்துத்துவ நிகழ்ச்சி நிரலை ஆளும் கும்பல் வேகமாகச் செயல்படுத்தி வரும் அதேநேரத்தில், பல்வேறு பெயர்களில் உருவாக்கப்படும் இந்துவெறி அமைப்புகள் பசுவதைத் தடுப்பு, மாட்டிறைச்சிக்குத் தடை, பிள்ளையார் ஊர்வலம், ரக்ஷா பந்தன் - எனப் பலவற்றிலும் புகுந்து, அதன் வழியே இந்துவெறியைத் தூண்டி வருகின்றன. இதன் ஒரு அங்கமாகவே இந்து வெறியை எதிர்க்கும் முற்போக்கு அமைப்புகளையும் சிந்தனையாளர்களையும் அச்சுறுத்தியும் படுகொலை செய்தும் வருகின்றன.

நாத்திகப் பிரச்சாரம் செய்தாலோ, வரலாற்று வகைப்பட்ட கேள்விகளை எழுப்பினாலோ, இந்துக்களின் மத உணர்வைப் புண்படுத்திவிட்டதாக இந்து வெறியர்கள் அலறுகிறார்கள். அரசு பதவியில் இருக்கும் இந்துவெறியர்கள், மதச்சார்பின்மை கோட்பாட்டுக்கு விரோதமாக அரசு நிகழ்ச்சிகளையே மதச் சடங்குகளாக்குகிறார்கள். மத நம்பிக்கையை அரசு மேடையில் நின்று பிரச்சாரம் செய்கிறார்கள். அவர்களுக்கு அந்த உரிமை உண்டாம். ஆனால் கல்புர்கியும், பன்சாரேவும், தபோல்கரும் தங்களது நாத்திகக் கருத்தை மனதுக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டுமாம். வெளியே பேசினால் அது இந்துக்களின் மத உணர்வைப் புண்படுத்துமாம். மதத்தை தனிப்பட்ட நம்பிக்கையாக வைத்துக் கொள்வதும், பொது நடவடிக்களை அறிவியல் கண்ணோட்டத்துக்கு உட்படுத்துவதும்தான் மதச்சார்பின்மைக் கோட்பாட்டின் சாரம். ஆனால் அறிவியல் வழிபட்ட நாத்திகக் கருத்தை தனிப்பட்ட நம்பிக்கை போல வைத்துக் கொள்ளச் சொல்லி, இந்துத்துவக் கருத்துக்களை தாராளமாக வெளியில் பேசுவதையே மதச்சார்பின்மையாக மாற்றிவருகிறது பார்ப்பன பாசிசம்.

சாதி என்ற நிறுவனத்தையும் உணர்வையும் பராமரித்துவரும் பார்ப்பன பாசிசம், இந்துவெறிக்கு சமூக அடித்தளமாக சாதிவெறியர்களைச் சேர்த்துக் கொள்கிறது. கொங்கு வேளாளக் கவுண்டர் சாதிவெறியர்களின் ஆதரவும் அடித்தளமும் இல்லையேல், இந்து வெறியர்களால் இத்தனை வீரியத்தோடு மாதொருபாகன் நூலை எழுதிய பெருமாள் முருகனை எதிர்க்க முடியாமல் போயிருக்கும். இந்துவெறியும் சாதி வெறியும் இணைந்து நின்று தாக்குதல் தொடுக்கும்



அனுமன் சேனா எனும் இந்துவெறி அமைப்பின் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள மலையாள எழுத்தாளர் எம்.எம்.பஷீர்.

இந்தப் போக்குதான், கர்நாடகத்தில் லிங்காயத்து சாதிவெறியர்களை சமூக அடித்தளமாகக் கொண்டு முற்போக்கு சிந்தனையாளரான கல்புர்கியைக் கொல்லத் துணிந்திருக்கிறது.

இப்படித்தான் பல்வேறு மாநிலங்களிலும் தமது தேர்தல் உத்திக்கேற்ப சாதி வெறியர்களால் நடத்தப்படும் ஆதிக்க சாதிச் சங்கங்களுடன் இந்துவெறியர்கள் கூட்டணி அமைக்கின்றனர். இவர்களின் சமூக அடித்தளமாக சாதிவெறியர்களால் நடத்தப்படும் சாதிய சங்கங்களும் சாதியக் கட்சிகளும் மாறிப் போயுள்ளன. வர்க்கப் போராட்டத்துக்கு மாற்றாகவும், சாதியை ஒழிப்பதற்கான மண்ணுக்கேற்ற வழிமுறையாகவும் முன்வைக்கப்பட்ட சமூகநீதி அரசியல் என்ற பெயரிலான சாதிய அடையாள அரசியல்தான், மக்கள் மத்தியல் மங்கி வரும் சாதிய உணர்வை மீண்டும் புதுப்பித்துக் கிளறி விடுகிறது. பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஒற்றுமை பற்றி பேசித் திரிந்த எல்லா சாதியப் பிழைப்புவாதிகளின் சாயமும் வெளுத்துப் போய், சாதியத்தைக் கட்டிக்காக்க வேண்டுமென்ற பார்ப்பனியக் கொள்கையே சமூகநீதிக் கொள்கையாக மாறியிருக்கிறது. பெரியாரையும் அம்பேத்கரையும் தங்களது அரசியல் பிழைப்புவாதத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளும் சமூக நீதி பேசும் ஓட்டுக் கட்சிகள், அவர்களது பார்ப்பன எதிர்ப்புக் கருத்துகளைப் பேசுவதில்லை. மாறாக, பார்ப்பனியத்தின் நவீன அடியாட்படையாக மாறி நிற்கிறார்கள்.

சில எழுத்தாளர்கள், கல்புர்கியின் கொலையை கருத்துரிமைக்கு எதிரான செயலாகவும், மாற்றுக் கருத்துகளை எதிர்கொள்ள முடியாத சகிப்புத்தன்மையற்ற செயலாகவும் சித்தரிக்கின்றனர். பெருமாள் முருகன் விவகாரத்திலும் இப்படிப்பட்ட சரணாகதி வாதம்தான் வைக்கப்பட்டது. பார்ப்பனியத்தையும் கொங்கு வேளாளக் கவுண்டர், வன்னியர்,தேவர், லிங்காயத்து சாதிவெறியையும் எதிர்க்க முன்வராமல், இப்படி கருத்துரிமை பற்றி சண்டமாருதம் செய்வதன் மூலம் சாதிவெறியும் இந்துவெறியும் திட்டமிட்டே மறைக்கப்படுகிறது. இத்தகைய சரணாகதியும் சந்தர்ப்பவாதமும்தான் இந்துவெறியர்கள் மேலும் மூர்க்கமாகவும் வெளிப்படையாகவும் தாக்குதவதற்கு வாய்ப்பாக அமைகின்றன.

அண்மைக் காலங்களில் நாம் இழந்திருக்கும் முற்போக்கு சிந்தனையாளர்களின் உயிர்கள் விலை மதிப்பற்றவை. இந்துவெறி பாசிஸ்டுகளுக்கும் அவர்களது அடியாட்படையாக உள்ள சாதியப் பிழைப்புவாதக் கட்சிகளையும் அம்பலப்படுத்தி முறியடிக்கப் போராடுவதுதான் நாம் இத்தகையோருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும்.

● குமார்

## சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு:

# ஜெயா வழங்கிய “மானாட மயிலாட”

**அந்நிய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதையே மோடியை விஞ்சிய சாதனையாகக் காட்டி சுயவிளம்பரக் கூத்தை வக்கிரமாக நடத்தியுள்ளது ஜெ.கும்பல்.**

பன்னாட்டு முதலாளிகளே வாருங்கள், உங்கள் விருப்பம் போல தமிழகத்தையும் தமிழக மக்களையும் கொள்ளையடித்துச் செல்லுங்கள் என்று அறைகூவியழைத்து, பார்ப்பன பாசிஸ்டுக்கே உரித்தான அருவருக்கத்தக்க சுயவிளம்பரத்துடன் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு என்ற ஒரு ஆபாசக் கூத்தை அண்மையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா நடத்தியிருக்கிறார்.

ஏற்கெனவே பல மாநில அரசுகள் இத்தகைய மாநாடுகளை நடத்தியுள்ள போதிலும், நாலாந்தர நடிகைக்கே உரித்தான ‘அறிவுக்கூர்மையுடன்’, ஆபாசக் குத்தாட்டங்களுடன் இம்மாநாட்டில் முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுத்து ஜெயலலிதா வரவேற்றுள்ளார். தனது இச்சாதனையை அங்கீகரித்து, தன்னைப் போற்றிப் புகழ வேண்டுமென்ற வக்கிரத்துடன், மின்னணு தொழில்நுட்பத்தில் பறக்கும் குதிரை ஜெயலலிதா காலில் மண்டியிடுவது போன்ற காட்சியைத் தனது அடிமைகளைக் கொண்டு ஏற்பாடு செய்து ரசித்துப் புளகாங்கிதம் அடைந்துள்ளார்.

உலகெங்கும் சுற்றி ஒரு லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை பிரதமர் மோடி கொண்டுவந்தார் என்றால், உள்ளூரில் இருந்துகொண்டே ஜெயலலிதா 2 லட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டுவந்து விட்டதாகவும், மோடியைவிட லேடிதான் டாப் என்றும் அவரது துதிபாடிகள் மார்தட்டுகின்றனர். இம்மாநாட்டையொட்டி தற்போது ஆரவாரமாக அறிவிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மதிப்பு 2 லட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய் என்ற புள்ளிவிவரக் கணக்கு அடிமைகளால் நடத்தப்பட்ட இன்னுமொரு கேலிக் கூத்து. ஜெயலலிதாவின் பிறந்த நாளான பிப்ரவரி 24 என்பதை வைத்து 24,2 என்று வருமாறு இத்தொகையை நிர்ணயித்துள்ளனர்.

ஆனால், கடந்த 2008-ஆம் ஆண்டிலிருந்தே அமெரிக்க - ஐரோப்பிய பொருளாதாரங்கள் தேக்கத்திலும் நெருக்கடியிலும் சிக்கி, சந்தை வற்றிப்போய் அந்நாடுகளின் ஏகபோக ஆளும் வர்க்கமே தடுமாறிக் கொண்டிருக்கும்போது, அந்நாடுகளின் ஏகபோக முதலாளிகள் தமிழகத்தில் வந்து முதலீடு செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது கேழ்வரகில் நெய்வடிந்த கதைதான்.

ஏற்கெனவே காங்கிரசு கூட்டணி ஆட்சியை விஞ்சும் வகையில் தொழிலாளர் சட்டத் திருத்தம், காடுகளையும் கனிமவளங்களையும் கார்ப்பரேட் முதலாளிகள் தடையின்றிச் சுரண்டுவதற்கேற்ப சுற்றுச்சூழல் விதிகள் திருத்தம், வங்கி, காப்பீடுதுறைகளில் அந்நிய நேரடி முதலீட்டுக்குத் தாராள அனுமதி, கார்ப்பரேட் முதலாளிகளுக்கு வரிச்சலுகைகள் - என இந்தியாவைத் தாரைவார்த்துக் கொடுப்பதாக மோடி கும்பல் உலகமெங்கும் சுற்றி கூவிக்கூவி அழைத்த போதிலும், எதிர்பார்த்தபடி அந்நிய முதலீடுகள் வரவில்லை. மோடி கும்பலால் ஆரவாரமாக அறிவிக்கப்பட்ட ‘‘மேக் இன் இந்தியா’’ திட்டமே புஸ்வாணமாகி நிற்கும்போது,மோடி கும்பலையே விஞ்சிவிட்டதாக மாய்மாலம் செய்கிறது ஜெ.கும்பல்.

சென்னையில் நடந்த சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு: தமிழகத்தைப் பன்னாட்டு முதலாளிகளுக்குத் தாரைவார்க்க பாசிச ஜெயலலிதாவால் நடத்தப்பட்ட அருவருக்கத்தக்க சுயவிளம்பரக் கூத்து.



எல்லாவற்றுக்கும் மேலாக, புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றால் வரும், ஆனா வராது கதைதான். புரிந்துணர்வுதானே தவிர, உடனே யாரும் முதலீடு செய்யப் போவதில்லை. ஏன் முதலீடு செய்யவில்லை என்று யாரும் கேட்கவும் முடியாது. செயலாக்கத்துக்கு வருமா என்று யாருக்கும் தெரியாது. ஏற்கெனவே கடந்த 4 ஆண்டுகளில் ஜெயா ஆட்சியில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் கதி என்ன என்று பார்த்தாலே இதன் யோக்கியதை விளங்கிவிடும்.

2011-இல் தமிழகத்தில் 73,298 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாக ஜெ.அரசு அறிவித்தது. ஆனால், அவற்றில் வெறும் 238 கோடி ரூபாய் முதலீடு மட்டுமே தமிழகத்துக்கு வந்துள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வெறும் 0.3 சதவீதம்தான்.

2012-இல் 12 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி அதன் மூலம் 36,855 பேருக்கு வேலை கிடைக்குமென்றும், 20 ஆயிரத்து 925 கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகள் தொடங்கப்படவுள்ளதாகவும் பிரம்மாண்ட அறிவிப்பு செய்தது ஜெ. கும்பல். அப்புறம் அந்த அறிவிப்பு காற்றோடு கலந்துவிட்டது.

ஏற்கெனவே தமிழகத்துக்குக் கொண்டுவரப்பட்ட பெரும் அந்நிய முதலீட்டு நிறுவனங்கள்தான் நோக்கியாவும் ஹூண்டாயும். சென்னை அருகே இருங்காட்டுக் கோட்டை பகுதியில் விவசாய நிலங்களைப் பறித்து, தடையற்ற மின்சாரத்துடன் வரிச்சலுகைகளை வாரியிறைத்தும், தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளையும் பறித்தும் கொண்டுவரப்பட்ட இந்நிறுவனங்களால் தமிழகத்தில் வளர்ச்சி ஏற்படவில்லை. ஏரிகள்-குளங்களை ஆக்கிரமித்தும், கழிவுகளைக் கொட்டி சுற்றுச்சூழலை நாசமாக்கியும் வரும் இத்தகைய அந்நிய முதலீட்டாளர்களால் பேரழிவுகளும் பகற்கொள்ளையும்தான் நடந்திருக்கிறது.

நோக்கியா, பி.ஒய்.டி. போன்ற நிறுவனங்களின் சட்டவிரோதக் கதவடைப்பால் பல்லாயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். இன்னும் பல சிப்காட் தொழிற்பேட்டைகளில் எவ்வித உரிமையுமின்றி, தொழிலாளர்கள் சட்டவிரோதமாகக் கொத்தடிமைகளாகச் சுரண்டப்படுவதும், பாதுகாப்பு ஏற்பாடுகளின்றிப் பணியாற்ற வைப்பதன் மூலம் பலர் படுகாயமடைந்து உடல் உறுப்புகளை இழந்து நிற்கும் கொடுமையும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது. நோக்கியா இயங்கிய 8 ஆண்டுகளில் பல ஆயிரம் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக வைத்து சுரண்டிக் கொழுத்ததோடு, வரி ஏய்ப்பு செய்து பல ஆயிரம் கோடிகளைச் சுருட்டிக் கொண்டது. பிறகு சட்டவிரோதமாக ஆலையை மூடி, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வீதியில் வீசியெறிந்தது. இதுதான் பெருமையாகப் பீற்றிக் கொள்ளப்பட்ட அந்நிய முதலீட்டின் மகிமை.



முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுக்க ஜெ. அரசால் நடத்தப்பட்ட குத்தாட்டம்.

நோக்கியாவுக்கு முன்னதாக 2013-இல் மோட்டரோலா தனது சூறையாடலை முடித்துக் கொண்டு தனது நிறுவனத்தை மூடிவிட்டது. சென்னையில் தனது பிரிவை மூடிவிட்ட ஃபாக்ஸ்கான் நிறுவனம், தனது ஆலையின் விரிவாக்கத்தை உ.பி. குஜராத் மற்றும் ஆந்திராவுக்கு மாற்றத் தீர்மானித்துள்ளது. தமிழகத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனமும், மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் நிறுவனமும் மூடப்படும் நிலையில் உள்ளன. தமிழ்நாடு பெட்ரோப்ராடக்ஸ் நிறுவனம், திருச்சி டிஸ்டிலரீஸ் நிறுவனம், தூத்துக்குடி அல்கலின் கெமிக்கல்ஸ் நிறுவனம் ஆகியன ஏற்கெனவே மூடப்பட்டுவிட்டன. இவற்றின் விளைவாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து பரிதவிக்கின்றனர்.

தமிழகத்தைச் சூறையாடுவதற்காக கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளைக்கு கதவை அகலத் திறந்துவிட்டுள்ள முதல்வர் ஜெயலலிதா பெருமிதம் கொள்வதைப் போலத்தான், அன்றைய தமிழக முதல்வரான கருணாநிதி, தமிகத்தின் தொழில்வளர்ச்சி - வேலைவாய்ப்புக்காக நான்தான் நோக்கியாவைக் கொண்டுவந்தேன் என்று மார்தட்டிக் கொண்டார். நோக்கியாவால் தமிழத்துக்கு என்ன கதி ஏற்பட்டது என்பதைப் பற்றி வாய்திறக்க மறுக்கும் கருணாநிதி, கடந்த நான்காண்டு காலமாக நன்றாகத் தூங்கிவிட்டு இப்போது திடீரென சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டைக் கூட்டி ஒரு நாடகத்தை நடத்துவதாக ஜெ. கும்பலைச் சாடுகிறார்.

தமிழகத்தைச் சூறையாடும் இத்தகைய பேரழிவுப் பாதையைத்தான் எல்லா ஓட்டுக்கட்சிகளும் ஊடகங்களும் 'வளர்ச்சி' என்ற பெயரில் நியாயப்படுத்தி வருகின்றன. ஏதோ ஜெயலலிதாவின் நிர்வாகத் திறமையின்மையால்தான் அந்நிய முதலீடுகள் வராததைப் போலவும், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதைவிட இன்னும் அதிகமாக அந்நிய முதலீடுகளை கொண்டு வந்து தமிழகத்தை வளப்படுத்தப் போவதாகவும் ஜெயா ஆட்சிக்கு எதிராகப் புழுதி அரசியலை நடத்திக் கொண்டிருக்கின்றன.

● மனோகரன்

# “பத்து நாள் ஜெயில்ல இருந்துட்டுப் போனா என்ன குடிமுழுகிடப் போகுது…!”

## - போராட்டம் ஏற்படுத்திய மாற்றங்கள்!

‘‘டாஸ்மாக்கை மூடு’’ என்ற முழக்கத்துடன் கடந்த ஆக-3 அன்று சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி நடத்திய போராட்டத்தில் அக்கல்லூரிக்கு அருகாமையில் உள்ள டாஸ்மாக் கடை அடித்து நொறுக்கப்பட்டது. அப்போராட்டத்தில் பங்கேற்று, சாராய பாட்டிலை உடைத்ததற்காக 38 நாட்கள் புழல் சிறையிலடைக்கப்பட்டிருந்த 13 மாணவர்கள் நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.


சிறைசென்ற மாணவர்கள்.

சிறை சென்றவர்களில் செல்வம், தினேஷ், நினைவேந்தன் ஆகியோர் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள்; கனிமொழி சட்டக் கல்லூரி மாணவி; நிவேதிதா, வாணிசிறீ, ஜான்சி ஆகியோர் ராணிமேரிக் கல்லூரி மாணவிகள்; மாரிமுத்து பள்ளி மாணவர்; மணி ஐ.டி.ஐ. மாணவர்; சாரதி, ஆசாத், திருமலை மற்றும் ரூபாவதி ஆகியோர் பு.மா.இ.மு. அமைப்பின் முன்னணியாளர்கள். போராட்டம், போலீசின் அடக்குமுறை, சிறை அனுபவம் குறித்து அவர்களுடன் கலந்துரையாடினோம்.

‘‘டாஸ்மாக் கடையை இழுத்து மூடனும்ற உணர்வோடதான் போராட்டத்துல கலந்துகிட்டேன். ஆனா, ஜெயில்ல போடுவாங்கனெல்லாம் நினைக்கல. ஜெயிலுக்குள்ள வந்த முத நாளே அழுதிட்டேன். தோழர்கள் புத்தகம் படித்து விவாதிப்பதும் அமைப்பு பாட்டு பாடிகிட்டும், மத்த கைதிங்ககூட அரசியல் பேசிகிட்டும் இயல்பா இருந்தாங்க. இவங்களால மட்டும் எப்படி இருக்க முடியுதுன்னு யோசிச்சேன்…’’ என்கிறார், பச்சையப்பன் கல்லூரி மாணவரான **தினேஷ்.**

## “இந்த சவாலான நெலமைய மாத்தனும்னுதானே போராடுறோம்…”

‘‘போலீசையும், ஜெயில் வாழ்க்கையும் கூட சமாளிச்சிட்டேன். பெயில் கிடைச்சு வீட்டுக்குப் போனா, மொத்தக் குடும்பமும் சேர்ந்து என்ன அடிச்சது. ‘பொட்டபுள்ள ஜெயிலுக்கெல்லாம் போயிட்டு வர்றீயே, இனி உன்னை எவன்டி கட்டிக்குவான்?’ னு கண்டபடி பேச ஆரம்பிச்சிட்டாங்க…’’ என்று கூறும் ரூபாவதி, எட்டாம் வகுப்பு மட்டுமே படித்தவர். எக்ஸ்போர்ட் கம்பெனிக்கு வேலைக்குச் செல்லும் இளம்பெண்.

‘‘கல்லூரி மாணவியல்லாத நீங்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றது எப்படி?’’ என்று கேள்வியை முடிப்பதற்குள்ளாகவே, பேசத் தொடங்கினார் ரூபாவதி. ‘‘பு.மா.இ.மு. அமைப்புல உறுப்பினர் என்பதையும்தாண்டி, டாஸ்மாக் குடியினால் சொந்தமுறையில் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருத்தி. குடியினாலேயே 29 வயதில எங்க அண்ணனை இழந்திருக்கேன். எங்கப்பாவும் மொடா குடிகாரர்தான். சம்பாத்தியம் முழுசையும் குடிச்சே அழிக்கிறவரு. நினைவுக்கு தெரிஞ்ச நாள் வரையில் பல இரவுகள் சாப்பிடாம பச்ச தண்ணிய மட்டுமே குடிச்சிட்டு தூங்கியிருக்கேன். குடிக்கலைன்னா எங்கப்பா எங்க மேல அவ்ளோ பாசமா நடந்துப்பாரு. அதே குடிச்சுட்டு வந்துட்டாருன்னா அப்படியே ஆப்போசிட்டா மாறிடுவாரு. அம்மா சமைச்சு வச்ச சாப்பாட்டுல உப்பையோ, மண்ணையோ அள்ளிப் போட்டுருவாரு. அது மட்டுமில்லாம, அந்தச் சாப்பாட்டை நாங்க எல்லாம் சாப்பிடனும்னு அடிப்பாரு. அப்பாவோட அடிக்கு பயந்தே பல நாளு மண்ணள்ளிப்போட்ட சோத்தை மொத்தக் குடும்பமும் சேர்ந்து சாப்பிட்டிருக்கோம். இப்படி, குடியினால சொந்த முறையில அதன் பாதிப்ப உணர்ந்த என் குடும்பமே எனக்கு ஆதரவா இல்லையேனு நினைக்கிறப்போ வருத்தமாத்தான் இருக்கு. ஆனாலும், இந்த சவாலான நிலைமையை மாத்தனும்னு தானே பு.மா.இ.மு. தோழர்கள் போராடுறாங்க.’’ என்கிறார், ரூபாவதி.


ரூபாவதி

''யார்கூடவும் சகஜமாக பேசமாட்டேன்; பத்து மணிவரைக்கும்கூட வீட்டுல தூங்குவேன். ரேஷன் அரிசியில சமைச்சிருந்தா மூனு நாளானாலும் சாப்பிடாம அடம்பிடிப்பேன். புக் படிக்கற பழக்கமே இருந்ததில்லை. ஆனா, ஜெயிலுக்கு வந்தப்பிறகு எல்லாமே மாத்திகிட்டேன்...'' என்கிறார், பச்சையப்பன் கல்லூரி மாணவரான **நினைவேந்தன்.**

''ஜெயில்ல அம்மா வந்து என்னை பாத்தப்ப வீட்டை காலி பண்ணவச்சிட்டாங்கனு சொல்லி அழுதாங்க. அப்போ மனசு கொஞ்சம் கஷ்டமாத்தான் இருந்துச்சி'' எனும் **மாரிமுத்து**, மதுரவாயல் அரசு மேநிலைப்பள்ளியில் 12-ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர். அப்பாவின் ஆதரவில்லாத குடும்பம் அவருடையது. கல்லூரி செல்லும் அக்கா; பத்தாம் வகுப்பு பயிலும் தம்பி; சிற்றாள் வேலை செய்து ஒற்றை ஆளாய் நின்று மொத்தக் குடும்பத்தையும் காப்பாற்றும் தாய். மூன்றுமாதங்களாக வீட்டு வாடகை செலுத்தவியலாத அளவுக்கு வாட்டும் குடும்ப வறுமை. எந்நேரமும் வீட்டைக் காலி செய்து வீதியில் துரத்தியடிக்கப்படலாம் என்ற நெருக்கடியான அந்தச் சூழலிலும் மனம்தளராமல் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைசென்றவர் மாரிமுத்து.

''இந்த சமூகத்தில் பெண்கள் போராட வருவதே அரிது. அமைப்பு கற்றுக்கொடுத்த அரசியல் உணர்விலிருந்து இளம்பெண்களாக இருந்தபோதிலும் நாங்கள் போராட்டக் களத்தில் முன்னிற்கிறோம். இப்போராட்டங்களின் பொழுது, எங்களை கைது செய்ய முயன்ற போலீசார் மாணவிகளாகிய எங்களிடம் அருவருக்கத்தக்க முறையில் நடந்து கொண்டனர். கண்ட இடங்களில் கையை வைத்து எங்களைத் தூக்குவதும், உடைகளைக் கிழித்துவிடுவதும், பேண்ட் நாடாவை அவிழ்த்துவிடுவதும் என சொல்ல நாக்கூசும் அளவிற்குக் கீழ்த்தரமான முறையில்தான் எங்களை போலீசார் நடத்தினர்.'' என்கிறார் சட்டக் கல்லூரி மாணவியான **கனிமொழி**.

## "நல்ல விசயத்துக்குத்தான் எம்புள்ள ஜெயிலுக்குப் போயிருக்கான்..."



அமுதம்

''என் வீட்டுக்காரனால பைசா காசு பிரயோசனம் இல்லை. இவனயும் வயசுக்கு வந்த பொம்பள புள்ளையும் வச்சிகிட்டு வீட்டுவேலை செஞ்சி ஒத்த ஆளா நின்னு நாந்தான் கஷ்டபடுறேன். கொழந்த கால்ல மாட்டியிருந்த கொலுசு, காமாட்சி விளக்குனு வூட்ல இருக்க ஒரு பொருள் வுடாம அடகு வச்சு குடிச்சுருவான் எம் புருசன். அந்த ஆளு குடிச்சிட்டு வந்து பிரச்சினை பண்றதாலேயே வீட்டு ஓனருங்க துரத்திவுட்டு, இதுவரைக்கும் எட்டு வீட்டுக்கு மேல மாறிட்டோம். புருசன்தான் சேத்திக்கில்லைனா, புள்ளைனாச்சும் உருப்படுமானு பார்த்தா இவனும் இந்த நாசமத்த குடியைத்தான் குடிச்சுட்டு வந்து நிக்கிறான். 17 வயசுல குடி என்ன வேண்டியிருக்கு?

இவன் போராட்டத்துக்கு போயி ஜெயில்ல புடுச்சி போட்டுட்டாங்கனு புள்ளைங்க (பு.மா.இ.மு. தோழர்கள்) சொன்னப்ப நான் மண்ண அள்ளி தூத்தாத குறையா புள்ளைகள திட்டிபுட்டேன். அப்புறம் புள்ளைங்க எடுத்து சொன்னிச்சிங்க. 'சாராயக்கடையை மூடனும்னு நல்ல விசயத்துக்குத்தான் எம்புள்ள போராடி ஜெயிலுக்குப் போயிருக்கானு நினைக்கிறப்ப ஒருபக்கம் சந்தோசமாத்தா இருக்கு'. ஆனா, இவன் முதல்ல திருந்தனுமே?'' எனக் கேள்வியெழுப்புகிறார், இப்போராட்டத்தில் சிறை சென்றவர்களுள் ஒருவரான ஐ.டி.ஐ. மாணவர் மணியின் தாயார் அமுதம்.

மணி



குடிப்பழக்கமுள்ள ஒரு மாணவர் டாஸ்மாக்கிற்கு எதிரானப் போராட்டத்தில் பங்கெடுத்திருப்பது வியப்பைத் தரலாம். இதைவிட ஆச்சரியமானது, பச்சையப்பன் கல்லூரியில் தன் நண்பனைப் பார்க்கச் சென்ற மணி இப்போராட்டத்தில் கலந்துகொண்டு கைதாகியிருப்பது. மக்கள்திரள் போராட்டங்கள் எப்பொழுதுமே இப்படிப்பட்ட ஆச்சரியங்களை உருவாக்கக் கூடியவைதான்!

''ஏட்டய்யாவ பத்தி எஸ்.ஐ. கிட்ட கம்ப்ளைண்ட் பன்னினா என்ன ரெஸ்பான்ஸ் இருக்குமோ, அதுமாதிரித்தான், போலீசோட டார்ச்சர பத்தி ஜட்ஜ்கிட்ட சொன்னப்பவும் இருந்துச்சி. போலீசு அடிச்சாங்கன்னு சொன்னா, 'அடிச்சு கை-கால் உடைஞ்சிருச்சா, இல்ல இரத்தம் வந்திச்சான்னு' எங்களையே திருப்பிக் கேட்குது கயல்விழின்னு எழும்பூர் ஜட்ஜ். காக்கிச் சட்டை போட்ட போலீசும், கருப்பு கோட்டு போட்ட நீதிபதியும் எங்களுக்கு ஒன்னாதான் தெரிஞ்சாங்க...'' என்கிறார் ராணிமேரிக் கல்லூரி மாணவியான **வாணிசிறீ.**

''மூனுநாள்ல வெளிய வந்திருவோம்னுதான் முதல்ல நினைச்சோம். அப்புறம் ஒருமாசம்கூட ஆகலாம்னு தெரிஞ்சப்ப, கொஞ்சம் கஷ்டமாத்தான் இருந்திச்சி...'' என்று ராணிமேரிக்கல்லூரியில் இளங்கலை முதலாமாண்டு பயிலும் மாணவி **ஜான்சி** சொல்லி முடிப்பதற்குள் இடைமறித்த, அவரது சீனியரான **நிவேதிதா**, ''பொய் கேசு போட்டு போலீசு ஸ்டேசன்ல மூனு நாளா முழுநிர்வாணமா வச்சே கொடுமைப்படுத்துனாங்கன்னு ஒரு பெண் கைதி தனக்கு நேர்ந்த கொடுமையை விவரிச்சப்ப அதிர்ச்சியில் நாங்க உறைஞ்சி போனோம். பொய் கேசுலேயும், சின்ன சின்ன தப்பு செஞ்சதுக்காகவும் ஜெயிலுக்கு வந்திருக்க சாதாரண மக்களே இவ்வளவு கொடுமைகளை அனுபவிக்கும் பொழுது, போராட்டம் நடத்தி அரசியல் கைதியாக உள்ள வந்திருக்கோம், பத்துநாள் இருந்துட்டு போனா என்ன குடி முழுகிடப் போவுதுன்னு தோணுச்சி...'' என்கிறார், அவர்.

''டாஸ்மாக் குடியினால் பல பெண்களின் தாலி யறுக்கப்படுகிறது. அன்றாடம் குடிகார கணவன்களின் சித்திரவதைக்குள்ளாகிறார்கள் தமிழகத்தின் தாய்மார்கள். இவர்கள் அனுபவிக்கும் சித்திரவதைகளுடன் ஒப்பிடும்போது, போராட்டத்தின் பொழுதும் சிறைக்குள்ளும் நாங்கள் அனுபவித்த அடக்குமுறைகள் ஒன்றும் பெரிதாகப் படவில்லை.'' என்கின்றனர் சிறை சென்ற மாணவர்கள்.

● இளங்கதிர்

# 2ஜி வழக்கில் பார்ப்பன நரித்தனங்கள்!

**2ஜி மற்றும் மாறன் சகோதரர்கள் மீதான வழக்குகளைக் கிளறி ஊதிவிடுவதன் மூலம், தி.மு.க.வைத் தனிமைப்படுத்த முயற்சிக்கிறது, தமிழகப் பார்ப்பனக் கும்பல்.**

**எ**திர்வரும் தமிழக சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தனிமைப்படுத்தித் தோற்கடித்துவிட வேண்டும் என்பதில் ஜெயாவிற்கு இணையாக ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்த ஆடிட்டர் குருமூர்த்தி, தற்பொழுது பா.ஜ.க.வில் ஒட்டிக் கொண்டுள்ள சுப்பிரமணிய சுவாமி, தினமணி ஆசிரியர் வைத்தியநாத அய்யர் உள்ளிட்ட தமிழகத்துப் பார்ப்பனக் கும்பல் தீயாய் வேலை செய்து வருகிறது.

நான்காண்டு கால அ.தி.மு.க. ஆட்சியின் சாதனைகளைச் சொல்லி மீண்டும் ஆட்சியைப் பிடிக்கலாம் என்றால், தமிழ் நாட்டைக் குடிநாடாக ஆக்கியதுதான் அம்மாவின் ஒரே சாதனையாக இருக்கிறது. தமிழகத்திலுள்ள கட்சி சாராத 'நடுநிலை' வாக்காளர்கள் அனைவரையும் ஒரு ரேட்டு போட்டு வாங்கிவிட அம்மாவால் முடியுமென்றாலும், கொஞ்சத்துக்கு கொஞ்சம் பேரிடமாவது இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கும் அறவுணர்ச்சியும் சுயமரியாதை உணர்வும் அதற்குத் தடையாக இருக்கிறது. மற்ற எதிர்க்கட்சிகள் தி.மு.க.வோடு கூட்டணி சேர்வதைத் தடுக்கும் பார்ப்பனக் கும்பலின் நோக்கம் நிறைவேறினாலும், அ.தி.மு.க. ஆட்சி மீது உள்ள அதிருப்தி தி.மு.க.விற்கு வாக்குகளாக மாறுவதைத் தடுப்பதற்கு ஏதாவது செய்தாக வேண்டும். இப்படியான நிலையில் தமிழகத்துப் பார்ப்பனக் கும்பல் தி.மு.க. ஒரு ஊழல் கட்சி என்ற பழைய கள்ளைப் புதிய மொந்தையில் தமிழகத்து வாக்காளர்களின் முன் பரிமாறுவதற்குப் பல்வேறு சதித்தனங்களில் இறங்கியிருக்கிறது.

2ஜி வழக்கில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள ஆ.ராசா மீது புதிதாக சொத்துக் குவிப்பு வழக்கு; 2ஜி வழக்கு தொடர்பாக விசாரிப்பதற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உதவியாளர் சண்முகநாதன் மற்றும் கடந்த தி.மு.க. ஆட்சியின் பொழுது உளவுத்துறை ஏ.டி.ஜி.பி.யாக இருந்த ஜாபர் சேட் இருவருக்கும் சி.பி.ஐ. அழைப்பாணை அனுப்பவிருப்பதாகக் கசியவிடப்பட்ட தகவல்; தயாநிதி மாறன் தொலைத்தொடர்புத் துறை அமைச்சராக இருந்தபொழுது, தனது இல்லத்தில் சட்டவிரோதமாக பி.எஸ்.என்.எல். தொலைபேசி இணைப்புகளை வைத்திருந்த குற்ற வழக்கில் அவரைக் கைது செய்து விசாரிக்க சி.பி.ஐ. எடுத்த முயற்சிகள்; சன் குழும தொலைக்காட்சி மற்றும் பண்பலை வானொலி ஆகியவற்றுக்கான உரிமத்தை ரத்து செய்வதற்கு மத்திய உள்துறை அமைச்சகம் நடத்திய உள்குத்து வேலைகள்; ஏர்செல்-மேக்சிஸ் வழக்கில் முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரத்தை விசாரிக்கக் கோரி உச்சநீதி மன்றத்தில் சு.சாமி தாக்கல் செய்திருக்கும் மனு; 223 கோடி ரூபாய் அளவிற்கு கருப்புப் பணம் வாசன் கண் மருத்துவமனையில் முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும்; இம்மருத்துவமனையே ப.சிதம்பரம் குடும்பத்திற்குச் சொந்தமானதென்றும் ஆடிட்டர் குருமூர்த்தியும் தினமணியும் இணைந்து வைத்துள்ள குற்றச்சாட்டு - இவை அனைத்தும் கடந்த இரண்டு மாதங்களில் ஒன்றன் பின் ஒன்றாக தி.மு.க. தலைமை மற்றும் ப.சிதம்

போயசு தோட்டத்தில் நடந்த ஜெயா-மோடி சந்திப்பு.



பரத்தை நோக்கி எய்யப்பட்டுள்ளன. தமிழகத்துப் பார்ப்பனக் கும்பல் இந்த வழக்குகளில், குற்றச்சாட்டுகளில் பெருத்த அக்கறையும் ஈடுபாடும் காட்டு வதற்குப் பின்னே அதன் சுயநல நோக்கம் இருப்பதை யாரும் மறுத்துவிட முடியாது.


ஆ.ராசா மீது திடீரெனப் பாய்ந்தது சொத்துக்குவிப்பு வழக்கு.

ஆகஸ்டு முதல் வாரத்தில் சென்னை யில் நடந்த அரசு விழா ஒன்றில் கலந்து கொள்ள வந்த பிரதமர் மோடி, ஜெயாவை அவரது இல்லத்திற்கே சென்று சந்தித்து விட்டு டெல்லி திரும்பினார். அதற்கடுத்த பத்து நாட்களிலேயே ஆ.ராசா மற்றும் அவரது உறவினர்கள், நண்பர்களின் வீடு களில் சி.பி.ஐ. ரெய்டு நடத்தப்பட்டு, ஆ.ராசா, அவரது மனைவி உள்ளிட்டு 20 பேர் மீது சொத்துக் குவிப்பு வழக்கு பாய்ந்தது. இந்தக் காலவரிசையே காக்கை உட்கார்ந்த பிறகுதான் பனம் பழம் கீழே விழுந்தது என்பதை நிரூபிக்கிறது.

2ஜி முறைகேடு தொடர்பாக ஏற்கெனவே இரண்டு வழக்குகள் நடந்து வருகின்றன. உச்சநீதி மன்றத்தின் கண்காணிப்பில் கடந்த ஐந்தாண்டுகளாக நடந்து வரும் இவ்வழக்குகளில் இறுதிக்கட்ட வாதங்கள் முடிவடை யும் தருவாயில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவ்வழக் கின் தொடக்கத்திலேயே ஆ.ராசா மற்றும் அவரது உற வினர்கள், நண்பர்களின் வீடுகளைச் சோதனையிட்ட சி.பி.ஐ., அப்பொழுதே கண்டுபிடிக்க முடியாததை - ஆ.ராசா தனது வருமானத்திற்கு அதிகமாக 30 கோடி ரூபாய் அளவிற்கு சொத்து சேர்த்திருப்பதை இப் பொழுது கண்டுபிடித்திருப்பதாகக் கூறுவதே சந்தேகத் திற்கு இடமளிக்கிறது.

இந்த வழக்கு குறித்துத் தன்னிலை விளக்கம் அளித் துள்ள ஆ.ராசா, ''2004 முதல் 2010 வரையிலான காலக் கட்டத்தில் நானோ, எனது குடும்பத்தாரோ சொத்துக் குவிப்பில் ஈடுபடவில்லை என சி.பி.ஐ. விசாரணை அதி காரி விஜய் பிரயதர்ஷினி கடந்த 2013-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் டெல்லி சி.பி.ஐ. நீதிமன்றத்தில் வாக்கு மூலம் அளித்திருப்பதாக''க் குறிப்பிட்டிருக்கிறார். மேலும், இந்த வழக்கு டெல்லி யிலிருந்து அல்லாமல், சென்னையைச் சேர்ந்த சி.பி.ஐ. அதிகாரிகளால் போடப்பட் டிருப்பதாகவும் கூறியிருக் கிறார், அவர். இவையெல் லாம் உண்மையென்றால், இந்த வழக்கின் பின்னணி குறித்து சந்தேகம் கொள்ள முகாந்திரம் இருக்கிறது.

திமு.க. தலைவர் கருணாநிதியின் உதவியாளர் சண்முகநாதன் (இடது) மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரி ஜாபர் சேட்.



இந்த சந்தேகங்கள் குறித்து சி.பி.ஐ. எந்தவிதமான விளக் கத்தையும் அளிக்காதபொழுது, தமிழ கத்து பார்ப்பனக் கும்பலோ சி.பி.ஐ.யின் பிரதிநிதி போல, ''வழக்கை யார் போட் டால் என்ன? நீதிமன்றத்தில் வழக்கின் ஒரு கட்டத்தில் ஒரு கருத்து கூறப்பட் டால், ராசா மீது இனிமேல் சி.பி.ஐ. சந்தே கப்படக்கூடாது என அர்த்தமல்ல'' எனப் பாய்ந்திருப்பதோடு, 2ஜி வழக்கின் முடிவு தெரியும் முன்பே, ''ராசா ஒன்றும் அப்பழுக்கற்றவரோ, அப்பிராணியோ அல்ல'' எனத் தீர்ப்பெழுதிவிட்டது. (துக்ளக், 9.9.2015)

சண்முகநாதன், ஜாபர் சேட் விவ காரம் இதனைவிட வன்மமும் குதர்க் கமும் நிறைந்ததாக உள்ளது. சண்முக நாதன், ஜாபர் சேட் இருவருக்கு மிடையே கலைஞர் டி.வி.க்கு கார்ப்பரேட் நிறுவனங் களிடமிருந்து பல கோடி ரூபாய் பெறுமான விளம் பரங்கள் பெறுவது தொடர்பாக நடந்த உரையாடல் பதிவுகள் புதிய விவகாரமல்ல. 2ஜி வழக்கு தொடர் புடைய நீரா ராடியா டேப் விவகாரம் கசிந்தபொழுதே இவையனைத்தும் சந்திக்கு வந்துவிட்டன. அதனை இப்பொழுது கையில் எடுத்துக்கொண்டு தி.மு.க.விற்கு நெருக்கடி ஏற்படுத்துவதுதான் சி.பி.ஐ. - பார்ப்பனக் கூட்டணியின் நோக்கம்.

இந்த விவகாரத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி யின் உதவியாளர் சண்முகநாதனுக்கு முறையான அழைப்பாணை எதுவும் சி.பி.ஐ.யால் அனுப்பப்பட வில்லை. மாறாக, அவரை விசாரணைக்கு வருமாறு தொலைபேசி மூலம் சி.பி.ஐ. கோரியிருக்கிறது. இதற்கு சண்முகநாதன், ''எழுத்துபூர்வமாக அழைப் பாணை அனுப்புமாறு'' சி.பி.ஐ.க்குப் பதில் அளித்து விட்ட பிறகு, இந்த விவகாரம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

தி.மு.க. ஆட்சியில் உளவுத்துறை ஏ.டி.ஜி.பி.யாக இருந்த ஜாபர் சேட் ஐ.பி.எஸ். அதிகாரி என்பதால், அவரை விசாரிப்பதற்கு மத்திய உள்துறை அமைச்ச கத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்பதுதான் சட்டத்தின் நிலை. இந்த அனு மதியை சி.பி.ஐ. பெறுவதற்கு முன்பே, அவரது பெயரை வழக்கில் சேர்த்து விசாரிக்கப் போவதாக கிசுகிசுக்கள் இறக்கை கட்டிப் பறந்தன.

நீரா ராடியா டேப் விவகாரத் தில் சம்பந்தப்பட்டவர்களை 2ஜி வழக்கில் இணைக்க வேண்டும் எனக் கோரி சி.பி.ஐ. தாக்கல் செய்த மனுவின் மீது உச்சநீதி மன்றம்

இதுவரை எந்தப் பதிலும் அளிக்கவில்லை. இந்த டேப் விவகாரத்தில் பழம் பெரும் தரகு முதலாளிகளான ரத்தன் டாடா, அம்பானி போன்றோரும் சம்பந்தப் பட்டிருப்பதால், உச்சநீதி மன்றம் இந்த விவகாரத்தை அப்படியே கிடப்பில் போட்டு வைத்திருக்கிறது. இப்படிபட்ட நிலையில் தி.மு.க.வுக்கு நெருக்கமானவர்கள் மட்டும் குறி வைக்கப்படுவதற்கு அரசியல் பழி வாங்குதல் தவிர்த்து வேறு காரணம் இருக்க முடியாது.

தயாநிதி மாறன் தொலைதொடர்புத் துறை அமைச்சராக இருந்தபொழுது அவருக்குத் துறைரீதியாக வழங்கப்பட்ட 3 இலவச உயர்ரக தொலைபேசி இணைப்புகளை ரகசியமாக நீட்டித்து, அதில் இருந்து 764 தொலைபேசி இணைப்புகளை உருவாக்கி, அவற்றை சன் டி.வி.க்குப் பயன்படுத்தியதன் மூலம் அரசுக்கு 229.2 கோடி ரூபாய்க்கு இழப்பை ஏற்படுத்தியிருக்கிறார் என்று ஆடிட்டர் குருமூர்த்தி தினமணியில் திரும்ப திரும்ப எழுதி வருகிறார். மேலும், சட்டவிரோத இணைப்புகளை வைத்திருப்பது தேசப் பாதுகாப்பை அச்சுறுத்தும் குற்றமாகும் என்றும் பீதியூட்டி வருகிறார்.

ஆனால், சி.பி.ஐ. விசாரித்து வரும் இந்த வழக்கு குருமூர்த்தி குறிப்பிடுவது போல பிரம்மாண்டமானதாக இல்லை. தயாநிதி மாறன் தனக்கு வழங்கப்பட்ட மூன்று இலவச இணைப்புளை நீட்டித்து, 364 இணைப்புகளைச் சட்டவிரோதமாக உருவாக்கி, அதன் மூலம் அரசுக்கு 1.2 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தினார் என்பதுதான் சி.பி.ஐ. வைத்துள்ள குற்றச்சாட்டு.

குருமூர்த்தி வாதிடுவது போல இது 229.2 கோடி ரூபாய் பெறுமான மோசடி என்றால், சி.பி.ஐ. ஊழல் தொகையைக் குறைவாக மதிப்பிட்டு, வழக்கை ஏன் சப்பாணியாக்கிவிட்டது என்ற கேள்வி எழுகிறது. மாறாக, சி.பி.ஐ., குறிப்பிடும் தொகைதான் உண்மை என்றால், 2ஜி வழக்கில் 1.76 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு தி.மு.க. ஊழல் செய்துவிட்டது போலக் கூசாமல் புளுகி வரும் பார்ப்பனக் கும்பலின் இன்னொரு பித்தலாட்டமான ஏற்பாடாக இவ்வழக்கு ஊதிப்பெருக்கப் படுகிறது.

இந்த வழக்கில் தயாநிதி மாறனைக் கைது செய்வதற்கு இடைக்கால தடைவிதித்து உத்தரவிட்டுள்ள உச்சநீதி மன்றம், ''உ.பி.யில் நடந்துள்ள 8,000 கோடி ரூபாய் பெறுமான ஊழலில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளவர்களைக் கைது செய்ய முயலாத நீங்கள், தயாநிதி மாறனைக் கைது செய்ய ஏன் துடிக்கிறீர்கள்?'' என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது. மாறன் சகோதரர்கள் யோக்கியமானவர்கள் இல்லைதான். அதே அளவிற்குப் பார்ப்பனக் கும்பலும் ஊழலை எதிர்ப்பதில் சுய இலாபமில்லாத பரிசுத்தவான்கள் இல்லை என்பதை உச்சநீதி மன்றத்தின் கேள்வி அம்பலப்படுத்துகிறது.

''சன் டி.வி.க்கு அயல்நாட்டிலிருந்து முறைகேடான வழியில் முதலீடு வந்திருக்கிறது; மாறன் சகோதரர்கள் மீது கிரிமினல் வழக்குகள் பதிவாகியிருக்கின்றன'' என்ற காரணங்களை முன்வைத்துதான் சன் குழுமம் பண்பலை ஏலத்தில் பங்கு பெறுவதற்குத் தடை விதித்தது, மத்திய உள்துறை அமைச்சகம். இதே அளவுகோலைப் பிரயோகித்தால் 2ஜி வழக்கில் கிரிமினல் வழக்கை எதிர்கொண்டுள்ள ரிலையன்ஸ் நிறுவனமும் பண்பலை ஏலத்தில் பங்கு கொள்வதைத் தடை செய்திருக்க வேண்டும். ஆனால், அப்படி நடக்கவில்லை என்பதே அரசியல் காரணங்களுக்காகவே சன் குழுமத்தின் மீது தடை விதிக்கப்பட்டது என்பதை அம்பலப்படுத்துகிறது. சன் குழுமம் இத்தடைக்கு எதிராக சென்னை, டெல்லி உயர்நீதி மன்றங்களில் வழக்குப் போட்டு சாதகமான தீர்ப்பை பெற்ற பிறகும்கூட, உள்துறை அமைச்சகம் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அப்பீலுக்கு மேல் அப்பீல் செய்து சன் குழுமத்தை முடக்கிப் போட்டு விடும் முயற்சியில் இறங்கித் தோற்றுப் போனது.

''வாசன் கண் மருத்துவமனையில் 223 கோடி ரூபாய் அளவிற்கு கருப்புப் பணம் முதலீடு செய்யப் பட்டுள்ளது; அம்மருத்துவமனையின் நிர்வாகம்

முன்னாள் தொலைதொடர்புத் துறை அமைச்சர் தயாநிதி மாறன் மற்றும் சன் குழும நிர்வாக இயக்குநர் கலாநிதி மாறன்.



## குருமூர்த்தி - தமிழ்நாட்டின் குமாரசாமி!

**த**யாநிதி மாறன், சென்னை கோபாலபுரத்தில் உள்ள தனது வீட்டில் 341 அதிநவீன இணைப்புகளையும், போட் கிளப் பகுதியில் உள்ள தனது நவீன பங்களாவில் 323 அதிநவீன இணைப்புகளையும் ஆக மொத்தம் 764 இணைப்புகளைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தி வந்தார் எனக் குற்றஞ்சாட்டியிருக்கிறார், குருமூர்த்தி. (தினமணி, 15.8.2015, பக்.8) ஆனால், இவையிரண்டையும் எப்படிக் கூட்டினாலும் 664 என்றுதான் விடை வருகிறது. இந்த வகையில் நானும் குமாரசாமிதான் எனக் கூவியிருக்கிறார், ஆடிட்டர் குருமூர்த்தி. வேத கணிதம், வேத கணிதம் என்று இந்து மதவெறிக் கும்பல் கூப்பாடு போட்டு வருகிறதே, அதன்படி கூட்டினால் இப்படித்தான் விடை வருமோ!

ஏறத்தாழ 20 கோடி ரூபாய் அளவிற்கு வரி ஏய்ப்பில் ஈடு பட்டிருக்கிறது; இம்மருத்து வமனையின் உண்மையான அதிபர்கள் ப.சிதம்பரம் குடும் பத்தினர்தான்'' என்று குரு மூர்த்தியும் தினமணியும் வைக்கும் குற்றச்சாட்டுகள் மைய அரசால் வழக்காக எடுத்துக் கொள்ளப்பட வில்லை. வருமான வரித் துறையின் சென்னை மண் டலத்தில் ஆணையராகப் பணி யாற்றி வந்த எம்.சீனிவாச ராவ், தன்னைப் பணியிட மாற்றம் செய்ததற்கு எதிராக ஒரு வழக்கை மத்திய தீர்ப் பாயத்தில் தொடுத்தார். அந்த வழக்கில், ''வாசன் கண் மருத்துவமனையில் நடந்துள்ள முறைகேடுகளைக் கண்டுபிடித்து, அந்நிறுவனம் மீதும், அதனின் உண்மை யான உரிமையாளர்களான ப.சிதம்பரம் குடும்பத்தினர் மீதும், அவர்களின் கூட்டாளியான ஜே.டி. குழுமம் மீதும் கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண் டும் என வலியுறுத்தி வந்தேன். அதனால்தான் உயர் அதிகாரிகள் தன்னைப் பணியிட மாற்றம் செய்துவிட்டதாக''க் குறிப்பிட்டுள்ளார். அவர் முன் வைத்துள்ள குற்றச் சாட்டுகள் ப.சிதம்பரத்திற்கு எதிரானது என்பதால் தின மணியும் குருமூர்த்தியும் அதனைக் கையில் எடுத்துக் கொண்டு பரபரப்பாக எழுதி வருகின்றனர்.



ஆடிட்டர் குருமூர்த்தி (இடது) மற்றும் தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன்.

''வாசன் கண் மருத்துவமனையில் கருப்புப் பணத்தை முதலீடு செய்த ஜே.டி.குழுமம் மீது ஏன் நட வடிக்கை எடுக்கவில்லை?'' என்ற கேள்வியை இதற்குப் பொறுப்பான அதிகாரியான நாகபிரசாத் என் பவரிடம் வருமான வரித்துறை ஆணையரான சீறிவத் சவா கேட்டபொழுது, ''மேலிடத்தின் அறிவுரையின் பெயரில்தான் நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை'' என்று அதிகாரிகள் பதில் அளித்துள்ளனர். இதனைத் தனது கட்டுரையிலேயே குறிப்பிடும் குருமூர்த்தி, ''வருமான வரித்துறையில் ஆட்சி மாறிய பிறகும் ப.சிதம்பரத்தின் ஆட்கள் உயர் பதவிகளில் இருந்து வருகிறார்கள். இவையெல்லாம் நிதியமைச்சர் அருண் ஜெட்லிக்குத் தெரிந்துதான் நடக்கிறதா? அவர் ஏன் நட வடிக்கை எடுக்கத் தயங்குகிறார்?'' என்ற கேள்விகளை எழுப்பியிருக்கிறார்.

வாசன் கண் மருத்துவமனை கருப்புப் பண புழக்கத் திலும் வரி ஏய்ப்பிலும் ஈடுபட்டிருப்பதற்கு ஆதாரங் கள் இருந்தும், அதன் மீதும், அந்நிறுவனத்தின் உண் மையான உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக் கப்படாமல் கிடப்பில் போடப்படுகிறதென்றால், இந்த விவகாரத்தில் முதன்மைக் குற்றவாளி மோடி அரசுதான். ஆனால், குருமூர்த் தியும் தினமணியும் தமது அர சியல் நோக்கங்களுக்காக மோடி அரசையும், நிதியமைச் சகத்தையும் பின்னுக் குத் தள்ளிவிட்டு, ப.சிதம்பரத்தின் மீது மட்டும் பாய்கிறார்கள்.

இந்தியத் தரகு முதலாளி கள் வெளிநாடுகளில் குவித்து வைத்துள்ள கருப்புப் பணத்தைத் தமது அரசு கொடுத்துள்ள சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு வெள்ளையாக்கிக் கொள்ளு மாறு கெஞ்சிக் கொண்டிருக் கிறது, மோடி அரசு. மேலும், கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது வரியே விதிக்கக் கூடாது என்பதைத் தனது கொள்கையாகக் கொண்டும் செயல்பட்டு வருகிறது. வரி ஏய்ப்பில் ஈடுபட்டுள்ள வோடாஃபோன், நோக்கியா, வீடியோகான், என்.டி.டி.வி. உள்ளிட்ட கார்ப்பரேட் நிறுவனங்களின் மீதான வழக்குகளை நீதிமன்றத்திற்கு வெளியே முடித்துக் கொள்ளப் போவதாக உத்தரவாதமளித்திருக் கிறார், நிதியமைச்சர். இப்படிபட்ட நிலையில் ப.சி.க்குச் 'சொந்தமான' வாசன் கண் மருத்துவமனை வரி ஏய்ப்பு மற்றும் கருப்புப் பண புழக்கத்தில் ஈடுபட் டிருப்பது குறித்த குருமூர்த்தியின் அறச்சீற்றம், தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் மோசடித்தனமும் விளம்ப ரத்தனமும் கொண்டதாகும்.

''1970-களில் வெறும் 265 ரூபாய் இலஞ்சம் பெற்ற வருக்கு 30 ஆண்டுகள் கழித்து ஒன்றரை ஆண்டு சிறை தண்டனையும், 50,000 ரூபாய் அபராதமும் விதிக்கப் படும்பொழுது, தயாநிதி மாறன், ப.சி. போன்றவர்கள் தப்பித்துவிடக் கூடாது'' என ஆதங்கப்பட்டு எழுது கிறார், குருமூர்த்தி. நிச்சயமாக; ஆனால், அவரின் இந்த தார்மீக கோபமும் ஆதங்கமும் ஜெயாவை நோக்கித் திரும்ப மறுப்பது ஏன்?

ஜெயாவை விடுதலை செய்த கணக்குப் புலி குமார சாமிகூட, அவர் வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவிக்கவில்லை எனத் தீர்ப்பெழுதவில்லை. அந்தக் கொள்ளை 10 சதவீதத்திற்குள் இருக்கிறது என்பது தான் குமாரசாமியின் கணக்கு. 265 ரூபாய் இலஞ்சம் பெற்றவருக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறை தண்டனை என்றால், குமாரசாமியின் தீர்ப்புப்படி 2.82 கோடி ரூபாய் சொத்தை வருமானத்திற்கு அதிகமாகச் சேர்த் துள்ள ஜெயாவிற்கு எத்தனை ஆண்டு சிறை தண்டனை என்ற கேள்வியை தினமணியும் குருமூர்த்தியும் ஒரு நாளும் எழுப்பியதேயில்லை. தண்ணீரைவிட ஒரே சாதி இரத்தம் அடர்த்தியானது அல்லவா!

● குப்பன்

## வியாபம் ஊழல்:

# பார்ப்பன கிரிமினல்தனம்!

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பல் ஊழல் செய்தால், அது எத்துணை கிரிமினல்தனமாகவும், சதிகள் நிறைந்த பயங்கரமானதாகவும் இருக்கும் என்பதற்கு வியாபம் ஊழலே சாட்சி.

''வியாபம் ஊழல் தொடர்பாக 140 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன; 3,800 பேர் மீது கிரிமினல் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது; இவர்களுள் 2,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; 800 பேர் தேடப்படும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள்; இந்த ஊழலின் மூலம் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்த 1,087 மாணவர்களின் சேர்க்கை ரத்து செய்யப்பட்டிருக்கிறது; இவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் சராசரியாக தலைக்கு 25 இலட்ச ரூபாய் இலஞ்சம் பெறப்பட்டிருக்கிறது; வியாபம் நடத்திய 68 போட்டித் தேர்வுகளின் மூலம் 1,40,000 பேர் முறைகேடான வழியில் அரசுப் பணிகளில் சேர்ந்திருப்பதாகக் கண்டறிப்பட்டிருக்கிறது; இந்த ஊழலால் 76.76 இலட்சம் விண்ணப்பதாரர்கள் (மருத்துவக் கல்லூரிகளிலும் அரசு வேலையிலும் சேருவதற்கு விண்ணப்பித்தவர்கள்) பாதிக்கப்பட்டிருக்கின்றனர்'' என்றொரு புள்ளி விவரத்தை இந்து நாளிதழ் (ஜூலை 10, பக்.13) வெளியிட்டிருக்கிறது. இப்புள்ளிவிவரங்கள் வியாபம் ஊழலின் ஆழத்தையும் அகலத்தையும் எடுத்துக்காட்டினாலும், இவை மட்டுமே வியாபம் ஊழலின் முழுமையான சித்திரத்தைத் தந்துவிடவில்லை. அந்த ஊழலின் இன்னொருபுறம் விசாரணை நாடகங்கள், சாட்சியங்களைப் படுகொலை செய்வது, அச்சுறுத்துவது, ஆதாரங்களை அழிப்பது என அச்சமூட்டக்கூடியதாக விரிவடைகிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு வாரியத்திற்கு (டி.என்.பி.எஸ்.சி.) இணையான வியாபத்தில் ஊழல்களும் முறைகேடுகளும் மலிந்து கிடப்பதை 2007-ஆம் ஆண்டிலேயே மத்தியப் பிரதேச உள்ளாட்சி தணிக்கை அமைப்பு கண்டுபிடித்துக் கூறியது. இதனைத் தொடர்ந்து, வியாபம் நடத்திய மருத்துவக் கல்வி நுழைவுத் தேர்வுகளில் பல்வேறு முறைகேடுகளும் மோசடிகளும் ஆள்மாறாட்டங்களும் நடந்திருப்பதை 2008, 2009 -ஆம் ஆண்டுகளிலேயே ம.பி. மாநில சுயேச்சை சட்டமன்ற உறுப்பினர்களான பிரதாப் கிரேவாலும் பரஸ் சக்லேகாவும் சட்டமன்றத்திலேயே அம்பலப்படுத்தினர். அதே ஆண்டில் இந்தூரைச் சேர்ந்த டாக்டர் ஆனந்த் ராய் வியாபத்தில் நடந்துவரும் முறைகேடுகள் குறித்து விசாரிக்குமாறு கோரி ம.பி.மாநில உயர்நீதி மன்றத்தில் பொது நல வழக்கு தொடுத்தார்.

இதற்குப் பிறகு அம்மாநில முதல்வர் சிவராஜ் சௌஹான் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாக, இக்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்கு மருத்துவக் கல்வி துணை இயக்குநர் தலைமையில் கமிட்டியொன்றை அமைத்தார். சோளக்காட்டு பொம்மைக்கு இணையான இக்கமிட்டி இம்முறைகேடுகளை இரண்டு ஆண்டுகளாக விசாரணை செய்ததாக ஒரு நாடகத்தை நடத்தி, மோசடியான அறிக்கையொன்றை 2011-ஆம் ஆண்டில் அரசிடம் அளித்தது.

டாக்டர் ஆனந்த் ராய் 2013-ஆம் ஆண்டில் வியாபம் முறைகேடுகள் குறித்து ம.பி. மாநில உயர்நீதி மன்றத்தில் மீண்டும் ஒரு பொதுநல வழக்கைத் தொடுத்தார். இவ்வழக்கைத் தொடர்ந்து இம்முறைகேடுகள் குறித்து விசாரிப்பதற்கு சிறப்புப் படையொன்றை (Special Task Force) அமைத்தது, அம்மாநில பா.ஜ.க. அரசு. இந்தப் படையின் விசாரணையும் உப்புக்குச் சப்பாணியாக நடப்பது அம்பலமாக, அந்தப் படையின் விசாரணையை மேற்பார்வையிடுவதற்கு சிறப்புப் புலனாய்வுக் குழுவொன்றை (Special Investigation Team) அமைத்து உத்தரவிட்டது, ம.பி. உயர்நீதி மன்றம். இதற்குப் பிறகும் குற்றவாளிகளைத் தப்ப வைக்கும் உள்நோக்கத்தோடு விசாரணை நடத்தப்பட்டதால், இம்முறைகேடுகள் குறித்த விசாரணையை மையப் புலனாய்வுத்துறையிடம் ஒப்படைக்கக் கோரி டாக்டர் ஆனந்த் ராய், ஆஷிஷ் சதுர்வேதி, பிரசாந்த் பாண்டே, காங்கிரசு கட்சியைச் சேர்ந்த திக் விஜய் சிங் உள்ளிட்டோர் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்ததைத் தொடர்ந்து வியாபம் ஊழல் வழக்கு சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இதிலும்கூட, வியாபத்தில் நடந்துள்ள ஊழல்தான் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதே தவிர, வியாபம் ஊழலின் இன்னொரு அங்கமான, தனியார் மருத்துவக் கல்லூரி அதிபர்கள் தனியாகவும், வியாபத்தோடு கூட்டுச் சேர்ந்தும் நடத்தியிருக்கும் 10,000 கோடி ரூபாய் பெறுமான டி.எம்.ஏ.டி. ஊழல் (டிமாட் ஊழல்) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

•••

விசாரணை கமிசன், அதன் பிறகு சிறப்புப் படை, அதனைக் கண்காணிக்க சிறப்புப் புலனாய்வுக் குழு, உச்ச நீதி மன்றத்தில் வழக்கு, அதனைத் தொடர்ந்து இப்பொழுது சி.பி.ஐ., என அனுமார் வால் போல விசாரணை நீண்டுகொண்டே போனாலும், எந்தவொரு விசாரணை அமைப்பும் வியாபம் ஊழலின் உயிர்நாடி மீது கைவைக்கவே மறுக்கின்றன. இந்த வழக்கு தொடர்பாக 2,000 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்; அவர்களுள் பெரும்பாலோருக்குப் பிணை வழங்கப்படவில்லை என்பதெல்லாம் உண்மைதான். ஆனால், இந்த இரண்டாயிரம் பேரில் ம.பி. மாநில முன்னாள் உயர்கல்வித் துறை அமைச்சர் லட்சுமிகாந்த் சர்மா, ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. தலைவர்களுக்கு நெருக்கமான சுதிர் சர்மா, வியாபமில் தேர்வுக் கண்காணிப்பாளராக இருந்த பங்கஜ் திரிவேதி, இடைத்தரகர்கள் வலைப்பின்னலை இயக்கி வந்த இந்தூரைச் சேர்ந்த மருத்துவர் ஜகதீஷ் சாகர் உள்ளிட்ட ஒரு சிலரைத் தவிர, ஆகப் பெரும்பாலோர் இலஞ்சம் கொடுத்து மருத்துவக் கல்லூரிகளில் இடம் பிடித்த மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் எலும்புத் துண்டுக்கு ஆசைப்பட்டு ஆள் பிடிக்கும் ஏஜெண்டுகளாக வேலை பார்த்து வந்த புரோக்கர்கள் உள்ளிட்ட பலியாடுகள் தான்.

ம.பி. மாநில முதல்வர் சிவராஜ் சௌஹான்தான் 2008 முதல் 2012 வரையில் மருத்துவக் கல்வித் துறையின் தலைவராகவும் இருந்தார். அந்தக் கட்டத்தில் தான் வியாபம் ஊழல் அதன் உச்சத்தை எட்டியது. வியாபமில் கணினிப் பொறியாளராக வேலை பார்த்து தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ள நிதின் மொஹிந்திரா இரகசியமாக வைத்திருந்த கணினிப் பதிவுகளை ஆராய்வதற்காக சிறப்புப் படையால் நியமிக்கப்பட்ட பிரசாந்த் பாண்டே, அப்பதிவுகளில் 64 பேருக்கு சிவராஜ் சௌஹான் பரிந்துரை செய்திருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் குற்றஞ் சுமத்தியிருக்கிறார். இது தொடர்பான கணினிப் பதிவுகளும் ம.பி. உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சிவராஜ் சௌஹானின் மனைவி சாதனா சிங் போக்குவரத்து காவலர் தேர்வில் தனது சொந்த ஊரைச் சேர்ந்த 19 பேரைத் தேர்ச்சி பெற செய்யக் கூறி, சுதிர் சர்மாவிற்கு குறுஞ்செய்தி அனுப்பியிருப்பதற்கான ஆதாரங்கள் அம்பலமாகியிருக்கின்றன. ஆனால், இவர்கள் இருவர் பெயரும் குற்றப்பத்திரிகையில் இடம் பெறவில்லை என்பது மட்டுமல்ல, பெயரளவுக்குக்கூட இவர்களிடம் விசாரணை நடத்தப்படவில்லை.

சௌஹானின் நெருங்கிய உறவினரும் ம.பி. மாநில பிற்பட்டோர் கமிசன் தலைவருமான குலாப் சிங் கிராரின் மகன் 2011-ஆம் ஆண்டு நடந்த முதுகலை மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வில் முதலிடம் பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த ஊழலை விசாரித்து வந்த சிறப்புப் படை கிராரைத் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க, அவரோ அரசு விழாக்களில் சௌஹானின் அருகே அமர்ந்துகொண்டு அதிரடிப் படைக்கு பெப்பே காட்டிவந்தார். இந்த ஊழல் வழக்கு சி.பி.ஐ. வசம் வந்த பிறகும் அவர் கைது செய்யப்படவில்லை.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முன்னாள் தலைவர் கே.எஸ்.சுதர்சன் மிஹிர் குமார் என்ற தனது எடுபிடிக்கு அரசு வேலை வாங்கித் தரசிபாரிசு செய்ததற்கான ஆதாரங்கள் பத்திரிகைகளில் அம்பலமான பிறகும் கே.எஸ். சுதர்சனிடம் விசாரணைகூட நடத்தப்படவில்லை.

சிறப்புப் படையால் விசாரிக்கப்பட்ட சௌஹானின் தனி உதவியாளர் பிரேம் பிரசாத் யாதவிற்கு எவ்விதத் தயக்கமும் இன்றி நீதிமன்றம் முன்ஜாமீன் வழங்கியிருக்கிறது. வியாபம் ஊழல் தொடர்பாக கைது செய்யப்பட்ட சௌஹானின் குடும்ப மருத்துவர் அஜய் மேத்தா மூன்றே மாதத்தில் பிணையில் வந்துவிட்டார். இவர்கள் இருவரின் பிணை மனுக்கள் மீதான விசாரணையில், அதனை எதிர்க்க வேண்டிய சிறப்புப் படையோ குற்றவாளிகளின் கூட்டுக் களவாணியாகச் செயல்பட்டிருக்கிறது.



''நிதின் மொஹிந்திரா இரகசியமாக வைத்திருந்த கணினிப் பதிவுகளில்தான் சிவராஜ் சௌஹான் தொடங்கி கே.எஸ். சுதர்சன் வரையிலும் யார், யாருக்கு சிபாரிசு செய்தார்கள், அதற்கு எவ்வளவு பணம் கைமாறியது என்ற விவரங்களெல்லாம் இருந்தன. இந்தப் பதிவுகள் சிறப்பு அதிரடிப் படைக்குக் கிடைத்த பிறகு, அப்படை அப்பதிவுகளில் காணப்பட்ட அரசியல் செல்வாக்குமிக்க முக்கிய குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நோக்கில் விசாரணையைத் திசை திருப்பியதாக'' டாக்டர் ஆனந்த் ராய் உள்ளிட்டவர்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

மாநில போலீசு மட்டுமல்ல, சி.பி.ஐ. விசாரணையும் குற்றவாளிகளுக்குச் சாதகமாகச் செல்வதை யோகேஷ் உப்ரித்துக்கு வழங்கப்பட்டுள்ள பிணை எடுத்துக் காட்டுகிறது. யோகேஷ் உப்ரித் அரசு நிறுவனமான வியாபத்தில் இயக்குநராகப் பணியாற்றியவர். அதிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு தனியார் மருத்துவக் கல்லூரி சங்கம் நடத்தி

வரும் டிமாட் தேர்வுகளின் கட்டுப்பாட்டு அதிகாரியா கப் பணியாற்றினார். வியாபம் மற்றும் டிமாட் ஊழல் கள் இரண்டிலும் முக்கியப் புள்ளியாக இயங்கியவர் உப்ரித். கடந்த மே மாதம் கைது செய்யப்பட்ட உப்ரித் செப்.4 அன்று பிணையில் வந்துவிட்டார். இவர் மீது உரிய காலத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் இருந்ததன் மூலம் இவருக்குப் பிணை கிடைப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது, சி.பி.ஐ. குற்றத் தின் தன்மை கருதி இவருக்குப் பிணை வழங்க உயர்நீதி மன்றம் மறுத்திருக்க முடியும். ஆனால், நீதிமன்றமோ சி.பி.ஐ. மீது பழிபோட்டுவிட்டுத் தமது தார்மீக பொறுப்பை, கடமையைத் தட்டிக் கழித்துவிட்டது.

•••

அரசியல் செல்வாக்குமிக்க உப்ரித் போன்ற சுறாமீன் களுக்குப் பிணை கிடைத்திருப்பதும், 2,000 குட்டி மீன் களுக்குப் பிணை மறுக்கப்படுவதும், முக்கிய சாட்சியங் கள் மர்மமான முறையில் இறந்து போவதும், இந்த ஊழலை அம்பலத்துக்குக் கொண்டுவந்த டாக்டர் ஆனந்த் ராயும் ஆஷிஷ் சதுர்வேதியும் தினந்தோறும் மிரட்டப்படுவதுமாக இந்த விசாரணை நாடகத்தில் காட்சிகள் நகர்ந்து செல்கின்றன.

இந்த ஊழல் அம்பலத்திற்கு வந்த 2009-ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரையில், இந்த ஊழலோடு ஏதாவது ஒரு வகையில் தொடர்புடைய 48 பேர் இயற்கைக்கு மாறாக, அகால மரணமடைந்துள்ளனர். இந்த ஊழலை விசாரித்து வந்த சிறப்புப் படை இவர்களுள் 23 பேர் மர்மமான முறையில் மரணமடைந்திருப்பதாக ம.பி. உயர்நீதி மன்றத்தில் கூறியிருக்கிறது. இறந்து போன வர்களுள் கணிசமானோர் மருத்துவ மாணவர்கள் மற்றும் இடைத்தரகர்கள். இந்த மர்ம மரணங்களுக்கு சாலை விபத்துகள் முக்கிய காரணியாக இருக்கிறது.

இந்த அகால மரணங்களுள் மருத்துவ மாணவி நம்ரதா தமோர், ஆஜ் தக் தொலைக்காட்சி நிறு வனத்தைச் சேர்ந்த செய்தியாளர் அக் ஷய் சிங், ஜபல்பூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் டி.கே.சகால்லே, அதே மருத்துவக் கல்லூரியில் சகால் லேவுக்கு அடுத்து முதல்வராகப் பத வியேற்ற அருண் ஷர்மா, ம.பி. மாநில கவர்னரின் மகன் ஷைலேஷ் யாதவ், வியாபம் ஊழலை அம்பலப் படுத்தி வந்த மருந்தாளுநர் விஜய் சிங் படேல், கால்நடை மருத்துவக் கல்வி மாணவர் அமித் சாகர் உள்ளிட்ட 10 மரணங்கள் மிகவும் சந் தேகத்திற்குரியவை என்கிறார், டாக்டர் ஆனந்த் ராய்.

வியாபம் ஊழல் மூலம் ஜபல்பூர் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை ரத்து செய்

பா.ஜ.க. அரசு மூடிமறைக்க முயன்ற வியாபம் ஊழலை அம்பலப்படுத்திக் குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரி சட்டப் போராட்டங்களை நடத்தி வரும் (கடிகாரச் சுற்றுப்படி) டாக்டர் ஆனந்த் ராய், ஆஷிஷ் சதுர்வேதி, பிரசாந்த் பாண்டே, பரஸ் சக்லேகா.



யப்பட்ட நிலையில், அந்த மாணவர்கள் தந்த நெருக்க டியைச் சமாளிக்க முடியாமல் விடுப்பில் சென்ற அம்ம ருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் சகால்லே, தனது உடல் முழுவதும் தீ கொழுந்துவிட்டு எரியும் நிலையில் தெருவில் ஓடிவந்து மரணமடைந்தார். இவர் தீக் குளித்துத் தற்கொலை செய்து கொண்டதாக வழக்கு மூடப்பட்டது.

இவரையடுத்து ஜபல்பூர் மருத்துவக் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட டாக்டர் அருண் ஷர்மா, பதவியேற்ற ஒரு மாதத்திற்குள்ளாகவே டெல்லியிலுள்ள விடுதி அறையொன்றில் இறந்து கிடந் தார். அவரது உடலுக்கு அருகே சில மாத்திரைகளும் விஸ்கி பாட்டிலும் கண்டெடுக்கப்பட்டன.

மர்மமான முறையில் இறந்து போன மருத்துவக் கல்லூரி மாணவி நம்ரதா தமோரின் பெற்றோர்களிடம் அவரது மரணம் குறித்து பேட்டி எடுக்கச் சென்ற ஆஜ்தக் தொலைக்காட்சி நிருபர் அக்ஷய் சிங், அப்பேட்டியை முடித்துக் கொண்டு திரும்பும் வழியில் வாயில் நுரை தள்ளி இறந்து போனார்.

பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் இறந்து கிடந்த விஜய் சிங் படேலின் உடலில் விஷம் இருந்ததை பிரேத பரிசோதனை அறிக்கை உறுதி செய்திருக்கிறது. இந்தூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இடைத்தரகர் நரேந்திரசிங் தமோர் மாரடைப்பால் இறந்து போனதாகக் கூறப்பட்டாலும், அவரது சாவு குறித்துப் பல சந்தேகங் கள் எழுப்பப்பட்டுள்ளன.

இத்தகைய மர்ம மரணங்களைத் தற்கொலை யென்றோ அல்லது விபத்து என்றோ குறிப்பிட்டு வழக்கை முடித்து விடுவதில் ம.பி. மாநில பா.ஜ.க. அரசு கீழ்த்தரமாகவும், கிரிமினல் முறையிலும் முயன்றுள்ள தற்கு மருத்துவ மாணவி நர்மதா தமோரின் கொலையை உதாரணமாகக் கொள்ள முடியும். இந்தூரைச் சேர்ந்த நர்மதா தமோரின் உயிரற்ற உடல் ஜனவரி 2012-இல் உஜ்ஜையினிக்கு அருகே, ரயில் தண்டவாளத்தின் ஓரத்தில் கண் டெடுக்கப்பட்டது. அவர் மிகவும் கொடூரமான மூச்சுத் திணறலால் இறந்து போனதாக அவரது சடலத்தைப் பரிசோதனை செய்த மருத்துவக் குழு குறிப்பிடுகிறது. இந்த மருத்துவ மொழியின் பொருள் அவர் கழுத்து நெறிக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்பதுதான்.

முதலில் இதனைக் கொலை வழக்காகப் பதிவு செய்த ம.பி. போலீசு, இரண்டு ஆண்டுகள் கழித்து அவர் தற்கொலை செய்து கொண்ட தாகக் குறிப்பிட்டு வழக்கை மூடியது. இதற்கு ஆதாரமாக நர்மதா வின் மரணம் குறித்து ம.பி. அரசின்

மருத்துவ சட்டத்துறையின் தலைவர் பத்குர் அளித்த அறிக்கையை போலீசார் காட்டியுள்ளனர். பத்குர் அறிக்கை அளித்த விதமே அலாதியானது மட்டுமல்ல, சதித்தனமானதும்கூட. அவர் நர்மதாவின் உடலைப் பரிசோதனை செய்யாமல், அவரது சடலத்தின் புகைப்படங்களைக் கொண்டு நர்மதா தற்கொலை செய்து கொண்டதாக அறிக்கை அளித்திருக்கிறார். ம.பி. போலீசார் இந்த மோசடித்தனமான அறிக்கையை ஆதாரமாகக் காட்டியிருப்பதோடு, நர்மதா காதல் தோல்வியின் காரணமாகத் தற்கொலை செய்து கொண்டதாகவும் கதை கட்டியுள்ளனர். குற்றவாளிகள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள சாட்சியங்களைக் கொலை செய்து, ஆதாரங்களை அழித்துள்ளனர் என்பதைத் தாண்டி இந்த மர்ம மரணங்களுக்கு வேறு விளக்கம் அளிக்க முடியாது.



வியாபம் ஊழல் குறித்த விசாரணை நடந்துகொண்டிருந்தபொழுதே மர்மமான முறையில் மரணமடைந்த (கடிகாரச் சுற்றுப்படி) நம்ரதா தமோர், அக்ஷய் சிங், டாக்டர் டி.கே.சகால்லே, டாக்டர் அருண் ஷர்மா, விஜய் சிங் படேல் மற்றும் அமித் சாகர்.

2ஜி வழக்கில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள ஆ.ராசாவின் நண்பர் சாதிக் பாட்சா தற்கொலை செய்துகொண்டபொழுது, தி.மு.க. தலைமையைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றிய ஊடகங்கள், வியாபம் ஊழலில் நடந்துள்ள மர்ம மரணங்களுக்கு பா.ஜ.க. தலைமையை, ம.பி. முதல்வர் சௌஹானை எவ்விதத்திலும் பொறுப்பாக்கவில்லை. பார்ப்பானுக்கு ஒரு நீதி, சூத்திரனுக்கு ஒரு நீதி என்ற மனுதர்மத்தின்படிதான் வியாபம் ஊழலையும் 2ஜி ஊழலையும் 'தேசிய' ஊடகங்கள் அணுகி வருவதை இந்த பாரபட்சம் புட்டு வைக்கிறது.

இந்த மர்ம மரணங்கள் ஒருபுறமிருக்க, இந்த ஊழலை அம்பலப்படுத்துவதில் முன்னணியில் நிற்கும் ஆஷிஷ் சதுர்வேதியின் மீது 14 முறை கொலைவெறி தாக்குதல் நடத்தப்பட்டு, அவர் நல்வாய்ப்பாக உயிர் பிழைத்திருக்கிறார். இந்த ஊழலில் ம.பி. முதல்வர் சிவராஜ் சௌஹானுக்கு உள்ள தொடர்பை அம்பலப்படுத்திய பிரசாந்த் பாண்டேவுக்கு கொடுக்கப்பட்ட போலீசு பாதுகாப்பு திட்டமிட்டு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. அரசு மருத்துவர்களான ஆனந்த் ராயும் அவரது மனைவியும் பாதுகாப்பற்ற இடங்களுக்கு பணி மாறுதல் செய்யப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் இயங்கி வந்த ஆனந்த் ராய் இந்த ஊழலைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருவதால், அவர் அமைப்பிலிருந்து ஓரங்கட்டப்பட்டுவிட்டார். ''குண்டு வெடிப்பு உள்ளிட்ட பயங்கரவாதக் குற்றங்களில் ஈடுபட்ட பெண் சாமியார் பிரக்யா சிங்கை ஆதரித்து வரும் ஆர்.எஸ்.எஸ்., ஊழலுக்கு எதிராகப் போராடும் தன்னைக் கைவிட்டு விட்டதாக''க் கூறுகிறார், ஆனந்த் ராய். அவரின் இந்த அனுபவம் இந்து மதவெறிக் கும்பலின் இரட்டை வேடத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது.

•••

தகுதியும் திறமையும் கொண்டவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத்தான் போட்டித் தேர்வுகளும் நுழைவுத் தேர்வுகளும் நடத்தப்படுவதாக நியாயம் கற்பிக்கப்படுகிறது. தமிழகத்தில் கிராமப்புற மாணவர்களின் நலன் கருதி பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகளுக்கு நடத்தப்பட்டு வந்த நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டபொழுது, பார்ப்பன ஊடகங்களும், நடுத்தர வர்க்க மேதைகளும் அந்நடவடிக்கையை தகுதி, திறமை மீது விழுந்த இடியாகச் சித்தரித்தார்கள். ஆனால், மத்திய பிரதேசத்தில் நடந்துள்ள வியாபம் ஊழல் நுழைவுத் தேர்வு என்பது ஊழலின் ஊற்று என்பதையும்; பணத்திற்கு முன் தகுதி, திறமையெல்லாம் மயிருக்குச் சமமாகும் என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறது.

அரசு நிறுவனங்கள் இட ஒதுக்கீடு கொள்கையால் சீரழிந்து போய்விட்டதாகவும், அதற்கு மாற்று தகுதி, திறமைக்கு மட்டுமே மதிப்பு கொடுக்கும் தனியார்மயம்தான் எனப் பார்ப்பன-ஆதிக்க சாதி கும்பல் வாதாடி வருவதெல்லாம் மிகப் பெரும் மோசடி என்பதையும் மத்திய பிரதேசத்தில் நடந்துள்ள டிமாட் ஊழல் அம்பலப்படுத்தி விட்டது. தனியார் மருத்துவக் கல்லூரி அதிபர்கள் கள்ள வியாபாரிகளைவிடக் கேடுகெட்ட கிரிமினல்கள் என்பதை டிமாட் ஊழல் எடுத்துக் காட்டியிருக்கிறது.

நடுத்தர வர்க்கம் அரசு நிறுவனமான வியாபத்தில் நடந்துள்ள ஊழலைப் பயன்படுத்திக் கொண்டு, மருத்துவ சீட்டுகளையும், அரசுப் பதவிகளையும் அடைந்தது. நீதிபதிகள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகார வர்க்கம், அமைச்சர்கள், ஓட்டுக்கட்சி தலைவர்கள் ஆகியோர் அடங்கிய சமூகத்தின் மேல்தட்டு வர்க்கம் தாங்கள் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணத்தை இலஞ்சமாகக் கொடுத்து டிமாட் ஊழல் மூலம் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

10,000 கோடி ரூபாய் பெறுமான டிமாட் ஊழலை விசாரணை வளையத்திற்குள் கொண்டுவந்து விடக்கூடாது என்ற திட்டத்தோடு காய்கள் நகர்த்தப்படுகின்றன. ‘‘இந்த ஊழலை விசாரிக்கும் அளவிற்குத் தன்னிடம் ஆள்பலம் இல்லை’’ எனக் கூறி, விசாரிப்பதைத் தட்டிக் கழித்து வருகிறது, சி.பி.ஐ. ‘‘தனியார் துறை சம்பந்தப்பட்ட இந்த ஊழலை, ஊழல் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்க முடியாது’’ எனக் கேவலமான முறையில் உச்சநீதிமன்றத்தில் வாதிட்டு, இந்த ஊழலில் ஈடுபட்டுள்ளவர்களைக் காப்பாற்ற முயலுகிறது, மோடி அரசு. ‘‘எங்களிடம் பணம் இருக்கிறது, அவர்களிடம் மருத்துவ சீட் இருக்கிறது. பண்ட பரிமாற்றம் போல இதுவும் ஒரு பொருளாதார நடவடிக்கைதானே தவிர, ஊழல் அல்ல’’ என நாக்கைச் சுழற்றி இந்த மோசடியை நியாயப்படுத்தி வருகிறது, மேல்தட்டு வர்க்கம். நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு அன்னா ஹசாரேயை முன்னிறுத்தி வடஇந்திய நகரங்களில் ஊழலுக்கு எதிராக ஒப்பாரி வைத்த ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறிக் கும்பல் மற்றும் அக்கும்பலின் சமூக அடித்தளமான ஆதிக்க சாதி, மேல்தட்டு வர்க்கத்தின் யோக்கியதை இதுதான்.

வியாபம் என்ற அரசு நிறுவனமே ஊழலில் ஈடுபட்டிருப்பது, அந்த ஊழல் அம்பலமானவுடன் அரசின் மற்ற உறுப்புகள் அதனை மூடி மறைக்க உதவியிருப்பது, விசாரணை நாடகம், மிரட்டல்கள், கொலைகள் உள்ளிட்ட கிரிமினல் நடவடிக்கைகளின் மூலம் ஆடுகளைப் பலியிட்டு ஓநாய்களைத் தப்பவைப்பது எனச் செல்லும் வியாபம் ஊழலும், டிமாட் ஊழலும் அரசு நிறுவனங்கள் சீழ் பிடித்துப் போயிருப்பதை மட்டும் காட்டவில்லை. எந்தவிதத்திலும் சீரமைக்க முடியாதபடி, சாதாரண மக்களுக்கு எதிரானதாக, தாமே சொல்லிக் கொள்ளும் கடமைகளுக்கு எதிராக அந்நிறுவனங்கள் மாறிப் போய் விட்டதையும் எடுத்துக்காட்டியிருக்கிறது.

(முற்றும்) • செல்வம்

5

## அரசு:

# அனைவருக்கும் பொதுவானதோ, ஜனநாயகமானதோ அல்ல!

**அரசியலிலிருந்து மக்களை விலக்கும் மறுகாலனியாக்கம் -அதனை அமலாக்கும் தேர்தல் ஆணையம்!**

அடுத்ததாக, அதிகார வர்க்கத்தில் பன்னாட்டுக் கம்பெனிகளின் அதிகாரிகளும், சட்டமன்றம், நாடாளுமன்றங்களில் தரகு அதிகார வர்க்க முதலாளிகளும் நேரடியாகப் பங்கேற்கும் அளவிற்கு மாற்றப்பட்டிருக்கும் இந்த அமைப்பு முறை மீது மக்கள் நம்பிக்கை இழந்து விடாமல் தடுப்பதற்குத்தான் தேர்தல் ஆணையமும் களத்தில் இறக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் விதித்திருக்கும் கடுமையான நன்னடத்தை விதிகளும், அவற்றை அமலாக்க அது எடுத்து வரும் அதிரடி நடவடிக்கைகளும், ஓட்டுக் கட்சிகள் செய்யும் தில்லுமுல்லுகளையெல்லாம் கண்டுபிடித்து தடுத்து தேர்தலை நேர்மையாக நடத்தும் என்ற பிரமையை மக்களிடையே உருவாக்குவதற்கான ஏமாற்று வித்தைகளே!

தேர்தல் ஆணையத்தின் இந்த கெடுபிடி நடவடிக்கைகளின் இன்னொரு நோக்கம் உழைக்கும் மக்களைத் தேர்தல் நடைமுறையிலிருந்து விலக்கி வைப்பதுதான்! ஓட்டுப் போடுவது தவிர, அவர்களுக்கு வேறு எந்த பாத்திரமும் இல்லாமல் செய்வதுதான்! ஏனென்றால், மறுகாலனியாதிக்கச் சித்தாந்தப்படி மக்களை அரசியலிலிருந்தே விலக்கி வைக்க வேண்டும்; மார்க்சியம், காந்தியம், தேசியம் போன்ற எந்த இசங்களிலும், அறநெறிகள், சமூக மதிப்பீடுகள் எதிலும் நம்பிக்கையோ, மதிப்போ, அக்கறையோ அற்றவர்களாகவும் அவற்றைப் பிற்போக்கானதாகவும் பத்தாம்பசலித்தனமாகவும் கருதி முகம் சுளித்து ஒதுக்கித் தள்ளுபவர்களாகவும் மாற்ற வேண்டும்.

மறுகாலனிய சித்தாந்தம், அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவில் அரசியல் குடிமகன் என்ற அம்சத்தையே ஒழித்துவிட்டு, குடிமக்களை வெறும் நுகர்வோராக மட்டுமே கருதி நடத்துகிறது. இதற்கேற்பவே அரசும் அரசியலும் மாற்றப்பட்டுள்ளது. ‘‘குடிமகனான உனது பணி ஒழுங்காக வேலைக்குப் போவது; கடுமையாக உழைத்து பணம் ஈட்டுவது; அதை வைத்துக் கொண்டு வகைவகையான நுகர்பொருட்கள், புதிது புதிதாக நவீனமாக வந்து கொண்டிருக்கும் செல்போன் போன்ற நுகர்பொருட்களை வாங்கி அனுபவி; விதவிதமான உணவுப் பொருட்களையும் நொறுக்குத் தீனிகளையம் வாங்கி ருசித்து இன்புறு; மலிவாகக் கிடைக்கும் டி.வி.டி.-க்களை வாங்கி வந்து கிளுகிளுப்பூட்டும் திரைப்படங்களைப் பார்; பாடல்களை ரசித்துக் கேள்; கிரிக்கெட் பார், நன்றாக தண்ணி போட்டு ஜாலியாக இரு. கும்பலாகச் சுற்றுலா சென்று அனுபவி; திருவிழா கொண்டாடு; சமூக சேவை, அரசியல் என்று போய் இவ்வளவையும் இழக்காதே; இளமையை, வாழ்க்கையை வீணடிக்காதே’’ என்றுதான் மறுகாலனிய சித்தாந்தம் கற்பிக்கின்றது. இத்துடன் முதலாளித்துவ ஜனநாயகத்தின் சீரழிவையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு,

அரசியல் ஒரு சாக்கடை; அந்தப் பக்கம் போகாதே என்றும் பரப்புரை செய்கிறது.

பள்ளி, கல்லூரி பாடத்திட்டங்களிலிருந்து அற நெறிகளைக் கற்பிக்கும் பாடங்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. மாற்றாக, நடனம், யோகா, தற்காப்பு கலைகள் ஆகியவற்றைக் கற்றுக் கொடுப்பதுடன், சுய முன்னேற்றக் கண்ணோட்டத்தில் ''படித்து வேலைக்குப் போகவேண்டும்; நன்றாக சம்பாதிக்க வேண்டும்; அதற்கு எந்தவித முறையையும் கையாளலாம். வாழ்க்கையை வகைவகையாக அனுபவிக்க வேண்டும்'' என்ற மனோபாவத்தையும், சுயநல போட்டி மனப்பான்மையையும் உருவாக்குவதன் மூலம் மாணவப் பருவத்திலேயே வளரும் தலைமுறையினர் அரசியல் பக்கம் தலைகாட்டாமல் தடுக்கப்படுகிறார்கள். இதற்கேற்ப பள்ளி, கல்லூரிகளில் மாணவர் பேரவைத் தேர்தல்கள் தடை செய்யப்படுகின்றன.

வளர்ச்சித் திட்டங்கள், சமூக நலத்திட்டங்களில் ஊராட்சி, நகராட்சித் தலைவர்கள், தன்னார்வ குழுக்கள், மகளிர் சுயநிதி உதவிக் குழுக்கள் ஆகியோரைப் பங்கேற்க வைப்பது; குளங்கள், ஏரிகள், ஆறுகள், காடுகள் போன்ற இயற்கை வளங்களைப் பராமரிப்பது மற்றும் பயன்படுத்துவதற்கான சுயேச்சையான அதிகாரம் கொண்ட குழுக்களில், மக்களில் சில முக்கியமானவர்களையும் மேலே சொன்னவர்களையும் பங்கேற்க வைப்பது; இதன் போக்கில் மாவட்ட ஆட்சியர், போலீசு அதிகாரிகள் ஆகியோருடன் கலந்தாலோசிக்க வைப்பது போன்ற நடவடிக்கைகள் வாயிலாக, தங்கள் மூலம்தான் அரசாங்கம் நடத்தப்படுகின்றது என்ற எண்ணத்தை வேர்மட்ட அளவில் ஏற்படுத்தி, அவர்களை அரசியல் பக்கம் போகாமல் தடுக்கும் உலகவங்கியின் திட்டமும் அமல்படுத்தப்படுகின்றது.

ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம் நடத்தத் தடை; நடத்த அனுமதித்தாலும் ஆள்நடமாட்டம் அதிகம் இல்லாத இரண்டு, மூன்று இடங்கள் தவிர, பிற இடங்களில் நடத்த அனுமதி மறுக்கப்படுவது; பேரணிகள் நடத்த, சுவரொட்டிகள் ஒட்டத் தடை போடப்படுகிறது. புதுப்புது அடக்குமுறைச் சட்டங்கள் கொண்டு வரப்படுகிறது.

இவை எல்லாவற்றின் நோக்கமும் ஒன்றுதான்; ஆகப் பெரும்பான்மையாக உள்ள உழைக்கும் மக்கள் அரசியலையே வெறுத்து ஒதுக்க வேண்டும்; அரசியலில் ஈடுபாடு கொள்ளக்கூடாது. அவர்களின் ஒரே அரசியல் நடவடிக்கை தேர்தல் வரும்போது ஓட்டுப் போடுவது மட்டுமே. இவ்வாறு அவர்களை அரசியலிலிருந்து விலக்கி வைப்பது, அரசியல் தீண்டாமையை அவர்கள் மீது ஏவி விடுவது என்பதுதான் மறுகாலனியாதிக்கக் காலகட்டத்தின் நடைமுறையாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றத்தான் தேர்தல் ஆணையம் இம்சை அரசனைப் போல் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றது.

**தொகுப்பாக,**

இதுவரையில் நாம் விவரித்ததைத் தொகுத்து சாராம்சமாகச் சொன்னால், தனது ஆதிக்கத்திற்கும் பெருக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் தடையாகவுள்ள 'தேசிய' அரசு, தேசங்களின் 'இறையாண்மை', அவற்றின் சட்டங்கள் ஆகியவற்றைத் தகர்ப்பதுடன், இத்தகைய தேசிய அரசுகளுடன் சேர்த்து கட்டியெழுப்பப்பட்ட முதலாளித்துவ ஜனநாயகத்தையும் தகர்த்து நொறுக்கி வருகின்றது, சர்வதேசியமயமாகிவிட்ட ஏகாதிபத்திய நிதிமூலதனம். மேல்நிலை வல்லரசுகளின்-ஆக்கிரமிப்புகள் ஆகியவை ஒருபுறமிருக்க, உலகப் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கான சர்வதேசநிறுவனங்கள் என்றழைக்கப்படும் உலக வர்த்தகக் கழகம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகளின் ஆணைகளுக்கு ஆடும் அரசாகவே இந்திய அரசும் அதன் சட்டமன்றங்களும் நாடாளுமன்றமும் மாற்றப்பட்டுள்ளன.



**தேர்தல் ஆணையத்தின் கெடுபிடி நடவடிக்கைகளின் நோக்கம் உழைக்கும் மக்களைத் தேர்தல் நடைமுறையிலிருந்து விலக்கி வைப்பதுதான்! ஓட்டுப் போடுவது தவிர, அவர்களுக்கு வேறு எந்தப் பாத்திரமும் இல்லாமல் செய்வதுதான்!**

மேல்நிலை வல்லரசுகள் மற்றும் ஏகாதிபத்தியங்களின் அதிகார வர்க்கங்களாலும் தேசங்கடந்த மற்றும் பன்னாட்டு தொழிற்கழகங்களின் நிர்வாகிகளாலும் சர்வதேச நிதிமூலதனக் கும்பல்களாலும் முதலாளித்துவ வல்லுனர்களாலும் நிரப்பப்பட்டுள்ள இந்த நிறுவனங்கள்தான் (எந்த மக்களாலும் இவை தேர்ந்தெடுக்கப்

படுவதில்லை) உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று பெரிதும் பீற்றிக் கொள்ளப்படும் இந்திய ஜனநாயகத்தை, அதன் அரசைக் கட்டுப்படுத்துகின்றன; ஆட்டுவிக்கின்றன.

மறுகாலனியச் சுரண்டலுக்கும் ஆதிக்கத்திற்கும் ஆட்படுத்தப்பட்டுள்ள இந்தியாவின் பொருளாதாரம் எப்படி பன்னாட்டுத் தொழிற்கழகங்கள் மற்றும் சர்வதேச நிதிமூலதனத்தின் நலனுக்கேற்ப தனியார்மயம் - தாராளமயம், உலகமயத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோ, அதேபோல இவற்றின் நலன்களுக்காகவும் அமெரிக்க மேல்நிலை வல்லரசின் உலக மேலாதிக்கத்திற்காகவும் தனியார்மய, தாராளமய, உலகமயக் கொள்கைகள் அரசுக் கட்டமைப்புக்குள்ளும் புகுத்தப்படுகின்றன. அதன் கட்டுமானம், சட்டங்கள், விதிமுறைகள், பணிகள், செயல்பாடுகள் எல்லாம் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு 'ஜனநாயக' அரசமைப்பின் கட்டுமானங்களிலும் அதன் நடைமுறைகளிலும் முதலாளித்துவ சந்தையின் விதிகள் புகுத்தப்பட்டு, அவை மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இதனால் முதலாளித்துவ சந்தையின் விதிகளே ஜனநாயகத்தின் விதிகளாகவும் மாற்றப்பட்டு வருகின்றன.

அரைகுறை இறையாண்மையையும் இழந்து வருகின்ற இந்தியாவில் நிலவுகின்ற அல்லது மாற்றி உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிற போலி ஜனநாயகம் கூட அதன் உள்ளடக்கத்தை முற்றிலுமாக இழந்து வருகின்றது. ஏற்கெனவே குறிப்பிட்டபடி, மக்களைப் பொருத்தவரை ஜனநாயகம் என்பது ஓட்டளிப்பதாக மட்டும் வெட்டிக் குறுக்கப்பட்டு விட்டது. அதுவும் கூட, 'தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கங்கள் நாட்டு நலன், மக்கள் நலன் கருதி, விருப்பப்பட்டு, எந்தவித நெருக்குதலுமின்றி சுதந்திரமாக, சுயேச்சையாக தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை மேற்கொண்டு வருகின்றன' என்று காட்டி மறுகாலனியாதிக்கத்திற்கு நியாய உரிமை பெறுவது என்ற காரணத்திற்குத்தான் மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்தியா ஆங்கிலேயர்களின் நேரடி காலனியாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த காலகட்டத்தில், விடுதலைப் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கும், எதிர்ப்புகளை நிறுவனமயமாக்குவதற்கும் பதவிகளில் ஒட்டிக் கொண்டு சலுகைகளை அனுபவிக்கவும், பொறுக்கித் தின்பதற்கும் விழைந்த நாட்டுப்பற்று அற்ற பிழைப்புவாத கும்பல்களை ஊக்குவிக்கவும் மேலிருந்து திணிக்கப்பட்டது நாடாளுமன்ற தேர்தல் ஜனநாயகம். காலனியாதிக்கத்தை கட்டிக் காக்க ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின் கிரிமினல் மூளையில் உதித்த இந்த சாணக்கியத் திட்டம் வெற்றிகரமாகவே நிறைவேறிற்று என்று சொல்ல வேண்டும். காலனிய காலம் தொடங்கி 1950களின் தொடக்கத்தில் திணிக்கப்பட்ட நவீன காலனிய ஆதிக்க காலகட்டத்தில் செழித்து வளர்ந்த அரசியல் பிழைப்புவாதமும் சீரழிவும் 1980, 1990களில் அதன் உச்சத்தை எட்டியது. தனிக்கட்சி ஆட்சி போய் கூட்டணி ஆட்சிகள், கட்சித் தாவல்கள், கூட்டணிகள் உடைவது, அரசாங்கங்கள் கவிழ்வது, புதுக்கூட்டணி, புது அரசு, சில மாதங்கள் - வருடங்களுக்குள் மீண்டும் கட்சித் தாவல்கள், அரசுகள் கவிழ்வது என்று நாடாளுமன்ற அராஜகம் தலைவிரித்தாடியது.

மேல்நிலை வல்லரசுகளின் தோற்றம், நிதிமூலதனம் சர்வதேசியமயமானது, தேசங்கடந்த மற்றும் பன்னாட்டு தொழில் கழகங்கள், அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி, ஏகாதிபத்திய பொருளாதார நெருக்கடி ஆகியவைகளின் விளைவாக நவீன காலனியாதிக்கம் அகற்றப்பட்டு, மறுகாலனியாதிக்கம் இந்த காலகட்டத்தில்தான் புகுத்தப்பட்டது. சர்வதேச வலைப்பின்னல்களால், ஒரே சங்கிலியால் கட்டப்பட்டிருந்த நிதி மூலதனத்தின் செயல்பாடுகளுக்கும் தேசங்கடந்த தொழில்கழகங்களுக்கும் நாடாளுமன்ற அராஜகமும் நிலையற்ற ஆட்சிகளும் எதிரானவை; எதிர்பாராத வகையில் திடீர் திடீரென தடைபோடுபவை; எனவே, அவற்றை ஒழிக்க வேண்டியது அவர்களுக்கு அவசியமும் கட்டாயமும் ஆகியது. இதற்கேற்பவே மறுகாலனியாதிக்க நலன்களுக்காகவே நிலையான ஆட்சி, சிறந்த அரசாளுமை என்ற முழக்கங்களை முன்வைத்துள்ளனர். நிதிமூலதனம், பன்னாட்டு முதலாளிகளின் தனியார்மயச் சுரண்டலும் ஆதிக்கமும் தங்கு தடையின்றி நடப்பதற்கு ஏற்ற நிலையான ஆட்சி, சிறந்த ஆளுமை, வலுவான ஆட்சி (failed state ஆக இல்லாமல்) ஆகியவையே தேர்தல் மற்றும்

> ஓட்டை ஒரு சரக்காகக் கருதும் மனநிலைக்கு கருத்துரீதியாகவே மக்கள் வந்துவிட்டார்கள். அல்லது யார் அதிக பொருட்களும் இலவசங்களும் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு ஓட்டை விற்கத் தயாராக இருக்கிறார்கள்.



ஜனநாயகத்தின் ஒரே இலக்காக மாற்றப்பட்டுள்ளது.

இந்தியாவில் தேர்தல் என்பது ஏகாதிபத்தியத்தின் பிள்ளைப் பருவத்தில், அதாவது 20-ஆம் நூற்றாண்டின் துவக்க பத்தாண்டுகளில், நேரடி காலனியாட்சி பிரதான வடிவமாக இருந்த காலகட்டத்தில், கம்யூனிச, தேசிய இயக்கங்கள் ஏற்றம் பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில், நேரடிக் காலனிய ஆட்சியைப் பாதுகாக்க ஏகாதிபத்தியவாதிகளால் புகுத்தப்பட்டது. அன்று ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்வதற்கும் எதிர்ப்புகளை நிறுவனமயமாக்குவதற்கும், பதவிகளில் ஒட்டிக் கொண்டு அரசு சன்மானங்களைப் பொறுக்கித் தின்னவும் சலுகைகள் - கௌரவங்களை அனுபவிக்கவும் நாட்டுப்பற்று அற்றுப் போகும்படியான பிழைப்புவாத கும்பல்களை உருவாக்கவும் 'ஜனநாயக தேர்தல் அரசியலைப்' புகுத்துவது ஏகாதிபத்தியங்களின் நலனுக்கு உகந்ததாக இருந்தது.

"தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கங்கள் மக்கள் நலன் கருதி, சுதந்திரமாகத் தனியார்மய – தாராளமயக் கொள்கைகளை மேற்கொண்டு வருகின்றன" என்று காட்டி, மறுகாலனியாதிக்கத்திற்கு நியாய உரிமை பெறுவது என்ற காரணத்திற்குத்தான் மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

இன்று ஏகாதிபத்தியத்தின் ஏற்றத்தாழ்வான அரசியல், பொருளாதார வளர்ச்சிப் போக்கின் விளைவாக, மேல்நிலை வல்லரசுகள்-அவற்றின் மேலாதிக்கம், ஏகாதிபத்திய பொருளாதார நெருக்கடி, பின்னடைவு மற்றும் சீரழிவு காரணமாக கம்யூனிச-தேசிய இயக்கங்கள் தற்காப்பு நிலைக்குத்தள்ளப்பட்டுள்ள உலக நிலைமை ஆகியவற்றின் காரணமாக, மறுகாலனியாதிக்க முறையிலான காலனிய ஆட்சி வடிவத்தை மேலாதிக்க வல்லரசுகள் பிரதானமாகக் கையாண்டுவரும் நிலைமையில், ஜனநாயகமும் தேர்தலும் வெட்டிச் சுருக்கப்பட்டு பரந்துபட்ட மக்கள் அரசியலில் இருந்தே விலக்கி வைக்கப்பட்டு வருகின்றனர்.

'தேர்தல் அரசியல்' சீரழிவின் விளைவாக பல்கிப் பெருகி பேயாட்டம் போடுகின்ற பிழைப்புவாதக் கும்பல்கள், நாடாளுமன்ற அராகஜம் ஆகியவற்றினால் பாதிக்கப்படாமல், சட்டமன்றங்கள் - நாடாளுமன்றங்களுக்கு இதுவரையிலிருந்த வரம்புக்குட்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் உள்ளிட்ட அதிகாரங்களையும் பறித்துக் கொண்டு அவற்றை வெறும் ''நீயா, நானா'' விவாத மன்றங்களாக்கிவிட்டு, அந்த மன்றங்களுக்கு வெளியே எல்லா அதிகாரங்களையும், கார்ப்பரேட் முதலாளிகள், அவர்களின் கூலி வல்லுனர்கள், அதிகாரவர்க்கத்தினர், நம்பகமான அரசியல் அடிவருடிகள் ஆகியோரைக் கொண்ட குழுக்களிடம் ஒப்படைக்கும் வகையில் அரசின் கட்டமைப்பும் அதன் செயல்பாடுகளும் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் இன்னொரு பக்கமாகத்தான், எப்படியும் பணம் சம்பாதித்து உல்லாசமாக வாழ வேண்டும் என்கின்ற நெறியின்மையிலும், நுகர்வு வெறியிலும், போதையிலும் சீரழிவிலும் மக்களை ஆழ்த்துவதும், கிரிக்கெட், திரைப்படம், செல்போன் போன்ற மோகங்களால் மட்டுமே ஆட்டுவிக்கப்படுகின்ற, தேசப்பற்றோ, கொள்கை - இலட்சியங்களோ அற்ற, நடமாடும் பிண்டங்களாக மக்களை மாற்றுவதும் திட்டமிட்டு செய்யப்பட்டு வருகின்றது. காலனிய கட்டத்தில் தேர்தல் அரசியலைப் புகுத்தி மக்களைச் சீரழித்த ஏகாதிபத்தியம், மறுகாலனிய கட்டத்தில் மக்களை அரசியல் அற்றவர்களாகவும், அரசியலின் மீதே அருவருப்பு கொண்டவர்களாகவும் மாற்றி வருகின்றது. அரசியல் பச்சோந்தித்தனம், பச்சையான அம்மணமான, வெட்கம் - மானம் ஏதுமற்ற பிழைப்புவாத அரசியல் தகிடுதத்தங்களால் வெறுப்பின் எல்லைக்கே சென்று, யாராவது நல்லவன் வந்து ஏதாவது நல்லது செய்ய மாட்டானா என எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து, மக்களது மனம் இறுகி விட்டது. ஓட்டை ஒரு சரக்காக கருதும் மனநிலைக்கு கருத்து ரீதியாகவே அவர்கள் வந்துவிட்டார்கள். அல்லது யார் அதிக பொருட்களும் இலவசங்களும் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு ஓட்டை விற்கத் தயாராக இருக்கிறார்கள். ''நீ எனக்கு பதவி தா; நான் உனக்கு மிக்சி, கிரைண்டர், மடிக்கணினி தருகிறேன்'' என்று பகிரங்கமாக ஓட்டை விலை பேசுவதாக தேர்தலே மாறியிருக்கிறது.

நல்லவன் ஆட்சிக்கு வந்தால் நல்லது நடக்கும்; ஆனால் அது எங்கே நடக்கப் போகிறது? என்று நொந்து கொள்வது மட்டுமல்ல; வாய்ப்பு கிடைத்தால் நாமும் பணக்காரனாகி விட வேண்டும் என்ற எண்ணமும் மேலோங்கியிருக்கிறது. நாடாளுமன்றத்தின் மீதான மாயையும் இல்லை; ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை. அது அரசியல் ரீதியில் காலாவதியாகி விட்டதா என்ற கேள்விக்கும் இடமில்லை. ஏனென்றால், அந்த வேலையை மறுகாலனியாதிக்கவாதிகள் செய்து விட்டனர்.

எனவே, மக்கள் தங்களது அடிமனதில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நல்லவர்கள், மக்களது துயரத்தைத் தீர்ப்பதற்கான வழிமுறையைக் கொண்டிருப்பவர்கள் நக்சல்பாரிகள் மட்டும்தான். இதை நிறைவேற்றப் போகும் புதிய ஜனநாயகப் புரட்சி மட்டும்தான் மக்களின் எதிர்காலம். அந்த எதிர்காலத்தில் உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்!

(முற்றும்)

## சிரிய அகதிகள்:

# அமெரிக்காவே குற்றவாளி!

**சிரியாவில் அதிபர் அல் அசாத் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா தனது கைக்கூலிகள் மூலம் நடத்திவரும் அநீதியான போர்தான் இலட்சக்கணக்கான சிரிய மக்களை அகதிகளாகத் துரத்துகிறது.**

சிரியாவிலிருந்து அகதியாகத் தப்பியோடி வந்து, மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பா செல்ல முயன்றபோது படகு கவிழ்ந்ததால் கடலில் மூழ்கி, அய்லான் என்ற இளம் சிறுவன் கரையோர மண்ணில் பிணமாகப் புதைந்து கிடந்த காட்சி, உலகெங்கும் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

குர்து சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அய்லானின் பெற்றோர்கள் தமது குடும்பத்துக்கு கனடாவில் தஞ்சம் கோரியதை அந்நாட்டு அரசு ஏற்க மறுத்துவிட்டதால், ஐரோப்பாவில் ஏதாவதொரு நாட்டில் தஞ்சம் புக அக்குடும்பம் கள்ளத்தனமாக படகில் சென்றபோதுதான் இந்த மரணம் நிகழ்ந்துள்ளது. சிறுவன் அய்லானைப் போலவே இன்னும் பல நூறு பேர் கடந்த சில மாதங்களில் கடலில் மூழ்கி மாண்டு போயுள்ளனர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடந்துள்ள புலம் பெயர்வுகளிலேயே மிகப் பெரியது என்று குறிப்பிடுமளவுக்கு சிரியாவில் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 90 லட்சம் பேர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் குவிந்துள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் மத்தியத் தரைக் கடலைக் கடந்து இதுவரை 4 லட்சத்துக்கும் மேலான சிரிய மக்கள் அகதிகளாக, வெட்டவெளியில் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளில் துவண்டு கிடக்கின்றனர்.

உலகின் கார்ப்பரேட் முதலாளிகள் பிற நாடுகளில் மூலதனமிட்டு அந்நாட்டையும் மக்களையும் கொள்ளையிடலாம், மூலதனம் உலகம் முழுவதும் எவ்விதத் தடையுமின்றி பாயலாம் என்ற உலகமயமாக்கக் கொள்கையைத் தீவிரமாகச் செயல்படுத்திவரும் ஏகாதிபத்தியவாதிகள், மறுபுறம் ஏழை நாடுகளின் மக்கள் ஏகாதிபத்திய நாடுகளுக்குள் நுழைவதை எதிர்க்கின்றனர். அந்நாடுகளின் போலீசாரால் மிருகத்தனமாக தாக்கப்பட்டு அகதிகள் விரட்டியடிக்கப்படுகின்றனர். தனது நாட்டின் எல்லையில் உள்ள சுரங்க ரயில் பாதையில் அகதிகள் நுழைவதைத் தடுக்க கோடிக்கணக்கில் பிரிட்டிஷ் அரசு செலவிட்டு வருகிறது. ஹங்கேரி அரசானது, செர்பியாவை ஒட்டிய எல்லையில் ஏறத்தாழ 12 அடி உயரமுள்ள முள்வேலியை அமைத்து அகதிகள் நுழைவதைத் தடுக்கிறது. ஐரோப்பாவின் நவ நாஜிக் குழுக்கள் அகதிகளான அந்நியரை வெளியேற்ற வேண்டுமென ஆர்ப்பாட்டங்களை நடத்தி நள்ளிரவில் தீ மூட்டி அச்சுறுத்துகின்றன. இத்தனைக்கும் நடுவிலும் ஐரோப்பிய உழைக்கும் மக்களும் தன்னார்வ நிறுவனங்களும் தப்பியோடிவரும் அகதிகளுக்கு மனிதாபிமான உள்ளத்தோடு உதவிகளைச் செய்து வருவதோடு, அகதிகளை அனுமதித்து மறுவாழ்வளிக்கக் கோரி ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

அகதிகள் மீது நாளும் தொடரும் அட்டூழியங்கள் - அடக்குமுறைகள், எல்லைகளிலுள்ள முள்வேலிகளை முறித்துக் கொண்டு உள்ளே நுழையும் அகதிகளை காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி கண்ணீர் புகைக்குண்டு வீசி விரட்டியடிக்கும் கொடூரம், கண்டெய்னர் லாரிகளில் இரகசியமாக தப்பிக்க முயற்சித்தவர்கள் மூச்சுமுட்டி மாண்டுபோகும் அவலம், மத்தியத் தரைக்கடலில் பிணங்



கள் கொத்துக்கொத்தாக மிதந்து கரை ஒதுங்கும் கோரம் - என முதலாளித்துவ உலகின் மனிதாபிமானமற்ற கொடூரத்தைக் கண்டு உலகமே காறி உமிழ்கிறது. அகதிகளின் அவலங்களும் ஐரோப்பிய நாட்டு அரசுகளின் அடக்குமுறைகளும் உலகெங்கும் அம்பலமாகத் தொடங்கி, குறிப்பாக சிறுவன் அய்லான் பிணமாக மண்ணில் புதைந்துள்ள புகைப்படம் வெளியாகி கண்டனங்கள் வலுத்த பிறகுதான், ஐரோப்பிய அரசுகள் வரம்புக்குட்பட்ட அளவுக்கு அகதிகளைத் தற்காலிகமாக ஏற்பதாக அறிவித்துள்ளன.



ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முயன்று, படகு கவிழ்ந்து மத்தியத் தரைக்கடலில் தத்தளிக்கும் சிரிய அகதிகளை மீட்கும் கிரேக்க போலீசார்.

சிரியாவிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பியோடுவது ஏன், அந்நாட்டில் எதற்காகப் போர் நடக்கிறது, அதற்கு யார் காரணம் என்பதைப் பற்றி ஊடகங்கள் அரைகுறை உண்மைகளையே கூறிவருகின்றன. இஸ்லாமிய நாடுகள் என்றாலே அங்கு ஜனநாயகமோ, அமைதியோ இருக்காது, அராஜகமும் இனக்குழுக்களின் வன்முறைத் தாக்குதலும்தான் இருக்கும் என்ற கருத்து மக்களின் பொதுப்புத்தியில் திணிக்கப்பட்டுள்ளது. அதனாலேயே அகதிகளுக்கு மனிதாபிமானத்துடன் இடம் கொடுத்து உதவலாம் என்றாலும், இத்தனை இலட்சம் பேர் அகதிகளாக வந்தால் ஐரோப்பிய நாடுகளால் எப்படிச் சமாளிக்க முடியும் என்று வாதிட்டு, இது நாகரிகமற்ற இஸ்லாமிய நாடுகள் ஏற்படுத்திய பிரச்சினையாகவே பார்க்கப்படுகிறது.

ஆனால், சிரியாவில் கூலிப்படைகள் நடத்தும் போருக்கும், பல இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அல்லற்படுவதற்கும் முழுமுதற் காரணம் அமெரிக்காதான். நிலையான அமைதிக்கும் ஜனநாயகத்துக்கும் நிற்பதாகக் காட்டிக் கொள்ளும் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள்தான் சிரியாவில் அதிபர் அல் அசாத்தின் ஆட்சியைக் கவிழ்த்து தமக்கு விசுவாசமான ஆட்சியை நிறுவும் நோக்கத்துடன் கைக்கூலிகளைக் கொண்டு கொண்டு மத, இன மோதல்களைத் தூண்டிவிட்டு அமைதியையும் நல்லிணக்கத்தையும் சீர்குலைத்து, மனிதப் பேரழிவைத் தோற்றுவித்த கிரிமினல் குற்றவாளிகளாவர். சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, உலகை மேலாதிக்கம் செய்யும் வெறியோடு புறப்பட்ட அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள், பேரழிவு ஆயுதங்களை ஒழிப்பது, போக்கிரி அரசுகளைத் தண்டிப்பது, மனித உரிமை - ஜனநாயகத்தை நிலைநாட்டுவது, பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் மேற்காசியாவை மறு காலனியாக்கும் தமது திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல துருக்கி எல்லையில் அனுமதிக்காகக் காத்திருக்கும் சிரிய அகதிகளின் அவலம்.



இதன்படி, ஆப்கானில் அன்றைய சோவியத் வல்லரசு தனது படைகளை விலக்கிக் கொண்டு வெளியேறியதும், அமெரிக்காவால் ஊட்டி வளர்க்கப்பட்ட இஸ்லாமிய அடிப்படைவாத தாலிபான்களின் ஆட்சி அங்கு நிலைநாட்டப்பட்டது. இருப்பினும் தாலிபான்களுக்கும் அமெரிக்காவுக்கும் தத்தமது நலன்களையொட்டி முரண்பாடுகள் எழுந்ததால், பின்லேடனின் அல்-கய்தா இயக்கம் வளரத் தொடங்கி தாலிபான்களும் அதனுடன் இணைந்ததும், அல்-கய்தா இயக்கம் ஆப்கான் மட்டுமின்றி, உலகையே அச்சுறுத்தும் கொடிய பயங்கரவாத இயக்கமாக அமெரிக்காவால் சித்தரிக்கப்பட்டு, அமெரிக்காவின் போர்த்தாக்குதல்களால் ஆப்கான் சிதைக்கப்பட்டு அமெரிக்காவின் மேலாதிக்கம் நிறுவப்பட்டது.

அதன் பிறகு, இராக்கில் சதாம் உசைனின் ஆட்சி தூக்கியெறியப்பட்டு, தனது நோக்கங்களுக்குச் சேவை செய்யும் வகையிலான ஷியா பிரிவு முஸ்லிம்கள் தலைமையில் ஒரு பொம்மை அரசை உருவாக்கி, ஜனநாயகத்தையும் அமைதியையும் நிலைநாட்டிவிட்டதாக அமெரிக்கா கூறிக் கொண்டாலும், சன்னி பிரிவு இஸ்லாமிய பயங்கரவாதக் குழுக்கள் நடத்தும் எதிர்த்தாக்குதலால் இன்று அந்நாடே

குருதிச் சேற்றில் மூழ்கிக் கிடக்கிறது.




அதைத் தொடர்ந்து லிபியாவைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர 2011-இல் அமெரிக்கா ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்தது. லிபிய அதிபர் கடாபியின் வீழ்ச்சிக்குப் பிறகு, அதிகாரத்தைக் கைப்பற்ற அமெரிக்காவால் ஊட்டி வளர்க்கப்பட்ட போட்டி குழுக்களுக்கிடையிலான மோதல்கள் உள்நாட்டுப் போராக முற்றி, இரத்தக்களறியின் நடுவே பல்லாயிரக்கணக்கான லிபிய மக்கள் அகதிகளாக மத்தியத் தரைக்கடல் வழியே ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்தனர்.

மேற்காசியாவுக்கான உலக மேலாதிக்கப் போர்த்தந்திரத்தின் ஒரு அங்கமாக, அதன் பிறகு சிரியாவில் ஆட்சி மாற்றம் செய்து தமக்கு விசுவாசமான அரசை நிறுவ இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களை அமெரிக்கா ஊட்டி வளர்த்தது. இராக்கில் நேரடி ஆக்கிரமிப்புப் போரை நடத்திய அமெரிக்கா, இப்போது சிரியாவில் அதுபோல் நேரடி ஆக்கிரமிப்பு செய்யாமல் வான்வழித் தாக்குதல்களை நடத்துவது, கைக்கூலிகளான உள்நாட்டு தீவிரவாதக் குழுக்களைத் தூண்டிவிடுவது என்ற உத்தியுடன் தனது மேலாதிக்கத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

சிரியா என்பது அரபு ஷேக்குகள் ஆளும் நாடல்ல. இதர அரபு நாடுகளை ஒப்பிடும்போது கல்வியறிவிலும் நாகரிகத்திலும் மேம்பட்ட நாடாகும். ஒரு கட்சி சர்வாதிகார ஆட்சியாகவும் ஏகாதிபத்தியங்களுடனான உறவில் இரட்டைத் தன்மை கொண்டதாகவும் இருந்த போதிலும், சிரியாவின் அல் அசாத் அரசு ஒரு மதச்சார்பற்ற அரசாகவே இருந்து வருகிறது. பல்வேறு மத, இன குழுக்கள் இருந்த போதிலும், அந்நாட்டில் மத, இன மோதல்கள் நடந்ததில்லை.

ஆனால், இன்று அந்நாட்டில் கைக்கூலி இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களைக் கொண்டு, இந்த மோதலைத் தீவிரப்படுத்தி அந்நாட்டை குருதிச் சேற்றில் மூழ்கடித்ததே அமெரிக்காதான். முழு சர்வாதிகார நாடான சவூதி அரேபியாவும், கத்தாரும் இதற்கு நிதியும் ஆயுத உதவியும் செய்து ஆதரித்தன. ஜனநாயகத்தை ஏற்காத இந்த நாடுகள்தான், சிரியாவில் ஜனநாயகத்தை நிலைநாட்ட அமெரிக்காவுக்கு உதவுவதாகக் கூறிக்கொண்டு கைக்கூலி இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களை ஊட்டி வளர்த்தன. இத்தீவிரவாதக் குழுக்கள் இணைந்து ஐ.எஸ். தீவிரவாத இயக்கமாக வளர்ந்து அக்கும்பலின் அட்டூழியங்களும் கொலைவெறியாட்டங்களும் தீவிரமடைந்ததும், அத்தீவிரவாத இயக்கத்தை ஒடுக்கப் போவதாகக் கூறிக்கொண்டு அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் சிரியாவில் வான்வழித் தாக்குதலை ஏவின. அமெரிக்காவின் இத்தாக்குதலுக்கும் சவூதி அரேபியாவும், கத்தாரும் நிதியுதவி செய்கின்றன.

இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களைக் கைக்கூலிகளாகக் கொண்டு மேற்காசியாவைத் தனது மேலாதிக்கத்துக்கேற்ப மாற்றியமைக்கும் அமெரிக்காவின் போர்த்தந்திரத் திட்டத்தின் விளைவாக, இன்று பல்வேறு இஸ்லாமிய ஆயுதக் குழுக்கள் மேற்காசிய நாடுகளின் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறிவிட்டன. அமெரிக்காவாலும், சவூதி அரேபியா, கத்தார் முதலான நாடுகளாலும் ஊட்டி வளர்க்கப்பட்ட பல்வேறு இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் இணைந்து இன்று ஐ.எஸ். என்ற மிகப்பெரிய சன்னி பிரிவு இஸ்லாமிய பயங்கரவாத இயக்கமாக வளர்ந்து,அதன் அட்டூழியங்களும் கொலைவெறியாட்டங்களும் தலைவிரித்தாடுகின்றன.

சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்குப் பிறகு, அமெரிக்கா நடத்திவரும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்பது உலக மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான போர்தானேயன்றி, அமெரிக்கா கூறிக்கொள்வது போல அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவது அதன் நோக்கமல்ல. எண்ணெய் வளமிக்க மேற்காசியப் பிராந்தியம் தனது மேலாதிக்கத்தின் கீழ் இருக்க வேண்டுமென்பதற்காகவே, மத - இனப் பிரிவுகளுக்கிடையே மோதலைத் தூண்டி, இத்தகைய முறுகல்நிலையும் போர்த்தாக்குதல்களையும் தொடர்ந்து நீடிக்கச் செய்து, நிரந்தரமாகத் தலையிடுவதற்கான முகாந்திரத்தை உருவாக்கிக் கொள்வதென்பதே அமெரிக்காவின் உத்தியாக உள்ளது.

இந்த உண்மைகளை மூடிமறைத்துவிட்டு, சிரியாவில் உள்நாட்டுப் போர் நடப்பதால்தான் அகதிகள் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும், அகதிகள் குவிவதால் ஐரோப்பிய கண்டமே நெருக்கடியில் சிக்கி இக்கட்டான நிலைமைக்கு ஆளாகி நிற்பதைப் போலவும் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது ஊடகங்களும் கூசாமல் புளுகி வருகின்றன.

● பாலன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.




யின் ஊழல்கள் குறித்து வெளிவந்துள்ள தகவல்களும் சமீபத்திய எடுத்துக்காட்டுகள்.

ஊழல் நீதிபதிகளைத் தண்டிக்க முடியாது என்பது மட்டுமல்ல, ஊழல் குற்றம் சாட்டுபவர்களை நீதிபதிகள் தண்டிக்க முடியும் என்ற நிலை இருப்பதால், நீதித்துறை ஒரு சட்டபூர்வ ரவுடி ராச்சியமாகவே ஆகிவிட்டது. இந்நிலைக்கு முடிவு கட்ட ஒரு புதிய பாதையைத் திறந்திருக்கிறது மதுரை வழக்கறிஞர்களின் பேரணி.


ஊழல் நீதிபதிகளின் பட்டியலை வெளியிடும் வழக்குரைஞர்கள்.

மதுரையில் கடந்த 10-09-2015 அன்று நடத்தப்பட்ட இந்தப் பேரணியில் மதுரை மாவட்ட நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் மட்டுமின்றி, நாகர்கோயில், தூத்துக்குடி, இராமநாதபுரம், முதுகளத்தூர், திருப்பத்தூர், காரைக்குடி, திருச்சி, குளித்தலை, கரூர், திண்டுக்கல், பழனி, தேனி, பெரியகுளம், திருமங்கலம், உசிலம்பட்டி, மேலூர், வாடிப்பட்டி, ராஜபாளையம், திருவில்லிபுத்தூர், கோவில்பட்டி, நெல்லை உள்ளிட்ட பல்வேறு இடங்களிலிருந்து சுமார் 1500 வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.




''காசு-பணம்-துட்டு-நீதிபதி!'', ''அவைத்தை அப்புறம் பார்ப்போம், உயர்நீதிமன்றத்தை முதலில் கவனிப்போம்'' என்பன போன்ற முழக்கங்கள் மக்கள் மன்றத்தில் நீதிபதிகளின் முகத்திரையைக் கிழித்தன. பேரணியின் முடிவில் ஊழல் நீதிபதிகளின் முதல் பட்டியலை வெளியிட்ட சங்க நிர்வாகிகள் அடுத்தடுத்த பட்டியல்கள் வெளிவரும் என்றும் எச்சரித்தனர். எந்த நீதிபதி எந்த வழக்கில் எத்தகைய முறைகேடான தீர்ப்பை வழங்கியிருக்கிறார் என்பதை வழக்கறிஞர்கள் குறிப்பாக விளக்கிய போதிலும், எந்த ஊடகமும் நீதிபதிகளின் பெயரையோ இந்த விவரங்களையோ வெளியிடாமல் இருட்டடிப்பு செய்தன.

இருந்த போதிலும், பெருந்திரளாகச் சென்ற வழக்கறிஞர் பேரணியின் புகைப்படங்களும், ''ஊழல் நீதிபதிகளின் பெயர் பட்டியலை வெளியிட்டதால் பரபரப்பு'', ''ஊழல் நீதிபதிகள் மீது நடவடிக்கை கோரி பேரணி'' என்ற தலைப்புச் செய்திகளுமே உயர்நீதி மன்ற நீதியரசர்களுக்கு நடுக்கத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தப் போதுமானவையாக இருந்தன.



இப்படி ஒரு பேரணி இந்தியாவில் இதற்கு முன் நடத்தப்பட்டதில்லை என்பது இதன் சிறப்பு. நீதிமன்ற அவமதிப்பு பூச்சாண்டிகளுக்கு அஞ்சாமல் அநீதியான தீர்ப்புகளை எதிர்த்து இனி எல்லோரும் வீதியில் இறங்கத் தொடங்கி விட்டால்? இது ஆளும் வர்க்கத்தைப் பிடித்தாட்டும் பீதி!

-தகவல்:
மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம், மதுரை.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

# ஈட்டி முனையாக எழுந்து நிற்போம்!


வேதாரண்யம் – கரியாப்பட்டினத்தில்...

காவிரி டெல்டா மாவட்டங்களில் பல இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிரின் நிலை இன்றோ அல்லது நாளையோ என்ற அபாயக் கட்டத்தைத் தொட்டு நிற்கிறது. காவிரித் தண்ணீரை நம்பி வெள்ளாமையில் இறங்கிய விவசாயிகள், இன்று லாரித் தண்ணீரை வயலில் பாய்ச்சி பயிர்களைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி நிலைமை கைமீறிப் போய்க் கொண்டிருக்கும் வேளையில்தான், மைய அரசு தனது கும்பகர்ண தூக்கத்திலிருந்து எழுந்து டெல்லியில் கடந்த செப்.28 அன்று காவிரி கண்காணிப்புக் குழுவைக் கூட்டியது. கொஞ்சத்துக்கு கொஞ்சமாவது நல்ல சேதி கிடைக்காதா என டெல்டா விவசாயிகள் எதிர்பார்த்திருந்தபொழுது, ‘‘கர்நாடகா மாநிலத்தின் குடிநீர் மற்றும் பாசனத் தேவைக்கான தண்ணீரே கேள்விக்குறியாகியுள்ள நிலையில் தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிட முடியாது’’ என அக்கூட்டத்தில் கர்நாடகா அரசு இரக்கமின்றி மமதையோடு அறிவித்து, அவர்களின் தலையில் நெருப்பை வாரிக்கொட்டிவிட்டது.

கர்நாடகா அரசு கூறுவது அப்பட்டமான, அடுக்க மாட்டாத பொய். கர்நாடகாவிலுள்ள காவிரி அணைகளில் உள்ள தண்ணீரின் இருப்பு, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துள்ள மழையின் அளவு ஆகியவை குறித்து வெளிவந்திருக்கும் புள்ளிவிவரங்களே, கர்நாடகா காங்கிரசு அரசு தீய எண்ணத்தோடு தமிழக விவசாயிகளை வஞ்சிக்கிறது என்பதையும் தமிழகத்திற்குத் தண்ணீரைத் திறந்துவிடக் கூடாது என்ற அடாவடித்தனமான முடிவோடு அது செயல்படுவதையும் நிரூபிக்கின்றன.

கர்நாடகா அரசு தமிழகத்திற்கு ஆண்டுதோறும் 192 டி.எம்.சி. தண்ணீரை காவிரியில் திறந்துவிட வேண்டும் என்ற நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளிவந்து எட்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இத்தீர்ப்பை கர்நாடகா அரசு ஒருநாளும் மதித்து நடந்து கொண்டதேயில்லை. இத்தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறு நிர்பந்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பில் உள்ள மைய அரசோ இந்த விசயத்தில் கர்நாடகாவின் கூட்டாளியாகவே செயல்பட்டு வருகிறது. இதோடு, நடுவர் மன்றத் தீர்ப்பின்படி காவிரி மேலாண்மை வாரியம், காவிரி ஒழுங்குமுறை குழு அமைப்பதைத் திட்டமிட்டே புறக்கணித்து வருகிறது. காவிரியில் புதிய அணைகளைக் கட்டத் திட்டமிட்டுள்ள கர்நாடகாவின் முயற்சிகளைத் தடுப்பது போல நடிக்கிறது. கர்நாடக மாநிலத்திலும், மத்தியிலும் காங்கிரசு ஆட்சி நடந்தாலும் சரி, பா.ஜ.க. ஆட்சி நடந்தாலும் சரி தமிழக விவசாயிகளை வஞ்சிப்பதில் இவ்விரண்டு கட்சிகளும் ஒற்றுமையாகவே நடந்து வருகின்றன.

நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புக்கு இணையானது. ஹெல்மெட் அணிவது தொடர்பான தீர்ப்பை விமர்சித்த வழக்குரைஞர்கள் மீது நீதி மன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்து, அவர்களின் கவுனைக் கழட்ட வைக்கும் நீதிமன்றங்கள், நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை கழிப்பறை காகிதம் போல கசக்கிப் போட்ட கர்நாடகா அரசின், மைய அரசின் அடாவடித்தனத்தைக் கேள்விக்குள்ளாக்க மறுக்கின்றன. ஒரு சட்டத்தின் தகுதியைப் பெற்றுள்ள நடுவர் மன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப் படுத்தும் பொறுப்பிலுள்ள கர்நாடகா மாநில அரசு, மைய அரசு, நீதிமன்றங்கள் அனைத்தும் அதனை நடைமுறைப் படுத்த மறுக்கும் எதிர்நிலையை எடுத்துள்ள அயோக்கியத் தனத்தைத் தமிழகம் எதிர்கொண்டு நிற்கிறது.

குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் விளைந்த பூமியில் இன்று ஒரு போகம், டெல்டா விவசாயிகளின் உயிர் நாடியான சம்பா பயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ள நிலைமைக்குத் தமிழகம் தள்ளப்பட்டுவிட்டது. ஒருபுறம் பாரம்பரிய பெருமை கொண்ட விவசாயத்திற்கு கர்நாடகா அரசு வேட்டு வைக்கிறதென்றால், இன்னொருபுறமோ டெல்டா மாவட்டங்களில் மீத்தேன், ஷேல் மீத்தேன் எடுக்கும் திட்டங்களைக் கொண்டுவந்து தமிழகத்தின் நெற்களஞ்சியத்தைச் சுடுகாட்ட முயலுகிறது, மைய அரசு. ஆற்று மணல், தாதுமணல், கிரானைட் கொள்ளைகள் ஏற்படுத்தியிருக்கும் அழிவைவிடப் பன்மடங்கு பேரழிவைக் கொண்ட திட்டமிது. இந்த இரட்டை தாக்குதலை எதிர்த்து டெல்டா விவசாயிகள் போராடி வருகிறார்கள். ஒட்டுமொத்த தமிழகமும் ஈட்டி முனையாக எழுந்து நிற்பது எப்போது? ●